# புதுமுறை
# இந்து தேச சரித்திரம்

## இரண்டாம் புத்தகம்

(நான்காம் வகுப்பு)

... PUBLIC LIB...
7 - MAY 1956
MADRAS

என். வி. வேங்கடராமன்
எழுதியதை
வித்வான் எஸ். முத்து அய்யங்கார்
பி.ஏ. (ஹானர்ஸ்) எல்.டி.
முழுதும் மாற்றி திருத்தியமைத்தது

அம்பிகா பிரதர்ஸ்
மயிலாப்பூர் : : சென்னை

பதிப்புரிமை]

[விலை ரூ. 0–6–6

முதல் திருத்திய பதிப்பு—1954

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS


Kabeer Printing Works, Madras (2641)

7 - MAY 195
MADRAS

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது தாய் நாடு | 1 |
| 2. | மகா அலெக்சாந்தர் | 5 |
| 3. | அசோகர் | 8 |
| 4. | ஏசுநாதர் | 12 |
| 5. | கி. மு., கி. பி. | 14 |
| 6. | விக்ரமாதித்தர் | 16 |
| 7. | ஹர்ஷவர்த்தனர் | 18 |
| 8. | முகம்மது நபி | 21 |
| 9. | பல்லவரும் மகாபலிபுரமும் | 24 |
| 10. | இராஜபுத்திரர் | 28 |
| 11. | கஜினி மாமூத் | 31 |
| 12. | கிருஷ்ணதேவராயர் | 33 |
| 13. | அக்பர் | 36 |
| 14. | தாஜ்மஹால் | 39 |
| 15. | ராபர்ட் கிளைவ் | 42 |
| 16. | விக்டோரியா மகாராணியார் | 45 |
| 17. | சுதந்திர இந்தியா | 48 |
| 18. | தல சரித்திரக் குறிப்புக்கள் | |
| | 1. இராணி மங்கம்மாள் | 50 |
| | 2. ஜயசிங்கு | 52 |
| | 3. மனுநீதிச் சோழன் | 55 |
| | 4. சென்னை நகரின் வரலாறு | 58 |

7 - MAY 1956



இந்தியா
இயற்கையமைப்பு
ஆப்கானிஸ்தானம்
திபெத்
ஜீலம்
ராவி நதி
சட்லஜ் நதி
சிந்து நதி
சிந்து சமவெளி
தார் பாலைவனம்
அரவல்லிமலை
டில்லி
இமய மலைகள்
பிரம்மபுத்திரா நதி
கங்கை நதி
கங்கை சமவெளி
மத்திய இந்திய பீடபூமி
விந்திய மலை
நர்மதை நதி
தபதி நதி
கல்கத்தா
கராச்சி
கோதாவரி நதி
கிருஷ்ணா நதி
பம்பாய்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
சென்னை
இலங்கை
கொழும்பு
இந்து மகா சமுத்திரம்
மலை
பீடபூமி
சமவெளி
வ
மைல்கள்
0 100 200 300

7 - MAY 1956

# இரண்டாம் புத்தகம்

## (நான்காம் வகுப்பு)

## 1. நமது தாய் நாடு

நாம் இந்தியா தேசத்தில் வசிக்கிறோம். இது ஆசியாவின் தென்பாகத்தில் உள்ளது. பண்டைக் காலத்திலேயே இந்தியாவில் வாழ்ந்த மக்கள் நாகரிகம் அடைந்து சிறந்த வாழ்க்கை நடத்தினார்கள். நமது தாய் நாட்டைபற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா ?

நெடுங் காலத்துக்குமுன் இந்தியாவைப் **பரதன்** என்ற ஒரு அரசன் ஆட்சி செய்தான். அதனால் இது **பாரத நாடு** என்றும் வழங்கப் படுகிறது.

நமது தேசத்திற்கு இயற்கையான எல்லைகள் இருக்கின்றன. இதன் வடக்கில் உள்ளது இமயமலை ; தெற்கில் இந்து மகா சமுத்திரம் ; கிழக்கில் வங்காள விரிகுடா ; மேற்கில் அரபிக் கடல். ஆகவே, நமது நாடு மலைகளுக்கும் கடல்களுக்கும் நடுவில் அமைந்துள்ளது.

உலகத்தில் உள்ள மலைகளில் உயர்ந்தது **இமயமலை**. இதன் சிகரங்களில் எப்பொழுதும்

பனி உறைந்திருக்கும். இது, நமது நாட்டின் வடக்கில் ஒரு பெரிய மதில்போல் அமைந்து நமது நாட்டைக் காக்கின்றது. இதனால் வேறு நன்மைகளையும் நம் நாடு அடைகின்றது. இது வடக்கிலிருந்து வீசுகின்ற குளிர்காற்றைத் தடுக் கின்றது; பருவக் காற்றைத் தடுத்து மழை யைக் கொடுக்கின்றது. மேலும், பெரிய நதி களுக்குப் பிறப்பிடமாயுள்ளது.

நம் நாட்டின் நடுவில் **விந்தியமலை** இருக் கின்றது. இது இந்தியாவை இரண்டு பாகங் களாகப் பிரிக்கின்றது. வடக்கில் உள்ள பகுதிக்கு வட இந்தியா அல்லது **இந்து ஸ்தானம்** என்று பெயர். தென் பகுதிக்குத் தென் இந்தியா அல்லது **தக்ஷிணம்** என்று பெயர்.

வட இந்தியாவில் பாயும் **கங்கையும் சிந்துவும்** பெரிய நதிகள். **கோதாவரி, கிருஷ்ணை, காவிரி** முதலியவை தென் இந்தி யாவில் உள்ள நதிகளுள் முக்கியமானவை. இவைகளைப் படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்நதிகள் மலைகளிலிருந்து கரைத்துக்கொண்டு வரும் வண்டல் மண் மிகவும் உரம் வாய்ந்தது. ஆகவே, இந்த நதிச் சமவெளிகளும் கழிமுகங்களும் செழிப்பு உள் ளவை.

மேற்குத் தொடர்ச்சி மலையாலும் கிழக்குத்

தொடர்ச்சி மலையாலும் பிரிக்கப்படும் கடற்கரைச் சமவெளிகளில் வாழும் ஜனங்கள் வெளி நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்துள்ளனர். தென் இந்தியாவை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் கப்பற் படைகளை வைத்துக் கடற்கரையைக் காப்பாற்றி வந்தனர்.

மலைப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் தேக வலிமையும், மனோ தைரியமும் உடையவர்கள். நேபாளத்திலுள்ள கூர்க்கர்களின் போர்த் திறமை உலகம் அறிந்த விஷயம். அரவல்லிக் குன்றை அடுத்துள்ள நாடுகளில் வசித்து வரும் இராஜபுத்திர வீரர்களும் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்துள்ள பிரதேசத்தில் வசிக்கும் மகாராஷ்டிரர்களும் வீரம் மிகுந்தவர்கள்.

நமது நாடு நீர்வளமும் நிலவளமும் பொருந்தியுள்ளது. இங்கே பல தானியங்கள் நன்கு விளைகின்றன. அவற்றுள் நெல்லும் கோதுமையும் முக்கியமானவை. மலைகளில் மரங்கள் அடர்ந்த காடுகள் உள்ளன. உலோகப் பொருள்களும் நம் நாட்டில் கிடைக்கின்றன. ஆதலால், இது செல்வம் நிறைந்த நாடு.

இந்தியாவில் பலவகை மக்கள் வசிக்கின்றனர். அவர்களுள் இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் முக்கியமானவர்கள்.

இவர்கள் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த வர்கள். மதப் பிரிவுகள் எத்தனை இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்; எல்லோரும் பாரத மாதாவின் குழந்தைகள். ஆதலால் நாம் யாவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுவது அவசியம்.

நம்மைப் பெற்று வளர்த்த தாயிடத்தில் நாம் அன்பாய் இருப்போம். அதுபோல் நாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டை மறக்கலாகாது. இப்போது நம் நாடு சுதந்திரம் பெற்றுள்ளது. அதற்கு முக்கிய காரணம் மகாத்மா காந்தி அடிகள் போன்ற பெரியார்கள் சுயநலம் கருதாது நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டதே ஆகும். நாமும் நம் நாட்டு மக்களின் நன்மைக் காகப் பாடுபடவேண்டும்.

### கேள்விகள்

1. நமது நாட்டிற்கு ஏன் பாரத நாடு என்று பெயர் வந்தது?
2. இந்தியாவில் பாயும் மூன்று முக்கிய நதிகளைக் கூறு.
3. நம் நாட்டின் எல்லைகள் எவை?
4. இந்தியாவில் விளையும் தானியங்களுள் முக்கிய மானவை எவை?

# 2. மகா அலெக்சாந்தர்

முற்காலத்தில் நமது நாடு செல்வமும் பெருமையும் நிறைந்திருந்தது. அதைக் கண்டு அயல் நாட்டினர் பலர் நமது தேசத்தின் மீது படையெடுத்து வந்தனர். அப்படி வந்தவர்களுள் **அலெக்சாந்தர்** ஒருவர். அவர் ஐரோப்பாவிலுள்ள **கிரீஸ்** தேசத்து அரசர்; பெரிய வீரர். கிரீஸ் தேசத்து மக்களுக்கு **கிரேக்கர்** என்று பெயர். அவர்கள் சிறந்த நாகரிகம் உடையவர்கள்.

இந்தியாவிற்கு வடமேற்கே பல மலைத் தொடர்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் பல வழிகள் உண்டு. அவைகளுக்குக் கணவாய்கள் என்று பெயர். அவற்றுள் முக்கியமானது **கைபர் கணவாய்.** தரைவழியாய் இந்தியாவுக்கு வருவதானால், இந்தக் கணவாய் வழியாகத்தான் வரவேண்டும்.



அலெக்சாந்தர்

சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன், அலெக்சாந்தர் ஒரு பெரிய

சேனையோடு இவ்வழியாய் இந்தியாவின் மீது படையெடுத்தார். அவர் படையெடுத்த பாகத்திற்கு இப்போது பஞ்சாப் என்று பெயர். அலெக்சாந்தரின் போர் வீரர்கள் மிகுந்த தைரியசாலிகள்; சண்டை செய்யும் முறைகளில் கைதேர்ந்தவர்கள். ஆகவே, பஞ்சாப் பிரதேசத்தில் ஆட்சி செய்துவந்த அரசர் பலரை அலெக்சாந்தர் எளிதாக வென்றுவிட்டார். சிந்து நதிக்கும், ஜீலம் நதிக்கும் இடையிலுள்ள இராஜ்யத்தை **அம்பி** என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவருடைய இராஜ்யத்தின் தலைநகரம் **தக்ஷசீலம்**. அது கல்வியிலும் செல்வத்திலும் சிறப்பு மிகுந்த நகரம். அதன் அரசரான அம்பி அலெக்சாந்தரை ஆவலுடன் வரவேற்று அவருக்குக் கீழ்ப்படிந்தார்.

**புருஷோத்தமர்** என்ற அரசர் மாத்திரம் அலெக்சாந்தருக்குக் கீழ்ப்படியவில்லை. அயல் தேசத்தவருக்கு அடங்கி நடக்க அவருக்கு விருப்பம் இல்லை. ஆதலால், அவர் அலெக்சாந்தரை இந்தியாவைவிட்டுத் துரத்த எண்ணினர்; ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு அவரை எதிர்த்தார். இருவருக்கும் ஜீலம் நதிக்கரையில் ஒரு பெரும்போர் நடந்தது. புருஷோத்தமர் மிக்க தைரியத்துடன் சண்டை செய்தார்.

கடைசியில் அலெச்சாந்தரே வெற்றி

பெற்றார்; ஆயினும் அவர் புருஷோத்தமரது வீரத்தைப் புகழ்ந்தார்; அவரை கௌரவமாக நடத்தினார்; அவரது நாட்டை அவருக்கே கொடுத்துவிட்டார். இதன் பிறகு கிரேக்க வீரர்கள் தம் நாட்டுக்குச் செல்ல விரும்பினார்கள். ஆகவே அலெக்சாந்தர் கிரீஸுக்குத் திரும்பிச் சென்றார். வழியில் பாபிலோன் என்ற ஊரில் அவர் மரணமடைந்தார்.

ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள தூரம் ஆயிரக்கணக்கான மைல். ஆயினும், அலெக்சாந்தர் ஒரு பெருஞ் சேனையுடன் இங்கு வந்து பல நாடுகளை ஜயித்தது ஆச்சரியம் அல்லவா? அவர் தோல்வியே அடைந்ததில்லை. ஆதலால் அவர் **மகா அலெக்சாந்தர்** என்று பெயர் பெற்றார்.

அலெக்சாந்தருடைய படையெடுப்புக்குப் பிறகு இந்தியரைப் பற்றி கிரேக்கரும், கிரேக்கரைப் பற்றி இந்தியரும் தெரிந்து கொண்டார்கள். ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரத் தொடர்பு ஏற்பட்டது.

### கேள்விகள்

1. இந்தியாவின்மீது படையெடுத்த கிரேக்க மன்னரின் பெயர் என்ன?
2. அலெக்சாந்தர் ஏன் இந்தியாவுக்கு வந்தார்?
3. ஜீலம் நதிக்கரையில் யார் யாருக்குச் சண்டை நடந்தது? சண்டையின் முடிவு என்ன?

4. புருஷோத்தமரின் வீரத்தை மெச்சி, அலெக் சாந்தர் என்ன செய்தார்?

5. அலெக்சாந்தரின் படையெடுப்பினுல் ஏற்பட்ட நன்மை என்ன?


## 3. அசோகர்

முற்காலத்தில் வட இந்தியாவில் **மகதம்** என்ற பெரிய ராஜ்யம் ஒன்று இருந்தது. **பாடலிபுரம்** அதற்குத் தலைநகரம். முதல் முதல் அதை நந்த வம்சத்து அரசர்கள் ஆண்டு வந்தனர். பிறகு **சந்திரகுப்தர்** என்னும் வீரர் அதைக் கைப்பற்றிக் கீர்த்தி யுடன் ஆண்டு வந்தார். அவர் தாயின் பெயர் **மூரா.** ஆதலால், அவரை **மௌரிய சந்திர குப்தர்** என்று கூறுவது வழக்கம். சந்திர குப்தருக்குப் பிறகு அவர் குமாரர் **பிந்துசாரர்** அரசராஞர். அவருக்குப் பின் அவர் மைந்தர் **அசோகர்** சிம்மாசனம் ஏறிஞர்.

இந்தியாவை ஆண்ட அரசர்களுள் அசோகர் மிக்க புகழ் பெற்றவர். அவர் பட் டத்துக்கு வந்த பொழுது இந்தியாவில் பெரும் பகுதி அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது; எனினும் அவர் மேலும் பல நாடுகளை வென்று தம் ராஜ்யத்தைப் பெரிதாக்க விரும்பிஞர். முதல்முதல் அவர் கலிங்கநாட்டரசனேடு போர்

செய்தார். சண்டை மும்முரமாக நடந்தது. இரத்த வெள்ளம் ஆருகப் பெருகி ஓடிற்று. முடிவில் அசோகர் வெற்றியடைந்தார்.

ஆயினும் கலிங்கப் போருக்குப் பிறகு அவர் மனம் மாறிவிட்டது. சண்டையில்



அசோகர் நாட்டிய கல்தூண் ஒன்றின் உச்சிப்பகுதி—மூன்று சிங்கங்களும் அசோக சக்கரமும்.

ஆயிரக் கணக்கான ஜனங்கள் இறப்பதைக் கண்டு சகியாமல் சண்டையை வெறுத்தார். பலத்தாலும் அதிகாரத்தாலும் மக்களை அடக்கி ஆளுவதில் பயனில்லை; நற்காரியங்களைச்

செய்து குடிகளின் அன்பைப் பெற்று ஆளும் ஆட்சியே சிறந்தது என்பதை அவர் உணர்ந் தார். அதற்குப் பிறகு அவர் சண்டையே செய்யவில்லை. அதுமுதல் அவர் அன்பின் பெருமையை எடுத்துரைக்கும் பௌத்த மதத் தைத் தழுவினர். தேச நலத்தில் ஈடுபட்டு, அதற்காகப் பெரிதும் பாடுபட்டார்.

முதலில் அவர், தாம் வேட்டையாடு வதைக் கைவிட்டார்; மாமிசம் புசிப்பதையும் நிறுத்தி விட்டார். தமது குடிகளும் அவ்வாறே இருக்க் வேண்டும் என்று உத்தரவு செய் தார்.

போக்கு வரவு சௌகரியத்திற்காக அவர் தேசம் எங்கும் சாலைகளை அமைத்தார்; அவற் றின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்த் தார். அங்கங்கே சத்திரங்களையும் சாவடிகளை யும் கட்டி வைத்தார். ஏரிகளையும் குளங்களை யும் வெட்டினர். இவையன்றி, மனிதருக்கும் மிருகங்களுக்கும் இலவச வைத்திய சாலை களைக் கட்டுவித்தார். சிறுவர் கல்வி கற்கப் பல பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினர். கற் பாறைகளிலும், கல் தூண்களிலும் ஜனங் கள் கடைப்பிடிக்கத் தக்க அறிவுரைகளைச் செதுக்கி வைத்தார். இன்னும் அவர் செய்த நன்மைகள் பல. ஆகையால் அவரைக் குடி கள் பெரிதும் போற்றி வந்தனர். அவரைப்

போன்ற சிறந்த அரசர் அவருக்கு முன்னும் இல்லை ; பின்னும் இல்லை.

அசோகர் நாட்டிய கல் தூண்களின் உச்சியில் மூன்று சிங்கங்களும் சக்கரங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவையே அசோகருடைய சின்னங்கள். இவையே இப்பொழுது நமது அரசாங்கத்தின் சின்னங்களாயுள்ளன. நமது நாட்டுக் கொடியில் அசோக சக்கரம் அமைக்கப்பட்டுள்ளது.

**கேள்விகள்**

1. மகத ராஜ்யத்தை முதல் முதல் எந்த வம்சத்து அரசர்கள் ஆண்டு வந்தனர்? பிறகு அதைக் கைப் பற்றியவர் யார் ?
2. சந்திரகுப்தருக்கு, 'மௌரிய சந்திரகுப்தர்' என்ற பெயர் ஏன் ஏற்பட்டது ?
3. சந்திரகுப்தருடைய பேரர் யார்?
4. அசோகர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை ?
5. அசோகர் போர் செய்வதை ஏன் கைவிட்டார் ?
6. நமது நாட்டுக் கொடியிலுள்ள சக்கரத்தின் விசேஷம் என்ன ?

## 4. ஏசுநாதர்

இந்தியாவிற்கு மேற்கே **பாலஸ்தீனம்** என்ற ஒரு நாடு உண்டு. அங்கே யூதர்கள் என்ற சாதியார் வசித்து வந்தனர். அவர்களுள் **ஏசுநாதர்** ஒருவர். அவர் ஒரு பெரிய அவதார புருஷர். அவரைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

ஏசுநாதர், சுமார் 2,000 வருஷங்களுக்கு முன் **மேரியம்மையார்** என்பவருக்கு மகனுக அவதரித்தார்.

சிறுவயதிலேயே ஏசுநாதர் சிறந்த புத்தி சாலியாக விளங்கினுர். புத்தரைப்போல், அவரிடம் அன்பும் பிரியமும் நிறைந்திருந்தன. அவர் தெய்வத் தன்மை வாய்ந்தவர். ஒரு சமயம் அவர் இரு குருடர்களுக்குக் கண் தெரியும்படி செய்தார்; மற்ளுெரு சமயம் ஓர் ஊமையைப் பேசுவித்தார். இப்படி அவர் செய்த அற்புதங்கள் பல.

வெகு விரைவில் அவரது புகழ் நாடெங்கும் பரவியது. அவர் மக்களுக்கு நல்ல வழிகளைப் போதித்தார். 'கடவுள் அன்பு மயம். அவரே எல்லா உயிர்களையும் படைத்துள்ளார். அனைவருக்கும் அவரே பிதா. ஆதலால், நாம் எல்லோரும் சகோதரர்கள். ஒருவருக்கொருவர் நேசமாயிருந்து நற்காரியங்களைச் செய்ய

வேண்டும்’ என்பனவே அவர் போதித்த முக்கிய உண்மைகள்.

ஏசுநாதருடைய விரோதிகள், அவர் ஒரு புரட்சிக்காரரர் என்று அந்நாட்டு அரசனிடம் குற்றம் சாட்டினார்கள். அரசன் ஏசுவைச் சிலுவையில் அறைந்து கொல்ல உத்தரவிட்டான். அவர் அவ்வாறே கொல்லப்பட்டார்.

ஏசுவின் போதனைகளைக் கேட்டு, பலரும் அவற்றின்படி நடந்து வந்தனர். அவர்கள் **கிறிஸ்தவர்** எனப் பெயர் பெற்றனர். கிறிஸ்தவ குருமார்கள் அங்கங்கே சென்று கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்தனர். அம்மதம், இப்போது உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவியிருக்கிறது.

### கேள்விகள்

1. ஏசுநாதர் எங்கே பிறந்தார்?
2. ஏசுநாதர் ஸ்தாபித்த மதம் என்ன?
3. கிறிஸ்தவ மதக் கொள்கைகள் யாவை?

## 5. கி. மு., கி. பி.

நாம் வருஷங்களை ஏதாவது ஒரு முக்கியமான சம்பவத்திலிருந்து ஆரம்பித்துக் கணக்கிடுகிறோம். இவ்வாறு வருஷங்களைக் கணக்கிடுவதற்கு **சகாப்தம்** என்று பெயர்.

உலகத்தில் பல்வேறு இனமக்களும் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் வசித்து வருகின்றனர். அவர்களுக்குத் தனித்தனி சகாப்தங்கள் இருந்து வருகின்றன. ஆனாலும், இப்போது உலகத்தில் முக்கியமாக **கிறிஸ்தவ சகாப்தமே** பெரும்பாலும் வழங்கி வருகிறது. கிறிஸ்தவ சகாப்தம், ஏசு கிறிஸ்து பிறந்தது முதல் ஆரம்பிக்கின்றது.

சரித்திரப் புத்தகங்களில் கி. மு., கி. பி. என்ற பதங்கள் அடிக்கடி வருவதை நீங்கள் கவனித்திருக்கலாம். அவற்றின் பொருள் என்ன? கி. மு. என்பது கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு முன் என்றும், கி. பி. என்பது கிறிஸ்து நாதரின் பிறப்பிற்குப் பின் என்றும் பொருள் படும்.

இப்போது கி. பி. 1954-ஆம் வருஷம் நடந்து வருகின்றது. இதிலிருந்து, கிறிஸ்து பிறந்து 1953 வருஷங்கள் கழிந்துவிட்டன என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இது போலவே கி. மு. 720 என்றால், கிறிஸ்து பிறப்

பதற்கு 720 வருஷங்களுக்கு முன் என்று கொள்ள வேண்டும்.

நூறு வருஷங்கள் கொண்டது **நூற்றுண்டு.** இப்போது நடைபெற்று வருவது 1954-ஆம் வருஷம். ஆதலால் கிறிஸ்து பிறந்து 19 நூற்றுண்டுகள் சென்று விட்டன. இது 20-ஆவது நூற்றுண்டு. கி. மு. 850-ஆம் வருஷம் என்றுல், கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஒன்பதாம் நூற்றுண்டு என்று கொள்ள வேண்டும்.

கி. மு. வில் உள்ள வருஷங்கள் குறைந்து கொண்டே வந்து கடைசியில் கிறிஸ்து பிறந்த் வருஷத்தில் முடிகின்றன. கி. பி. யில் உள்ள வருஷங்கள் கிறிஸ்து பிறந்ததிலிருந்து ஆரம்பித்து அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றன. நீங்கள் இதை நன்றுகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### கேள்விகள்

1. கி. மு. என்றுல் என்ன ?
2. கி. பி. என்றுல் என்ன ?
3. இப்போது கி. பி. எந்த வருஷம் நடைபெறுகிறது? இது எத்தனையாவது நூற்றுண்டு?

## 6. விக்ரமாதித்தர்

அசோகருக்குப் பின், அவரது பெரிய ராஜ்யம் சிதறிப் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்துவிட்டது. நெடுங்காலம் வரை, வட இந்தியா முழுவதையும் அடக்கி ஆளும் பெரிய அரசர் எவரும் இல்லை. கடைசியில், **சந்திரகுப்தர்** என்ற ஒரு பெரிய அரசர் தோன்றி, வடஇந்தியாவில் ஒரு புதிய சாம் ராஜ்யத்தை ஏற்படுத்தினர். அசோகருடைய பாட்டனர் வேறு, இவர் வேறு.

இந்தச் சந்திரகுப்தர் ஏற்படுத்திய சாம் ராஜ்யத்துக்குக் **குப்த ராஜ்யம்** என்று பெயர். அதை அவர் சுமார் பத்து வருஷம் கீர்த்தி யுடன் ஆண்டார். அவருக்குப் பின் அவர் பிள்ளை **சமுத்திர குப்தர்** அரசரானர். இவர் குப்த ராஜ்யத்தைப் பெரிதாக்கினர். அவருக் குப் பிறகு அவர் மைந்தர் **இரண்டாம் சந்திர குப்தர்** என்ற **விக்ரமாதித்தர்** அரசாண்டார்.

விக்ரமாதித்தர் குப்த அரசர்களுள் மிக்க கீர்த்தி வாய்ந்தவர். அரசர்க்குரிய குணங்கள் அனைத்தும் அவரிடம் இருந்தன. அவர் நீதி மான்; மிகுந்த புத்திசாலி; நிரம்பப் படித் தவர்; சிறந்த போர் வீரர்; கருணை நிரம்பி யவர்.

அவர் பல நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்

யத்தோடு சேர்த்துக் கொண்டார். அவர் **சாகர்** என்னும் ஒருவகை மூர்க்க சாதியாரை வென்று **சாகாரி** என்ற பெயரைப் பெற்றார்.

அவர் மாறுவேடம் பூண்டு குடிகளின் குறைகளைத் தெரிந்துகொள்வார் ; அதன்பின், அவற்றை நீக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய் வார். அவர் ஆட்சியில் குப்த ராஜ்யம், புகழ் பெற்றுச் சிறந்து விளங்கிற்று. நாடெங்கும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டன. ஏழை களுக்கு அன்ன சத்திரங்களும், தர்ம வைத்தியசாலைகளும் இருந்து வந்தன. பள் ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன. குடிகள் குறை வின்றி வாழ்ந்து வந்தனர்.

விக்ரமாதித்தர் படித்தவர்களை அன்புடன் ஆதரித்தார். அவர் சபையில் பல வித்வான் கள் இருந்து வந்தனர். அவர்களுள் ஒன்பது பேர் மிக்க புகழ் பெற்றவர். அவர்கள் **நவரத் னங்கள்** என்ற பெயரால் அழைக்கப்பட்ட னர். அந்த ஒன்பது பேருக்குள் சிறந்தவர் **காளிதாசர்**. அவர் ஒரு பெரிய சம்ஸ்கிருதப் புலவர். அவர் சம்ஸ்கிருதத்தில் பல அரிய நூல்களை எழுதி இருக்கிறார். அவற்றுள் **சாகுந்தலம்** என்னும் நாடகமும், **ரகுவம்சம்** என்னும் காவியமும் சிறந்தவை.

விக்ரமாதித்தர் காலத்தில் சீன தேசத்தி லிருந்து இந்தியாவுக்கு ஒரு யாத்திரிகர் வந்

தார். அவர் பெயர் **பாஹியான்.** அவர் விக்ர மாதித்தரின் ஆட்சியைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து எழுதியிருக்கிருர்.

**கேள்விகள்**

1. குப்த ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. குப்த மன்னருள் மிகவும் புகழ் பெற்றவர் எவர்?
3. விக்ரமாதித்தருக்கு மற்ருெரு பெயர் என்ன?
4. விக்ரமாதித்தர் குடிகளுக்குச் செய்த நன்மைகள் எவை?
5. விக்ரமாதித்தர் சபையில் இருந்த வித்வான்களுள் முக்கியமானவர் யார்?
6. விக்ரமாதித்தர் எழுதிய நூல்களுள் இரண்டைக் கூறு.

## 7. ஹர்ஷ வர்த்தனர்

விக்ரமாதித்தருக்குப் பின் வந்த குப்த அரசர்கள் ஆளும் திறமை இல்லாதவர்கள். ஆதலால், நாட்டில் நெடுநாள்வரை குழப்பமும் கலகமும் இருந்து வந்தன. கடைசியில் கி. பி. ஏழாவது நூற்ருண்டின் ஆரம்பத்தில், வட இந்தியாவில் ஒரு பெரிய அரசர் தோன்றி அமைதியை ஏற்படுத்திஞர். அவர் பெயர் **ஹர்ஷ வர்த்தனர்.**

ஹர்ஷர் பட்டத்துக்கு வந்தபோது, தானேசுவரமும் அதைச் சுற்றியுள்ள பகுதி

யுமே அவர் ஆஞ்ஞையிலிருந்தன. அவர் பல நாடுகளை வென்று, எங்கும் ஜயக்கொடி நாட்ட விரும்பினார்.

முதன்முதல், அவர் மாளவ மன்னனோடு சண்டை செய்து, அவன் நாட்டைப் பிடித்துக் கொண்டார்; பிறகு வங்காளத்தின் மீது படையெடுத்துச் சென்று, அதையும் ஜயித்தார்; இவ்வாறு ஆறு வருஷங்களுக்குள் வட இந்தியா முழுவதையும் தம் வசப்படுத்திக் கொண்டார்.

அவரது ராஜ்யம், வடக்கே இமய மலையிலிருந்து தெற்கே நருமதையாறு வரை பரவியிருந்தது. அந்தப் பெரிய ராஜ்யத்திற்குத் **தானேசுவரம்** தலைநகராக விளங்கி வந்தது.

அதன்பின், அவர் தக்ஷிணத்தையும் ஜயிக்க ஆவல் கொண்டார். ஆனால், அந்த எண்ணம் பலிக்கவில்லை; ஏனெனில், அதை ஆண்டுவந்த **புலிகேசி** என்பவன் அவரைப் போரில் தோற்கடித்து விட்டான்.

இந்திய சரித்திரத்தில் புகழ் பெற்ற அரசருள் ஹர்ஷர் ஒருவர். அவர் சிறிது நேரங்கூட வீண் பொழுது போக்கியதில்லை; நாட்டு நன்மைக்கே பெரிதும் பாடுபட்டு வந்தார்.

ஹர்ஷர் சிறந்த கல்விமான்; ஆதலால் படித்தவர்களை அன்புடன் ஆதரித்து வந்தார். அவர் சம்ஸ்கிருதத்தில் பல அரிய நூல்களை

எழுதியிருக்கிருர். அவற்றுள் **ரத்ஞவளி** என்னும் நாடகம் மிகவும் சிறந்தது.

அவர் சபையில் பல பெரிய வித்வான்கள் இருந்துவந்தனர். அவர்களுள் **பாணர்** என்பவர் முக்கியமானவர். அவர் **ஹர்ஷ சரிதம்** என்ற ஒரு நூலை எழுதியிருக்கிருர். அதிலிருந்து நாம் ஹர்ஷரைப்பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

தமது குடிகள் கல்வியில் தேர்ச்சி பெற அவர் நாடெங்கும் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திஞர். அவர் காலத்தில் **நாளந்தா, தக்ஷசீலம், காசி** முதலிய இடங்களில் பெரிய சர்வ கலாசாலைகள் இருந்துவந்தன. அவைகளில் ஆயிரக்கணக்கான மாணவர் படித்து வந்தனர்.

ஹர்ஷர் காலத்தில் **யுவான்சுவாங்** என்ற சீன யாத்திரிகர் நம் நாட்டுக்கு வந்தார். அவர் இங்கே பல ஆண்டுகள் தங்கி பௌத்த மத நூல்களைக் கற்ருர். அவர் ஹர்ஷரது ஆட்சியைப்பற்றியும் அக்கால மக்களைப்பற்றியும் விவரமாக எழுதிவைத்துள்ளார். ஹர்ஷர் அவரைத் தம் சபையில் வரவேற்றுக் கௌரவித்தார்.

ஹர்ஷர் பல விஷயங்களில் அசோக மன்னரை ஒத்திருந்தார். அவர் பௌத்த மதத்தைப் பின்பற்றி, அதன்படி நடந்து வந்தார்.

அவர் தாம் வேட்டையாடுவதை முதலில் நிறுத்திஞர்; பிராணி வதை கூடாது என்று உத்தரவிட்டார்; சாலைகளையும் சோலைகளையும் அமைத்தார்; ஏழைகளுக்கு அன்னம் ஆடைகள் அளித்தார். குடிகள் யாவரும் அவரது ஆட்சியைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடிஞர்கள்.

**கேள்விகள்**

1. ஹர்ஷரது ராஜ்யம் எதிலிருந்து எதுவரை பரவியிருந்தது? அதன் தலைநகரம் எது?
2. ஹர்ஷரால் ஏன் தக்ஷிணத்தை வெல்ல முடியவில்லை?
3. ஹர்ஷர் எவ்விஷயங்களில் அசோகரை ஒத்திருந்தார்?
4. ஹர்ஷர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் யாவை?
5. பாணர் என்பவர் யார்? அவர் எழுதின நூல் யாது? அதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்ளலாம்?

## 8. முகம்மது நபி

இந்தியாவுக்கு மேற்கே **அரேபியா** என்று ஒரு தேசம் இருக்கிறது. அங்கே **மக்கா** என்னும் நகரத்தில் **முகம்மது** என்ற பெரியார் ஒருவர் வசித்து வந்தார். அவர் ஏழை; சிறு வயதிலேயே அவர் தம் பெற்ருேரை இழந்துவிட்டார். ஆதலால், அவர் ஆடுமாடுகளையும்

ஒட்டகங்களையும் மேய்த்து ஜீவனம் செய்து வந்தார்.

தக்க வயது வந்ததும், அவர் ஒரு சீமாட்டியிடம் வேலையில் அமர்ந்தார். அவள், அவரது நற்குண நல்லொழுக்கங்களைக் கண்டு, அவரையே மணம் செய்துகொண்டாள்.

முகம்மது தெய்வபக்தி உள்ளவர். எப்பொழுதும் அவர் கடவுளைத் தியானம் செய்தவாறே இருப்பார். அராபியர் அடிக்கடி ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு வந்தனர். அதைக் கண்டு, அவர் மனம் நொந்தார்; எப்படியாவது அவர்களைத் திருத்தி, நல்வழிக்குக் கொண்டுவர எண்ணினர்.

ஒரு சமயம் அவர் தியானத்தில் இருந்தார். அப்போது அவருக்குச் சில உண்மைகள் புலப்பட்டன. "கடவுள் ஒருவரே. அவருக்கு உருவம் இல்லை. உருவம் அமைத்து அவரை வணங்குதல் தவறு. அவர் முன்னிலையில் எல்லோரும் சமம்". இவைகளே அவருக்குத் தோன்றிய உண்மைகள்.

தாம் கண்டறிந்த உண்மைகளை அவர் மக்களுக்கு எடுத்துரைத்தார். மக்காவில் உள்ள மக்கள் பலருக்கு அக்கொள்கைகள் பிடிக்கவில்லை. அதனல் அவர்கள் முகம்மதுவைக் கொல்ல எண்ணினர்கள். ஆதலால், முகம்மது அங்கிருந்து **மதீனவுக்கு** ஓட

நேர்ந்தது. இச் சம்பவத்துக்கு **ஹிஜிரத்** என்று பெயர்.

மதீனாவிலுள்ளவர் அவரை அன்புடன் வரவேற்றனர்; அவர் உபதேசங்களைக் கேட்டு அவற்றின்படி நடக்கலாயினர். வெகு சீக்கிரத்தில் அவரது பேரும் புகழும் எங்கும் பரவின. முகம்மதுவின் உபதேசங்கள் **இஸ்லாம்** என்ற புதிய மதமாயின; அவற்றைப் பின்பற்றுவோர் முஸ்லிம்கள் என்ற பெயர் பெற்றனர். அராபியர் பலரும் முஸ்லிம்கள் ஆயினர்.

முகம்மது கூறிய உபதேசமொழிகள் **குர் ஆன்** என்ற புத்தகத்தில் அடங்கியுள்ளன. அதுவே முஸ்லிம்களின் வேத புத்தகம். முஸ்லிம் மதம் முதலில் அரேபியாவிலும், பிறகு மற்ற நாடுகளிலும் பரவியது. இப்போது முஸ்லிம்கள் பல நாடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்துக்களுக்குப் பண்டிகைகள் இருப்பதுபோல் முஸ்லிம்களுக்கும் பண்டிகைகள் உண்டு. அவற்றுள் **மொகரம், ரம்ஸான்** முதலியவை முக்கியமானவை. அப்போது, முஸ்லிம்கள் விரதம் பூண்டு பட்டினி இருந்து கடவுளைத் தொழுவார்கள்.

**கேள்விகள்**

1. முகம்மது எங்கே பிறந்தார் ?
2. முகம்மது ஏற்படுத்திய மதத்தின் பெயர் என்ன?
3. முஸ்லிம் மதத்தின் கொள்கைகள் யாவை ?
4. ' ஹிஜிரத் ' என்றல் என்ன ?
5. முஸ்லிம்களின் பண்டிகைகள் சிலவற்றைக் கூறு.

# 9. பல்லவரும் மகாபலிபுரமும்


முற்காலத்தில் நம் நாட்டில் **பல்லவர்** என்ற ஒரு பிரிவினர் வசித்து வந்தனர். அவர்கள் தென் இந்தியாவில் ஒரு பெரிய இராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்குப் **பல்லவ ராஜ்யம்** என்று பெயர். அது, வடக்கே கிருஷ்ண நதியிலிருந்து, தெற்கே காவிரி நதிவரை பரவியிருந்தது. **காஞ்சீபுரம்** அதற்குத் தலைநகரம்.

பல்லவ அரசருள் மிகச்சிறந்தவர் **நரசிம்ம வர்மர்**. அவர் மல் யுத்தத்தில் இணையில்லாதவர். ஆதலால் அவருக்கு '**மகாமல்லர்**' என்ற ஒரு பெயரும் வழங்கலாயிற்று.

அவர் சிறந்த போர் வீரர். அவர் பல நாடுகளை வென்று அவைகளைத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அவர் காலத்தில், தக்ஷிணத்தில் **புலிகேசி** என்ற அரசன் சாளுக்

கிய நாட்டை ஆண்டு வந்தான். மகாமல்லர் அவன்மீது படையெடுத்துச் சென்று அவனை வென்றார்.


நரசிம்மவர்மர் காஞ்சிக்குக் கிழக்கே கடற் கரைக்கு அருகில் ஒரு பெரிய பட்டணத்தை



கடற்கரைக் கோயில்—மகாபலிபுரம்.

ஏற்படுத்தினார். அதன் பெயர் **மகாமல்லபுரம்.** பிற்காலத்தில் அது **மகாபலிபுரம்** என்று வழங்கலாயிற்று. அவர் அங்கே பாறைகளைக் குடைந்து ஏழு கோயில்களை வெட்டுவித்தார். அதனால் அதற்கு **ஏழு கோயில் பட்டணம்** என்று ஒரு பெயர் உண்டாயிற்று.

மகாபலிபுரத்தில், கற்பாறைகளின் மீது செதுக்கப்பட்டிருக்கும் பல அழகிய உருவங்களை நாம் இன்றும் பார்க்கலாம். அவை யாவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியவை. ஓரிடத்தில் அர்ச்சுனன் தவம் செய்வது போலவும், சிவபெருமான் அவனுக்குக் காட்சி



ஒற்றக் கல் கோயில்கள்—மகாபலிபுரம்

அளிப்பது போலவும் செதுக்கப்பட்டுள்ளன. அது பார்ப்பதற்கு மிக்க அழகாக இருக்கும்.

மற்றோர் இடத்தில் ஐந்து சிறு கோயில்கள் இருக்கின்றன. அவை யாவும் தனித்தனிக் கல்லில் குடைந்து செதுக்கப்பட்டவை. அவைகளுக்கு '**பஞ்சபாண்டவர் ரதம்**' என்ற பெயர் வழங்கி வருகிறது.

இந்துக்கள் மகாபலிபுரத்தை ஒரு சிறந்த புண்ணிய ஸ்தலமாகக் கருதுகின்றனர்; சில விசேஷ நாட்களில், அங்குக் கடலாடச் செல்கின்றனர்.

பல்லவர்க்கு மகாபலிபுரம் ஒரு முக்கிய துறைமுகப் பட்டணமாக இருந்து வந்தது. ஒரு காலத்தில் அந்நகரம் புகழ்பெற்றுச் சிறந்து விளங்கியது; இப்பொழுது பாழடைந்த ஒரு சிறு கிராமமாக இருக்கிறது.

பல்லவ அரசர்கள் தெய்வபக்தி உடையவர்கள். ஆகவே, அவர்கள் நாடெங்கும் பல கோயில்களைக் கட்டியிருக்கின்றார்கள். அவர்கள் காலத்தில் பல ஆழ்வார்களும், நாயன்மார்களும் வசித்து வந்தனர். பல்லவ அரசர்கள் அவர்களைப் பரிவுடன் ஆதரித்துப் பக்தியில் ஈடுபட்டனர்.

### கேள்விகள்

1. பல்லவ ராஜ்யம் எங்கே இருந்தது?
2. பல்லவ ராஜ்யத்தைக் கீர்த்தியுடன் ஆண்ட அரசர் பெயர் என்ன?
3. மகாபலிபுரம் எங்கே இருக்கிறது? அதைத் தோற்றுவித்தவர் யார்? அங்குள்ள விசேஷம் என்ன?

# 10. இராஜபுத்திரர்

நம் நாட்டின்மீது அன்னியர் பலர் படையெடுத்தனர். அவர்களுள் சிலர் இங்கேயே தங்கி விட்டனர். அவர்கள் இந்துக்களின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு ஒரு தனிப் பிரிவாக ஆகிவிட்டனர். அவர்களே **இராஜ புத்திரர்கள்.** அவர்கள் சிந்து நதிக்கும் கங்கை நதிக்கும் இடையில் உள்ள நாட்டில் வசித்து வந்தனர். அதனால் அதற்கு **இராஜ புதனம்** என்ற பெயர் வழங்கலாயிற்று.

இராஜபுத்திரர் தங்களை **க்ஷத்திரியர்** என்று சொல்லிக் கொண்டனர். அவர்கள் மிக்க தைரியம் உள்ளவர்கள். போர் முறைகளில் கைதேர்ந்தவர்கள். சண்டைக்குச் சென்றால் வெற்றியோடு திரும்புவார்கள். இல்லாவிடில் அங்கேயே உயிர் துறப்பார்கள். எதிரிகளுக்குப் பயந்து முதுகு காட்டி ஓடுவது அவர்களிடம் இல்லை.

இராஜபுத்திர மாதர்களும் புருஷர்களைப் போல் வீரம் பொருந்தியவர்கள். கணவன் இறந்த பிறகு இராஜபுத்திர ஸ்திரீ உயிர் வாழ்வதில்லை; தானும் கணவனோடு உயிர் விடுவாள். இப்படிச் செய்வதற்கு 'உடன்கட்டை ஏறல்' அல்லது 'சதி' என்று பெயர். பகைவர் கோட்டைக்குள் புகுந்து விட்டால், பெண்கள்

தீ மூட்டி அதில் குதித்து உயிர் விடுவர். மான பங்கத்திற்கு அஞ்சியே அவர்கள் இப்படிச் செய்வது வழக்கம். சுருங்கச் சொன்னால், இராஜபுத்திரர் யாவரும், உயிரைவிட மானமே பெரிது என்று நினைத்து வந்தனர்.

இராஜபுத்திரர்கள் இந்து மதத்தைச் சேர்ந் தவர்கள். அவர்கள் சிறந்த தெய்வ பக்தி உடையவர்கள்; ஆகவே, பல கோயில்களைக் கட்டியிருக்கின்றார்கள்.

இவ்வளவு சிறந்த குணங்கள் நிரம்பி யிருந்தும், அவர்களிடம் ஒரு பெருங்குறை இருந்துவந்தது. அவர்களுக்குள் ஒற்றுமையே இல்லை. ஒருவர்மீது ஒருவர் பொறாமை கொண்டு அடிக்கடி சண்டை யிட்டுவந்தனர். அதனால்தான், அயல் நாடுகளிலிருந்து படை யெடுத்து வந்த முஸ்லிம்கள் அவர்களை எதிர்த்து, எளிதில் தோற்கடித்து விட்டனர்; அவர்கள் இராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டனர்.

முற்காலத்தில் வட இந்தியாவில் பல இராஜபுத்திர ராஜ்யங்கள் இருந்தன. அவற் றுள் டில்லி, கன்னோசி முதலியன சில.

இராஜபுத்திரர்களின் சரித்திரத்தினால், சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்னும் நீதியை நாம் அறிந்து கொள்ளலாம்.

## கேள்விகள்

1. இராஜபுத்திரர்கள் யார்? அவர்கள் வசித்து வந்த நாட்டின் பெயர் என்ன?

2. இராஜபுத்திரரின் குணாதிசயங்களைப் பற்றிக் கூறு.

3. உடன்கட்டை ஏறல் என்றால் என்ன? அது யாருடைய வழக்கம்?

4. இராஜபுத்திரரிடம் இருந்து வந்த ஒரு பெருங் குறை யாது? அதனால் நேர்ந்த கேடு என்ன?

# 11. கஜினி மாமூத்

இந்தியாவின் வடமேற்கே ஆப்கானிஸ்தானம் இருக்கிறது. முன்னொரு காலத்தில் **கஜினி** அதன் தலைநகராய் இருந்தது. அந் நாட்டை முஸ்லிம் அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களுள் மாமூத் என்பவர் முக்கியமானவர். அவர் அதைச் சுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன் ஆண்டு வந்தார்.

இந்தியா செல்வம் நிறைந்த நாடு என்பதை அவர் அடிக்கடி கேள்விப்பட்டிருந்தார். இந்தச் செல்வத்தில் ஒரு பகுதியைத் தம் நாட்டிற்குக் கொண்டு செல்ல அவர் விரும்பினர். ஆகவே, அவர் நம் நாட்டின் மீது பலதடவை படையெடுத்து வந்தார்.

இந்தியாவின்மீது கடைசி முறை படையெடுத்தபோது, அவர் **சோமநாதபுரத்தி**லிருந்த கோயிலைப்பற்றிக் கேள்விப்பட்டார். அது இப்போது குஜராத் என்று வழங்கும் பிரதேசத்தில் உள்ளது. ஒரு பெரிய பாலைவனத்தைக் கடந்தால்தான் அவ்வூரை அடைய முடியும். ஆயினும், அவர் அதைப் பொருட்படுத்தாமல் சோமநாதபுரத்தை அடைந்தார்.

ஊரார் பலரும் ஒன்றுகூடி, கோயில் வாயிலில் வந்து நின்றனர்; அவரை எதிர்த்துச் சண்டை செய்தனர். ஆனல் மாமூத் அவர்

களை எளிதில் தோற்கடித்து, கோயிலுக்குள் நுழைந்தார். பின்னர் ஏராளமான பொருளுடன் அவர் தம் ஊர் திரும்பினர்.

இந்தியாவிலிருந்து கொண்டுசென்ற செல்வத்தைச் செலவழித்து மாமூத் கஜினியில் பெரிய மசூதிகளைக் கட்டி வைத்தார்; பள்ளிக் கூடங்களையும் ஏற்படுத்தினர். அவர் காலத்தில் கஜினி நகரம் பலவிதத்திலும் சிறந்து விளங்கிற்று.

### கேள்விகள்

1. கஜினியை ஆண்ட முக்கிய அரசர் யார்?
2. கஜினி மாமூத் இந்தியாவின்மீது ஏன் படையெடுத்து வந்தார்?
3. கடைசி முறை கஜினி மாமூத் எந்த இடத்தை முற்றுகை யிட்டார்?
4. கஜினி மாமூத் தாம் இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற செல்வத்தை என்ன செய்தார்?

# 12. கிருஷ்ணதேவராயர்

தக்ஷிணத்தில் பாயும் நதிகளுள் துங்கபத்திரை ஒன்று. முற்காலத்தில் அதன் தென் கரையில் விஜயநகரம் என்ற ஒரு பெரிய ராஜ்யம் இருந்தது. அதை ஏற்படுத்தியவர்கள் ஹரிஹரர், புக்கர் என்னும் சகோதரர்கள்.

விஜயநகரம் பல இயற்கைப் பாதுகாப்புகளுடன் அமைந்திருந்தது. அதன் ஒரு புறத்தில் துங்கபத்திரை நதியும், மற்ற மூன்று புறங்களில் மலைகளும் காடுகளும் இருந்தன. மேலும், அதைச் சுற்றிலும் பெரிய மதில் சுவர்கள் கட்டப்பட்டன. ஆழமான அகழிகளும் தோண்டப்பட்டன. ஆகவே, பகைவர்கள் அதை எளிதில் பிடித்துக்கொள்ள இயலாது.

முஸ்லிம்களின் ஆட்சிக்கு அஞ்சிய இந்துக்கள் பலரும் அங்கே வந்து வசித்தார்கள். நாளடைவில் பல ரஸ்தாக்கள் போடப்பட்டன. அழகிய மாளிகைகள் கட்டப்பட்டன. அக்காலத்தில் அது ஒரு சிறந்த நகரமாக விளங்கி வந்தது.

விஜயநகரத்தைக் கீர்த்தியுடன் ஆண்டு வந்த மன்னர்களில் முக்கியமானவர் **கிருஷ்ண தேவராயர்**. அவர் மிகுந்த புத்திசாலி ; நன்ருகப் படித்தவர் ; தெய்வ பக்தி உடையவர்.

கிருஷ்ணதேவராயர் தென் இந்தியாவில் பல நாடுகளை ஜயித்துத் தம் இராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்; பல கோயில்களையும், கோபுரங்களையும் கட்டுவித்தார். அவர் கட்டிய கோபுரம் ஒன்று காஞ்சீபுரத்தில் இப்பொழுதும் உள்ளது. ஜனங்கள் அதை **இராயகோபுரம்** என்று சிறப்பித்துக் கூறுவர்.



கிருஷ்ணதேவராயர்

இராயருக்கு **திம்மரசு** என்பவர் மந்திரியாயிருந்தார். அவருக்கு **அப்பாஜி** என்ற ஒரு பெயரும் உண்டு. அவர் மிகுந்த அறிவு படைத்தவர். அவர் இராயருக்கு உயிர்போலிருந்து, அரசாங்கத்தை நடத்தப் பேருதவி புரிந்தார். ஒரு சமயம், இராயர் ஒரு முஸ்லிம் மன்னனால் சிறைபிடிக்கப்பட்டார். அப்பொழுது, அப்பாஜியின் சூழ்ச்சியாலேயே இராயர் சிறையினின்றும் தப்பிவந்தார்.

இராயர் கல்விமான்களை நன்கு ஆதரித்து வந்தார். அவர் சபையில் பெரிய வித்வான்கள் பலர் இருந்து வந்தனர். அவர்களுள்

**பெத்தண்ணு** என்பவர் சிறந்தவர். அவர் மகாபாரதத்தைத் தெலுங்கு பாஷையில் எழுதியிருக்கிருர்.

இராயர் பொதுஜன நன்மைக்காகப் பாடுபட்டு வந்தார். அவர் பல ஏரிகளையும் வாய்க்கால்களையும் வெட்டினுர். அதனுல் விவசாயம் நன்கு விருத்தி அடைந்தது.

### கேள்விகள்

1. விஜயநகர ராஜ்யம் எங்கே இருந்தது?
2. விஜயநகரத்தை ஏற்படுத்தியவர் யார்?
3. விஜயநகரம் பகைவர் எளிதில் பிடிக்க முடியாதபடி எவ்விதம் அமைந்திருந்தது?
4. விஜயநகரத்தைக் கீர்த்தியுடன் ஆண்ட மன்னர் யார்?
5. விஜயநகர மன்னர் சபையில் இருந்த தெலுங்கு வித்வான் பெயர் என்ன? அவர் இயற்றிய நூல் யாது?
6. அப்பாஜியைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

# 13. அக்பர்

டில்லியை அரசாண்ட முதல் மொகலாய அரசர் பாபர். அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? **அக்பர்** அவருக்குப் பேரர்.




அக்பர்

அக்பர் பட்டத்துக்கு வந்தபோது அவருக்கு வயது பதின்மூன்று. ஆதலால் அவருக்குப் பதிலாக அவருடைய அத்தை குமாரர் **பைராம்கான்** என்பவர் இராஜ்யத்தை ஆண்டு வந்தார். தக்க வயது வந்ததும் அக்பர் தமது இராஜ்யத்தைத் தாமே ஆளத் தொடங்கினர். பைராம்கான் அது கண்டு அவர்மீது

பொறுமை கொண்டார்; அவருக்கு விரோத மாகக் கலகம் செய்தார். அக்பர் கலகத்தை அடக்கிவிட்டு பைராம்கானை மன்னித்து, அவரை மக்காவுக்கு அனுப்பினார்.

டில்லியை ஆண்ட மொகலாய மன்னருள் அக்பர் மிகவும் புகழ் பெற்றவர். அவர் கம்பீர மான தோற்றம் உடையவர்; மிக்க தைரிய சாலி; கருணை வாய்ந்தவர். அவர் பல நாடு களை வென்று, தமது இராஜ்யத்தோடு சேர்த் துக்கொண்டார். வட இந்தியா முழுவதும் தக்ஷிணத்தின் ஒரு பகுதியும் அவருடைய இராஜ்யமாயிருந்தது.

அக்பர் சண்டையில் தோற்ற எதிரிகளை மிக்க அன்புடன் நடத்தி வந்தார். ஆதலால், அவர்கள் அவரிடம் அன்புகொண்டு, அவருக் குப் பெரிதும் உதவி செய்தனர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆயினும் அறிய வேண்டிய விஷயங்களைப் பிறர் படிக்கக் கேட்டுத் தெரிந்து கொண்டார். வித்வான்க ளிடத்தில் அவருக்குப் பிரியம் அதிகம்.

அக்பர் ஜாதி மத வித்தியாசங்களைப் பாராட்டவில்லை. இந்துக்களை அன்புடன் ஆதரித்து வந்தார். அவர்களுக்கு விதித்திருந்த கொடிய வரிகளை அடியோடு நீக்கினார். அவர்களுக்குத் தம் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்களைக் கொடுத்தார். அவர்களுள்

ராஜா தோடர்மால், மான்சிங் என்பவர்கள் முக்கியமானவர்கள்.

தோடர்மால் சாம்ராஜ்யத்து விளை நிலங்களை எல்லாம் அளக்கச் செய்து அவரவர் செலுத்தவேண்டிய வரிகளைத் திட்டம் செய்தார். மான்சிங் தளகர்த்தராயிருந்து அரசருக்கு உதவி செய்தார்.

### கேள்விகள்

1. அக்பர் எப்பொழுது பட்டத்துக்கு வந்தார்?
2. அக்பருக்குப் பதிலாக இராஜ்யத்தை ஆட்சி செய்தவர் யார்?
3. பைராம்கான் அக்பருக்கு விரோதமாய் ஏன் கலகம் செய்தார்?
4. அக்பர் எதிரிகளை எப்படி நடத்தினர்?
5. அக்பர் மதவித்தியாசம் பாராட்டுவதில்லை என்பதற்கு ஓர் உதாரணம் கூறு.
6. தோடர்மால், மான்சிங் இவர்களைப்பற்றிக் கூறு.


# 14. தாஜ்மஹால்

அக்பரின் மைந்தர் **ஜிஹாங்கீர்**. ஜிஹாங்கீரின் மைந்தர் **ஷாஜஹான்**. ஷாஜஹான் காலத்தில் நாடெங்கும் செல்வம் மிகுந்திருந்தது. அவர் வட இந்தியாவில் பல பெரிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார். அவற்றுள் சிலவற்றை நாம் இப்பொழுதும் பார்க்கலாம். அவையெல்லாம் கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்தவை.

ஷாஜஹானுக்கு **மும்தாஜ் மஹால்** என்ற மனைவி ஒருத்தி இருந்தாள்; அவள் மிக்க அழகுள்ளவள்; குணத்திலும் சிறந்தவள்; ஏழைகளுக்கு இரங்குபவள். சக்கரவர்த்திக்கு அவளிடத்தில் மிகுந்த அன்பு உண்டு.

ஒரு சமயம் மும்தாஜ் மஹாலுக்கு உடம்பு அசௌகரியமாயிருந்தது. ஷாஜஹான் மனம் வருந்தினார். என்ன செய்தும் அவள் பிழைக்க வழியில்லை. சில நாட்களில் அவள் இறந்தாள். ஷாஜஹான் அவள் உடலை யமுனை நதிக்கரையில் ஆக்ரா நகரத்தில் அடக்கஞ் செய்தார். அந்த இடத்தில், அவள் இறக்கும் போது வேண்டிக்கொண்டபடி, ஒரு சிறந்த கட்டடத்தைக் கட்டி அதற்கு அவள் பெயரையே வைத்தார். அதுவே உலகம் புகழும் **தாஜ்மஹால்** என வழங்குவது.

தாஜ்மஹால் உலகத்தில் உள்ள அற்புதங்களுள் ஒன்ருகும். அதைக் கட்டி முடிக்க இருபது வருஷங்கள் சென்றன. முப்பது லக்ஷ ரூபாய் செலவாயிற்று. இருபதினுயிரம் ஆட்கள் இரவும் பகலும் வேலே செய்தனர்.



தாஜ்மஹால்

கட்டடம் முழுவதும் வெள்ளேச் சலவைக் கல்லால் ஆனது. அது சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது. என்ருலும், பார்ப்பதற்கு இப்பொழுது கட்டப்பட்ட கட்டடம்போல் தோன்றும். இந்தியாவுக்கு வரும் அயல் நாட்டினர் எவரும் அதைப் பார்க்காமல் போவதில்லே. ஷாஜஹான் இதைத் தவிர எத்தனேயோ கட்டடங்களேக் கட்டியிருக்கிருர்.

ஆனால், அவற்றுள் எதுவும் தாஜ்மஹாலுக்கு ஈடாகாது.

### கேள்விகள்

1. ஷாஜஹான் யாருடைய பிள்ளை ?
2. ஷாஜஹான் கட்டிய கட்டடங்களுள் சிறந்தது எது ?
3. தாஜ்மஹால் எங்கே இருக்கிறது? எதற்காகக் கட்டப்பட்டது ?
4. தாஜ்மஹாலைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

# 15. ராபர்ட் கிளைவ்

ஆங்கிலேயர் முதலில் இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்தனர் ; பிறகு அரசாள ஆரம்பித்தனர். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி தொடங்க உதவி செய்தவர் **ராபர்ட் கிளைவ்** என்னும் ஓர் ஆங்கில வீரர்.

கிளைவ் இங்கிலாந்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் சிறு வயதில் செய்த



ராபர்ட் கிளைவ்

குறும்புக்கு அளவில்லை. அவர் படிப்பை வெறுத்தார். பிறருடன் சண்டை போடுவதில் அவருக்கு விருப்பம் அதிகம். அவர் மரங்களில் ஏறிப் பழங்களைப் பறிப்பார் ; கடைகளில் சென்று காசு கேட்பார் ; இல்லையென்றால்

கல்லை எறிவார். அவரது ஊரில் அவரைக் கண்டு அஞ்சாதவர் இல்லை.

அவருடைய பெற்றோர் அவரை நல்வழிப் படுத்தப் பல வழிகளிலும் முயன்றனர்; நயத்தில் சொல்லிப் பார்த்தனர்; பயமுறுத்தினர். ஒன்றும் பயனில்லை. ஆதலால், அவர் தந்தை அவரை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். வியாபாரஞ் செய்யவந்த ஆங்கிலேயரிடம், கிளைவ் சொற்ப சம்பளத்தில் ஒரு குமாஸ்தா வாக அமர்ந்தார்.

இந்தியாவின் உஷ்ணத்தை அவரால் பொறுக்க முடியவில்லை; அவருக்கு வேலையும் பிடிக்கவில்லை. அவர் துப்பாக்கியால் தம்மைச் சுட்டுக்கொள்ள இரு தடவை முயன்றார். இரு முறையும் குறி தவறிவிட்டது. அதனால், அவர் வெறுப்புடன் வேலை பார்த்து வந்தார்.

அப்போது ஆற்காட்டை ஒரு நவாப் ஆண்டு வந்தார். அவர் பிரெஞ்சுக்காரரோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயருக்கு விரோதி ஆனார். ஆதலால் அவருக்கும் ஆங்கிலேயருக் கும் சண்டை உண்டாயிற்று. அந்தச் சண் டைக்குக் கிளைவை அனுப்பினார்கள்; கிளைவ் வீரத்துடன் சண்டை செய்து வெற்றி பெற்றார். அதன்பின் வங்காளத்தில் வேறு ஒரு சண்டை நடந்தது. அங்கும் இவரே சென்று வெற்றி பெற்றார். இவ்வாறு இவர் பல வெற்றிகளைப்

பெற்ருர். இந்தியாவில் பல் பிரதேசங்கள் ஆங்கிலேயர் வசம் ஆயின.

கிளேவ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென் ருர். ஆயிரக்கணக்கானவர்கள் அவரை எதிர் கொண்டு அழைத்தார்கள். பெற்ருேர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லே. சிறு வயதில் அவரை "ஒன்றுக்கும் உதவாதவன்" என்று இகழாதார் இல்லே. பிறகு "இவரைப்போல் உண்டா?" என்று புகழாதார் இல்லே. இந்தி யாவில் ஆங்கில அரசாட்சிக்கு விதை ஊன்றிய வர் கிளேவ் என்றே கூறலாம்.

## கேள்விகள்

1. கிளேவை, அவர் தந்தை ஏன் இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார்?

2. கிளேவ் ஏன் தம்மைச் சுட்டுக்கொள்ள முயன்ருர்?

3. கிளேவ் முதலில் யாரோடு சண்டை செய்து வெற்றி பெற்ருர்?

4. இந்தியாவில் ஆங்கில அரசாட்சியைக் கிளேவ் எவ்வாறு நிலேநாட்டிஞர்?

# 16. விக்டோர்ரியா மகாராணியார்

இங்கிலாந்தை ஆட்சி செய்தவருள் விக்டோரியா மகாராணியார் ஒருவர். அவர்



விக்டோரியா மகாராணியார்

சுமார் 130 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் பிறந்தவர். ஒரு வயதுக்குள் அவர் தம் தந்தையை இழந்தார். அவர் தாயார் அவரைச் செல்வமாக வளர்த்து வந்தார்.

விக்டோரியா மிகுந்த புத்திசாலி. சிறு வயதிலேயே, அவர் பல மொழிகளைக் கற்று, அவற்றில் தேர்ச்சி அடைந்தார். அவர் தமது பதினெட்டாவது வயதில் இங்கிலாந்தின் அரசியலை ஏற்றுக்கொண்டார்; நாட்டை மிக்க

திறமையுடன் ஆட்சி செய்தார்; குடிகளின் குறைகளை அறிந்து அவற்றை நீக்கினர். மக்கள் அவரது அறிவையும், குணத்தையும் கண்டு அவரைப் பலவாறு புகழ்ந்தனர். அவர் **ஆல்பர்ட்** என்னும் அரச குமாரரை மணம் புரிந்து கொண்டு, இனிது வாழ்ந்து வந்தார்.

இயற்கையிலேயே மகாராணியார் இளகிய மனமுடையவர். ஒரு சமயம், குற்றவாளி யொருவன் மரண தண்டனை விதிக்கப்பட்டான். அந்தப் பத்திரம் அவரது மேற்பார்வைக்கு வந்தது. அவர் அதைக் கொண்டு வந்தவரைப் பார்த்து "இம்மனிதனுக்குப் பரிந்து பேசுபவர் ஒருவரும் இல்லையா?" என்று கேட்டார். அதற்கு அவர் "இவன் குற்றவாளி என்பதில் சந்தேகமில்லை. ஆனல், ஒருவர் மாத்திரம் இவன் நல்லவன் என்று சொல்லக் கேட்டேன்" என்று பதில் சொன்னர். உடனே ராணியார், "இவ்வளவே போதும்" என்று கூறி, பத்திரத்தில் "மன்னிக்கப்பட்டான்" என்று எழுதிக் கொடுத்தார்.

விக்டோரியா சிம்மாசனம் ஏறியபோது நம் நாடு கிழக்கு இந்தியக் கம்பெனியார் ஆளுகையின் கீழ் இருந்தது. அவர்களது ஆட்சியில் பல குற்றங் குறைகள் இருந்து வந்தன. ஆகவே, ராணியார் கி. பி. 1858-ம்

ஆண்டில் இந்தியாவின் ஆட்சியைத் தாமே ஏற்றுக்கொண்டார் ; "சக்கரவர்த்தினி" என்ற பட்டப் பெயரையும் வகித்தார்.

அப்போது அவர் இந்திய மக்களுக்கு ஒரு அறிக்கைப் பத்திரத்தை எழுதியனுப்பினுர். அதில், "உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் எமக்கில்லை. நாம் யாவரையும் சமமாகப் பாவிக்கின்ருேம். படித்தவர் யாராய் இருந்தாலும் எமது அரசாங்கத்தில் உத்தியோகம் பெறலாம்" என்று தெரிவித்திருக்கிருர். அவர் நெடுங்காலம் செங்கோல் செலுத்தினுர். அதனுல் அவர் இறந்த பொழுது, அவரது மரணத்தைக் குறித்து வருந்தாதார் இல்லை.

### கேள்விகள்

1. விக்டோரியா மகாராணியார் எப்பொழுது பட்டத்திற்கு வந்தார் ?
2. விக்டோரியா மகாராணியார் இயற்கையில் இளகிய மனம் உடையவர் என்பதற்கு ஓர் உதாரணம் கூறுக.
3. அறிக்கைப் பத்திரத்தில் விக்டோரியா மகாராணியார் தெரிவித்திருப்பது என்ன ?

# 17. சுதந்திர இந்தியா

விக்டோரியா மகாராணியாருக்குப் பிறகு ஏழாம் எட்வர்டு, ஐந்தாம் ஜார்ஜ் முதலியோர்



மகாத்மா காந்தி

இந்தியாவின் சக்ரவர்த்திகள் ஆக இருந்தார்கள். அக்காலங்களில் இந்திய தேசீய காங்கிரசு இந்தியாவுக்குச் சுயஆட்சி உரிமை பெறுவதற்காக ஆங்கில அரசாங்கத்துடன் போராடியது. மகாத்மா காந்தி காங்கிரசுக்குத் தலைவரான பிறகு இப்போராட்டத்தில் பெரும்பான்மையான இந்தியர்கள் கலந்து கொண்டார்கள். முடிவாக 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி நம் நாடு சுதந்திரம் பெற்றது. 1950-ம் வருடம் ஜனவரி மாதம்

**26-ம் தேதி முதல் நம் நாட்டின் அரசாங்கம் ஒரு ஜனநாயகக் குடியரசாக இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை நடத்துகிறுர்கள். இந்தப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நம் நாட்டின் ஜனுதிபதியாக இருக்கிறுர்.**

**கேள்விகள்**

1. நமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய சபை எது?
2. நமது நாடு எப்பொழுது சுதந்திரம் பெற்றது?
3. நமது நாட்டின் அரசியல் எப்படி நடக்கிறது?

# 18. தல சரித்திரக் குறிப்புக்கள்

## 1. இராணி மங்கம்மாள்

மதுரையும் அதைச் சார்ந்த நாடும் பாண்டிய நாடாகும். அதற்கு **மதுரையே** தலைநகராயிருந்தது. ஒரு காலத்தில் அதை மங்கம்மாள் என்னும் மாதரசியார் ஆட்சி செய்து வந்தார்.

இராணி மங்கம்மாள் தெய்வ பக்தி உள்ளவர்; குடிகளிடத்தில் அன்பு மிகுந்தவர். அவர் இராத்திரி வேளையில் மாறு வேடம் பூண்டு, நகர சோதனை செய்வது வழக்கம். அப்போது அவர் குடிகளின் குறைகளைத் தெரிந்துகொண்டு அவற்றை நீக்குவார்.

அவர் நீதி தவறி நடந்ததேயில்லை. ஒரு சமயம் அவர் தம்பி, ஒரு ஏழைக் குடும்பத்தாருக்குத் தீங்கு செய்தான். அவர், அதனை அறிந்து தம்பி என்று பாராமல் அவனுக்கு மரண தண்டனை விதித்தார்.

யுத்த முறைகளிலும் அவர் கைதேர்ந்தவர். திருவாங்கூர் மன்னரோடு சண்டை செய்து வெற்றி பெற்றார்; தஞ்சை அரசரையும் வென்றார்.

அவர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் என்றைக்கும் அழியாதவை. பாண்டிய நாடு பல புண்ணியத் தலங்களையுடையது. பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் அங்கு வந்து கூடுவது

வழக்கம். அவர்களுடைய சௌகரியத்துக்காக மங்கம்மாள் பல சாலைகளை அமைத்தார். அவைகளின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்களை வைத்துப் பயிராக்கினார்; அங்கங்கே சாவடிகளையும் குளங்களையும் அமைத்தார்; ஏழைகளுக்கு அன்ன சத்திரங்களையும் கட்டி வைத்தார்.

இன்றைக்கும் பாண்டிய நாட்டில் 'இராணி மங்கம்மாள் சாலை', 'மங்கம்மாள் சத்திரம்' என்று பல சாலைகளும் சத்திரங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களால்,' அவர் என்றைக்கும் அழியாப் புகழை அடைந்துள்ளார்.

### கேள்விகள்

1. எது பாண்டிய நாடு? அந்நாட்டை ஆண்டு வந்த பெண்ணரசி யார்?

2. இராணி மங்கம்மாள் ஜனங்களுக்குச் செய்த நன்மை யாவை?

3. இராணி மங்கம்மாள் நீதி தவறாதவர் என்று எப்படித் தெரியும்?

## 2. ஜயசிங்கு

தென் ஆற்காடு ஜில்லாவில் **செஞ்சி** என்ற ஓர் ஊருண்டு. அங்கே ஒரு பலமான கோட்டை இருப்பதை இன்றைக்கும் காணலாம். அதைத் **தரணிசிங்கு** என்ற அரசர் கீர்த்தியுடன் ஆண்டு வந்தார். அப்போது டில்லியில் **ஷா ஆலம்** என்னும் மொகலாய அரசர் ஆட்சி செய்து வந்தார். அவரிடம் உயர்ந்த குதிரை ஒன்று இருந்தது. அது காற்றிலும் வேகமாய் ஓடும்; காற்றுடியைப்போல் மேலே கிளம்பும்; கிட்ட வந்தால் புலிபோல் பாயும். அதை அடக்க ஒருவராலும் முடியவில்லை.

ஆகவே, பாதுஷா, "அதை அடக்கிச் சவாரி செய்பவனுக்கு வெகுமதியுண்டு! அக் குதிரையும் கிடைக்கும்; பயந்து ஓடினுல் சிறை வாசம் நிச்சயம்" என்று விளம்பரம் செய்தார்.

எத்தனையோ வீரர்கள் அதை அடக்க முயன்றனர்; ஒருவராலும் முடியவில்லை. அவர்கள் யாவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அப்பொழுது தரணிசிங்கு அக்குதிரையை அடக்க முயன்றுர். அவராலும் முடியவில்லை. ஆகவே அவரும் சிறைப்பட்டார்.

அச்சமயம் அவர் மனைவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவள் அதற்கு **ஜயசிங்கு** என்று பெயரிட்டாள். "விளையும் பயிர் முளை

யிலே தெரியும்'' என்பது பொய்யாகுமா? ஜயசிங்கு சிறு வயதிலேயே வீரத்துடன் விளங்கினுன்.

தக்க வயது வந்ததும் அவன் தகப்பனுரைச் சிறைமீட்க டில்லிக்குச் சென்றுன்; குதிரையை அடக்கிச் சவாரி செய்வதாகப் பாதுஷாவினிடம் கூறினுன். அவரும் குதிரையை அவனுக்குக் காட்டினுர்.

ஜயசிங்கு குதிரையைத் தட்டிக் கொடுத்தான்; கொஞ்சங்கூடப் பயப்படாமல் அதன் மீது தாவி ஏறினுன்; குதிரை வாயுவேக மனோவேகமாய்ப் பறந்து சென்றது. ஜயசிங்கைக் கீழே தள்ளப் பல வழிகளிலும் முயன்றது; முடியவில்லை. கடைசியில் அது களைப்படைந்து, வாயில் நுரைதள்ள பாதுஷா முன் வந்து நின்றது. அதைக் கண்ட பாதுஷா ஆச்சரியம் அடைந்தார். ஆனந்தமும் கொண்டார்; குதிரையை அவனுக்கே கொடுத்து, தரணிசிங்கையும் சிறையிலிருந்து விட்டுவிட்டார். ஜனங்கள் யாவரும் ஜயசிங்கின் வீரத்தைப் புகழ்ந்து பேசினர்.

கொஞ்சகாலம் சென்றதும் ஜயசிங்கு செஞ்சிக்கு அரசரானுர். அவரது பெயரும் புகழும் எங்கும் பரவின.

அப்போது செஞ்சி ஆற்காட்டு நவாப்பின் கீழ் இருந்தது. ஜயசிங்கு அவருக்குக் கட்ட

வேண்டிய கப்பத்தைக் கட்டவில்லை. ஆகவே அவ்வரசன், இவரோடு சண்டைக்கு வந்தான். ஜயசிங்கு வீரத்துடன் சண்டை செய்தும் கடைசியில் போரில் உயிர் துறந்தார்.

### கேள்விகள்

1. தரணிசிங்கு சிறைச்சாலை சென்றது ஏன்?
2. தரணிசிங்கைச் சிறைமீட்டவர் யார்? எப்படி?
3. ஜயசிங்கு யாரோடு சண்டை செய்தார்? சண்டையின் முடிவு என்ன?

## 3. மனுநீதிச் சோழன்

முன் காலத்தில் தமிழ் நாடு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் ஒன்று சோழநாடு. அதற்கு, ஒரு காலத்தில் **திருவாரூர்** தலைநகராய் இருந்தது. அப்போது அதை **மனுநீதிச் சோழன்** என்பவன் ஆண்டு வந்தான்.

நெடுநாள் வரை அவனுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அதனால், அவன் தியாகேசப் பெருமானைப் பல வழிகளிலும் துதி செய்து வந்தான். அவனது உண்மை பக்திக்கு மெச்சி, கடவுளும் அவனுக்கு ஒரு புதல்வனை அளித்தார். அப்புதல்வனுக்கு அரசன் **வீதிவிடங்கன்** எனப் பெயரிட்டான். தவம் கிடந்து பெற்ற பிள்ளையாதலால், பெற்றோர் வீதிவிடங்கனைச் செல்வமாக வளர்த்து வந்தனர். வயது வந்ததும் அவன் படிப்பிலும் குணத்திலும் சிறந்து விளங்கினான்.

ஒருநாள் இளவரசன் தியாகேசப் பெருமானை வணங்கி வர, தேர் ஏறிக் கோயில் சென்றான். போகும் வழியில், ஒரு பசுவின் கன்று துள்ளி வந்து தேர்க்காலில் அகப்பட்டு இறந்தது. வீதிவிடங்கன், அதைக்கண்டு அளவற்ற துன்பம் கொண்டான். என்ன செய்வது என்பதே அவனுக்குத் தோன்றவில்லை.

கன்றை இழந்த பசு, கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டே, அரண்மனை வாயிலை அடைந்தது ; அங்கே கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்தது.

ஒருநாளும் மன்னன் கேட்டறியாத அம் மணி ஓசை, அன்று அவன் காதில் விழுந்தது. அரசன் வாயிலுக்கு வந்தான் ; கண்ணீரோடு நிற்கும் பசுவைப் பார்த்தான் ; உண்மையை அறிந்து மனம் நொந்தான். தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்று விடும்படி மந்திரிக்குக் கட்டளையிட்டான்.

மந்திரிக்கு அரசன் உத்தரவுப்படி செய்ய மனம் இல்லை. ஆதலால் அவன், தன் உயிரைப் போக்கிக் கொண்டான். உடனே அச் செய்தி அரசனுக்கு எட்டியது. அவன் தானே தன் மகனைத் தண்டிக்கச் சென்றான்.

அக்கன்று இறந்த இடத்தில் தன் மகனைக் கிடத்தி, அவன்மீது தானே தேரைச் செலுத்தினான். அப்போது தியாகேசர் அரசனுக்குக் காட்சி அளித்து, இறந்த கன்றையும், மந்திரியையும், இளவரசனையும் பிழைப்பித்தார்.

நீதி தவறாமல் நாடாண்ட மன்னர்களில் மனுநீதிச் சோழன் சிறந்தவன்.

"மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை."

## கேள்விகள்

1. மனுநீதிச் சோழனுடைய குமாரன் செய்த பிழை என்ன ?

2. பசு தனக்கு நேர்ந்த துயரத்தை அரசனிடம் எவ்வாறு தெரிவித்தது ?

3. மனுநீதிச் சோழன் தன் மந்திரிக்கு என்ன கட்டளை இட்டான் ? மந்திரி என்ன செய்தான் ?

4. அரசன், கன்றை இழந்த பசுவுக்கு, எவ்வாறு நியாயம் வழங்கினன் ?

## 4. சென்னை நகரின் வரலாறு

ஆங்கிலேயர் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்தார்கள். முதலில் வியாபாரம் செய்வதே அவர்களது நோக்கம். அதற்காக அவர்கள் நம் நாட்டில், பல இடங்களில் வர்த்தகசாலைகளைக் கட்டிக் கொண்டனர்; அவற்றுள் சென்னை ஒன்று.

சென்னை, சந்திரகிரி அரசருக்குச் சொந்தமாயிருந்தது. அவரிடமிருந்து **பிரான்சிஸ் டே** என்னும் ஆங்கிலேயர் அதை விலைக்கு வாங்கினர். அது அப்போது ஒரு சிறு கிராமமாக இருந்தது. சில செம்படவர் குடிசைகளே அங்கு இருந்தன. ஆங்கிலேயர் அங்கே ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர்; அதற்கு **ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை** என்று பெயர்.

ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை, முதலில் களிமண்ணுல் கட்டப்பட்டது. பிறகு அதைக் கல்லினுல் கட்டினர்கள். கோட்டையைச் சுற்றி நான்கு புறமும் ஆழமான அகழிகள் தோண்டப்பட்டன. அகழிகள் நிரம்ப எப்பொழுதும் தண்ணீர் இருக்கும். விரோதிகள் கோட்டைக்குள் செல்வதாளுல், அவைகளைத் தாண்டித்தான் செல்லவேண்டும். அதற்குள் அவர்களைச் சுலபமாக அடித்துத் துரத்தி விடலாம்.

கோட்டை மதிலின்மேல், பீரங்கிகள் வைப்பதற்குப் பல இடங்கள் அமைக்கப்பட்டன. சண்டைக் காலத்தில் கோட்டைக்குள் இருப்பவர்கள் பீரங்கிகளை உபயோகிப்பார்கள்.

ஆங்கிலேயர் இக்கோட்டைக்குள் இருந்து கொண்டு வியாபாரம் செய்து வந்தனர். நாளடைவில் அவர்களுடைய வியாபாரம் பெருகவே ஜனத்தொகை அதிகரித்தது. பல ரஸ்தாக்கள் போடப்பட்டன. பல கட்டடங்கள் கட்டப்பட்டன ; கச்சேரிகளும் ஏற்பட்டன. அவற்றுள் சிலவற்றை நாம் இன்றைக்கும் காணலாம். சிறிய கிராமமாயிருந்த சென்னை பெரிய் நகரம் ஆயிற்று. அது இப்போது இந்தியாவில் உள்ள மூன்று சிறந்த நகரங்களுள் ஒன்ருக விளங்கி வருகிறது.

ஆங்கிலேயருக்கு முதல் முதல் இந்தியாவில் சொந்தமான இடம் இதுவே. பின்புதான் மற்ற இடங்கள் கிடைத்தன.

### கேள்விகள்

1. ஆங்கிலேயர் இந்தியாவிற்கு எதற்காக வந்தனர் ?
2. சென்னையை விலக்கு வாங்கியவர் யார் ? யாரிடமிருந்து வாங்கினர் ?
3. சென்னைக் கோட்டையைப் பற்றிக் கூறு.
4. சென்னை முதலில் எப்படியிருந்தது? பிறகு எப்படி ஆயிற்று ?

# புதுமுறை
# இந்து தேச சரித்திரம்

## மூன்றும் புத்தகம்

(ஐந்தாம் வகுப்பு)

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS

என். வி. வேங்கடராமன்
எழுதியதை
வித்வான் எஸ். முத்து அய்யங்கார்
பி.ஏ. (ஹானர்ஸ்), எல்.டி.
முழுதும் மாற்றி, திருத்தியமைத்தது

அம்பிகா பிரதர்ஸ்
மயிலாப்பூர் : : சென்னை

பதிப்புரிமை]

[விலை ரூ. 0–9–6

முதல் திருத்திய பதிப்பு—1954

Kabeer Printing Works, Madras (2642)

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | திராவிடர்கள் ... | 1 |
| 2. | ஆரியர்கள் ... | 5 |
| 3. | புத்தர் ... | 10 |
| 4. | கிரேக்கர் படையெடுப்பு—மகா அலெக்சாந்தர் ... | 13 |
| 5. | சந்திரகுப்தரும் சாணக்கியரும் ... | 16 |
| 6. | மௌரிய சாம்ராஜ்யம்—அசோகர் ... | 20 |
| 7. | சந்திரகுப்த விக்ரமாதித்தர் ... | 24 |
| 8. | பல்லவர்கள் ... | 28 |
| 9. | சோழ மன்னர் ... | 33 |
| 10. | பாண்டிய மன்னர் ... | 38 |
| 11. | சேரர்கள் ... | 43 |
| 12. | முஸ்லிம் படையெடுப்புகள் ... | 46 |
| 13. | மதாச்சாரியார்கள் ... | 52 |
| 14. | விஜயநகர ராஜ்யம் ... | 55 |
| 15. | மொகலாய சாம்ராஜ்ய ஸ்தாபனம்—பாபர் ... | 59 |
| 16. | அக்பர் ... | 62 |
| 17. | ஔரங்கசீப் ... | 67 |
| 18. | சிவாஜி ... | 70 |
| 19. | ஐரோப்பிய வர்த்தகர்கள் ... | 74 |

| | | | |
|---|---|---|---|
| 20. | ராபர்ட் கிளைவ் | ... | 77 |
| 21. | வாரன் ஹேஸ்டிங்ஸ் | ... | 83 |
| 22. | மைசூர் சுல்தான்கள் | ... | 87 |
| 23. | வெல்லெஸ்லி பிரபு | ... | 90 |
| 24. | பெண்டிங்கும், ராஜாராம் மோகன ராயும் | ... | 93 |
| 25. | விக்டோரியா மகாராணியாரின் சாஸனம் | ... | 97 |
| 26. | வைஸ்ராய் காலத்து இந்தியா—I | ... | 100 |
| 27. | வைஸ்ராய் காலத்து இந்தியா—II | ... | 104 |
| 28. | இந்தியக் குடியரசு | ... | 110 |


CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS

# மூன்றும் புத்தகம்

## (ஐந்தாம் வகுப்பு)

---

## 1. திராவிடர்கள்

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இது ஆசியா கண்டத்தின் தென் பாகத்திலுள்ள ஒரு பெரிய தீபகற்பம். வெகு காலத்திற்கு முன் இதைப் பரதன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்தான். ஆதலால், இதற்குப் **பாரத நாடு** என்ற பெயரும் வழங்கி வருகின்றது.

இந்தியாவின் இயற்கையமைப்பைப்பற்றி நீங்கள் முன்வகுப்பில் படித்திருக்கிறீர்கள். விந்திய மலைத்தொடர் நம் நாட்டை வட இந்தியா என்றும் தக்ஷிணம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. தக்ஷிணத்தின் தென்கோடியிலுள்ள தமிழ் நாட்டில் நாம் வசிக்கிறோம். இங்கே வசிப்பவருள் பெரும்பாலோர் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். **திராவிடர்கள்** தொன்றுதொட்டு இங்கே வசித்து வருகிறார்கள். அவர்களைப் பற்றி இப்பாடத்தில் கூறுவோம்.

ஆதிகாலத்தில் திராவிடர் மலைகளின் மீதுள்ள காடுகளில் வசித்து வந்தனர். காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடி ஜீவனம்

செய்வதே அவர்களது முக்கியத் தொழில். இதுவன்றி அவர்கள் அங்குள்ள காய் கிழங்கு களையும் புசிப்பதுண்டு. அவர்கள் தாம் கொன்ற மிருகங்களின் தோல்களை ஆடையாக உடுத்து வந்தனர். இத்தகைய திராவிடர்களை நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்கள் சில வற்றில் நாம் இன்றைக்கும் காணலாம்.

நாளடைவில் திராவிடர்கள் நாகரிகம் பெற்று மலைச் சரிவுகளிலும் புல் வெளிகளிலும் வசித்து வரலாயினர். அவர்கள், வசிப்பதற்குச் சிறு குடிசைகளைக் கட்டிக் கொண்டனர் ; ஆடு மாடுகளை மேய்த்துத் தங்கள் குடும்பங்களை நடத்திவந்தனர். ஆட்டு ரோமத்தினால் கம்ப ளங்கள் நெய்து அவற்றை உடுத்து வந்தனர். தற்காலத்தில் உள்ள **குறும்பர்** எனப்படுவர் இவ்விதத் திராவிடர்களைச் சேர்ந்தவரேயாவர். திராவிடரில் சிலர் கடற்கரை ஓரங்களில் வசித் தனர். அவர்கள் கடலைக் கண்டு அஞ்சுவ தில்லை ; சிறு படகுகளில் ஏறிக்கொண்டு கடலில் வெகுதூரம் சென்று மீன் பிடித்து வந்தனர். கடல் நீரைக் காய்ச்சி உப்புச் செய்யவும் அவர்களுக்குத் தெரியும்.

திராவிடர்கள், நாளடைவில் சமவெளியி லுள்ள நதி தீரங்களில் குடியேறினார்கள். அவர்கள் நாகரிகம் பெற்றுப் பலவகையிலும் சிறந்து விளங்கினர். அவர்கள் நிலத்தை

உழுது பண்படுத்தி, நெல், கரும்பு முதலிய தானியவகைகளைப் பயிர் செய்தனர். இரும்பினால் பல கருவிகளைச் செய்து அவற்றை உபயோகித்து வந்தார்கள். பருத்தியிலிருந்து நூல் நூற்று ஆடைகள் நெய்து அவைகளை உடுத்து வந்தார்கள். அவர்கள் வசித்துவந்த வீடுகள் யாவும் கல்லினாலும், மரத்தினாலும் கட்டப்பட்டவை. அவர்கள் பல தெய்வங்களையும் வணங்கி வந்தார்கள். அவர்கள் சர்ப்பங்களைத் தெய்வங்களாக வணங்கி நாகபூஜை செய்தார்கள். பூர்விகத் திராவிடர்களிடம் ஓர் அரிய பழக்கம் இருந்து வந்தது. ஒருவன் இறந்தால் அவர்கள் அவனுடைய எலும்புகளை ஒரு ஜாடியிலிட்டுப் புதைத்து வைப்பார்கள். இந்த ஜாடிக்கு '**முதுமக்கள் தாழி**' எனப் பெயர் வழங்கி வந்தது. பிறகு அவர்கள் அதைப் பூமிக்குள் புதைத்து அதைச் சுற்றிலும் கருங்கல் பாறைகளை நாட்டி வைப்பார்கள்.

திராவிடர்கள் முதல் முதல் சிறு கிராமங்களில் வசித்து வந்தனர். நாளடைவில் அங்கங்கே பல பெரிய பட்டணங்கள் ஏற்பட்டன. அவர்கள் கடல் மூலமாக அயல் நாடுகளுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினர். அதனால் நாட்டின் செல்வம் அதிகரித்தது. அவர்கள் அயல் நாடுகளுக்கு அனுப்பி வந்த பொருள்

களுள், முத்து, தந்தம், சந்தனக்கட்டை, வாசனைத் திரவியம் முதலியன முக்கிய மானவை.

நாளடைவில் திராவிடர்கள் கல்வி கேள்வி களிலும் சிறந்து விளங்கினார்கள். முதல் முதல் திராவிடர்கள் தங்களுக்குள் பல சிறு ராஜ் யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். நாளடை வில் தென்னிந்தியாவில் திராவிட ராஜ் யங்கள் ஏற்பட்டன. ஆதியில் திராவிடர்கள் பேசிவந்த மொழியிலிருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் தோன்றின.

### கேள்விகள்

1. தென் இந்தியாவின் மற்றொரு பெயர் என்ன ?
2. திராவிடர்கள் முதன் முதல் எங்கே வசித்து வந்தனர் ? அவர்களது முக்கியத் தொழில் என்ன ?
3. சமவெளியில் குடியேறிய திராவிடர்கள் எவ்வகை யில் சிறந்தவர்கள் ?
4. 'முதுமக்கள்' தாழி என்றால் என்ன ?
5. திராவிடர்கள் பேசிவந்த ஆதிமொழியிலிருந்து கிளைத்த மொழிகள் யாவை ?

# 2. ஆரியர்கள்

சுமார் நாலாயிரம் வருஷங்களுக்குமுன் **ஆரியர்கள்** என்னும் ஒரு கூட்டத்தார் இந்தியாவிற்கு வந்து குடியேறினர்கள். அவர்கள் **மத்திய ஆசியா**விலிருந்து இந்தியாவின் வடமேற்குக் **கணவாய்களின்** வழியாக வந்தார்கள்.

இந்தியாவின் வட பாகத்தில் **பஞ்சாப்** என்ற ஒரு மாகாணம் உண்டு. அதுவே ஆரியர்கள் முதல் முதல் குடியேறிய நாடாகும். அங்கே சிந்துவும் அதன் உப நதிகளும் பாய்கின்றன. பூமியும் வண்டல்மண் படிந்து செழுமை வாய்ந்துள்ளது. ஆதலால் அவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் அங்கே கிடைத்து வந்தன.

நாளடைவில் பஞ்சாப் மாகாணத்தில் ஜன நெருக்கம் அதிகரித்தது. ஆதலால் அவர்களில் பலர் கிழக்கே சென்று கங்கைச் சமவெளியில் குடியேறினர்கள். கொஞ்ச காலத்திற்குள் ஆரியர்கள் இந்துஸ்தானம் முழுவதும் பரவிப் பல ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள், **கோசலம், பாஞ்சாலம், விதேகம், காந்தாரம்** என்பவை முக்கியமானவை.

ஆரியர்கள் கம்பீரமான தோற்றம் உடையவர்கள். மேலும் அவர்கள் வலிமையும் தைரியமும் உடையவர்கள். அவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தும், பயிர் செய்தும் ஜீவனம் செய்து வந்தார்கள். அவர்களுக்கு நெசவுத் தொழிலும் நன்கு தெரியும்.

அவர்கள் சண்டைக்குரிய கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களைச் செய்து அவற்றை உபயோகித்து வந்தனர். பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொண்டனர். இவையன்றி, போக்குவரவிற்குரிய வண்டி, தோணி முதலியவைகளையும் அவர்கள் செய்து கொண்டார்கள்.

ஆரியர்கள் **இந்திரன், அக்னி, சூரியன்** முதலிய தெய்வங்களை வணங்கி வந்தனர். அவர்கள் பேசி வந்தது சம்ஸ்கிருதத்திற்கு மூலமாயிருந்த ஒரு மொழி. நெல்லும் கோதுமையும் அவர்களது முக்கிய உணவு. இவையன்றிப் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றையும் அவர்கள் புசிப்பதுண்டு. சில விசேஷ நாட்களில் அவர்கள் மாமிசமும் உண்பார்கள்.

ஆரிய குடும்பத்திற்குத் தகப்பனே தலைவன். மற்றவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தாரும் பயிர்த்தொழில் செய்தும், ஆடுமாடுகளை

மேய்த்தும், தங்கள் குடும்பத்தை நடத்தி வந்த னர். ஆரியர்கள் தங்கள் ஸ்திரீகளை மிக்க கௌரவமாக நடத்தி வந்தார்கள். அவர்களும் தங்கள் புருஷர்களைத் தெய்வமாகக் கருதி அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தனர். பருத்தியிலிருந்து நூல் நூற்பதும், வீட்டிற் குரிய வேலைகளைச் செய்வதும் மாதர்களின் முக்கியத் தொழில்.

நாளடைவில் நாட்டின் ஜனத்தொகை பெருகிற்று. ஒவ்வொரு குடும்பத்தாரும் பல் வேறு தொழில்களைச் செய்யவேண்டியிருந்தது. ஆதலால், ஆரியர்கள் தங்களுக்குள் சில தொழில் பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஒவ்வொரு பிரிவினரும் நாட்டின் நலத்தைக் குறித்து ஒரு முக்கியமான தொழிலைச் செய்து வந்தனர்.

ஒரு பிரிவினர், வேதங்களை ஓதி தெய்வங் களை மகிழ்வித்தனர். மற்றொரு பிரிவினர், பகைவருடன் போர் செய்து அரசாங்கப் பாதுகாப்பைத் தம் தொழிலாகக் கொண்ட னர். இன்னொரு பிரிவினர் வியாபாரத்தையும் விவசாயத்தையும் கவனித்துக் கொண்டனர். நான்காம் பிரிவினர் நாட்டிற்குரிய பிற வேலை களைச் செய்து வந்தார்கள். இந்நான்கு பிரி வினருக்கும் முறையே **பிராமணர், க்ஷத்தி ரியர், வைசியர், சூத்திரர்** என்ற பெயர்கள்

வழங்கலாயின. பிற்காலத்தில் இத்தொழில் பிரிவுகள் ஜாதி முறைகளாக மாறிவிட்டன.

ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிய பிறகு அவர்களும் திராவிடர்களும் கலந்து வாழத் தொடங்கிஞர்கள். சில நூற்ருண்டுகளுக்குப் பிறகு இந்தக் கலப்பு பூர்த்தியாகி விட்டது. தற்காலத்தில் நம் நாட்டில் வாழும் மக்கள் ஆரிய—திராவிடக் கலப்பிஞல் தோன்றிய மக்களே யாவர்.

ஆரியர்களின் ஆதி நூலுக்கு **வேதம்** என்று பெயர். வேதங்கள் நால் வகைப்படும். அவை முறையே **ரிக், யஜுர், சாமம், அதர்வணம்** என வழங்கி வருகின்றன. இவற்றுள் ரிக் வேதமே முதல் முதல் ஏற்பட்ட வேதம். ஆரியர்களைப்பற்றிய விஷயங்களை அதில் நாம் காணலாம்.

வேதங்கள் ஏற்பட்ட காலத்திற்கு வேத காலம் என்று பெயர். வேதகாலத்திற்குப் பிறகு நமது நாட்டில் பல சிறந்த நூல்கள் தோன்ற லாயின. அவைகளும் ஆரியர்களின் சமூக வாழ்க்கை, நாகரிகம் முதலியவற்றைப் பற்றி நமக்கு நன்கு அறிவிக்கின்றன. அவற்றுள் **இராமாயணமும் மகாபாரதமும்** முக்கிய மானவை.

இராமாயணத்தை **வால்மீகி** என்பவர் சம்ஸ்கிருத பாஷையில் இயற்றிஞர். பிற்

காலத்தில் அதையே **கம்பர்** என்னும் புலவர் தமிழ் மொழியில் வெகு அழகாகப் பாடியிருக்கிருர். மகாபாரதம் வியாச **முனிவரால்** சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்டது. அவரைப் பின்பற்றி **வில்லிபுத்தூர் ஆழ்வார்** என்பவர் அதைத் தமிழ் மொழியில் எழுதியிருக்கிருர்.

**கேள்விகள்**

1. ஆரியர்கள் நம் நாட்டிற்கு எவ்வழியாக வந்தார்கள் ?

2. ஆரியர்கள் முதல் முதல் இங்கே குடியேறிய பகுதி எது ?

3. உனக்குத் தெரிந்த சில ஆரிய ராஜ்யங்களேக் கூறுக.

4. ஆரியர்களுக்குள் தொழில் பிரிவினைகள் ஏற்பட வேண்டிய அவசியம் என்ன ? பிற்காலத்தில் அப்பிரிவுகள் எவ்வாறு மாறிவிட்டன ?

5. ஆரியர்களேப் பற்றிய விஷயங்களே நாம் எதிலிருந்து அறியலாம் ?

# 3. புத்தர்

இமயமலையின் அடிவாரத்தில் நேபாளம் என்ற ஒரு நாடு உண்டு. அதுவும் அதைச் சார்ந்த நாடும் ஒரு காலத்தில் **சாக்கிய நாடு** என்று வழங்கி வந்தது.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் இந்நாட்டைச் **சுத்தோதனர்** என்னும் சாக்கிய அரசர் ஆண்டுவந்தார். வெகுநாள்வரை அவருக்குக் குழந்தை யில்லாமல் கடைசியில் ஓர் ஒப்பற்ற ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பெற்றோர் **சித்தார்த்தர்** என்று பெயரிட்டனர்.

சித்தார்த்தர் சிறு வயதிலேயே அரசர்க்குரிய பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்தார். தக்க வயது வந்ததும் அவர் **யசோதரை** என்னும் ஓரழகிய அரசகுமாரியை மணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

ஒரு நாள் சித்தார்த்தர் நகர வீதியில் உலாவச் சென்றார். வழியில் அவர் ஒரு நோயாளியைக் கண்டு மனம் வருந்தினர். கொஞ்ச தூரம் சென்றதும் அவர் ஒரு தொண்டு கிழவனைப் பார்த்தார். அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்ததைக் கண்டு பரிதவித்தார். ஒரு குடியானவன் புண்பட்ட ஒரு

மாட்டை அடித்து மேலும் புண்படுத்துவதைப் பார்த்தார். கடைசியில், அவர் ஒரு பிணத்தைக் கண்டார். இவையெல்லாம் கண்டு அவர் துக்கத்தில் ஆழ்ந்தார். அதுமுதல் அவர் உலகில் மக்கள் படும் துன்பத்தைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருந்தார்.



புத்தர்

ஒரு நாள் நள்ளிரவில் சித்தார்த்தர் ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறிக் காட்டிற்குச் சென்றார். அங்கே சில முனிவர்களிடம் உபதேசம் பெற்றார்; தம் உடலை வருத்திக் கடும் தவம் செய்தார். கடைசியில் அவர் ஓர் அரசமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்தார். அப்போது அவருக்கு ஞானம் உதயமாயிற்று. அது முதல் அவருக்குப் **புத்தர்** என்று பெயர் வழங்கலாயிற்று.

அவர் தமக்குத் தோன்றிய உண்மைகளை ஜனங்களுக்குப் போதித்து வந்தார். "உலகிலுள்ள எல்லாத் துன்பங்களுக்கும் ஆசைதான் முக்கிய காரணம். ஆசையை ஒழித்தால் துன்பமும் ஒழியும். ஆசையை ஒழிக்க மனம், சொல், செய்கை இம்மூன்றும் தூய்மையாக

இருக்கவேண்டும். பிற உயிர்களுக்கு நன்மை செய்வது மனிதனது கடமை; அவைகளை வருத்துவது பாவம். கடவுளுக்கு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லை; உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதும் இல்லை; ஜாதி மத பேதம் கிடையாது; அவர் முன்னிலையில் யாவரும் சமம்.'' இவைகளே அவர் கண்டறிந்த உண்மைகள். இவற்றையே அவர் மக்களுக்குப் போதித்து வந்தார்.

அவர் போதனையைக் கேட்டுப் பலர் **பௌத்த** மதத்தைத் தழுவலாயினர். புத்தர் காலத்திற்குப் பிறகு அம்மதம் வெளிநாடுகளிலும் பரவியது. இப்பொழுதுகூட அம்மதம் சீனா, ஜப்பான், பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் முக்கிய மதமாய் விளங்கிவருகிறது.

### கேள்விகள்

1. சித்தார்த்தர் காட்டிற்குச் சென்றதன் காரணம் என்ன ?
2. உண்மை அறிவை பெறச் சித்தார்த்தர் என்ன செய்தார் ?
3. எந்த இடத்தில் சித்தார்த்தருக்கு ஞானம் உதயமாயிற்று? ஞானம் ஏற்பட்ட பிறகு அவருக்கு என்ன பெயர் வழங்கலாயிற்று ?
4. பௌத்த மதத்தின் கொள்கைகள் யாவை ?
5. இப்போது எந்த எந்த நாடுகளில் பௌத்த மதம் முக்கிய மதமாய் விளங்கி வருகிறது ?

# 4. கிரேக்கர் படையெடுப்பு—மகா அலெக்சாந்தர்

ஐரோப்பாக் கண்டத்தில் கிரீஸ் என்பது ஒரு தேசம். அதைச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் **அலெக்சாந்தர்** என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவர் மிகுந்த தைரியசாலி; சிறந்த போர் வீரர். உலகம் முழுவதையும் வென்று எங்கும் ஜயக்கொடியை நாட்ட வேண்டும் என்பது அவரது பேராவல்.



அலெக்சாந்தர்

முதல் முதல் அவர் தம் நாட்டைச் சுற்றியுள்ள நாடுகளை வென்று அவைகளைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். அதன் பின் அவர் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளின்மீது சென்று அவற்றையும் ஜயித்தார். இந்நாடுகள் ஆசியாவின் தென் மேற்குப் பகுதியில் உள்ளன. அவர் இந்தியாவின் செல்வப் பெருக்கைக் கேள்வியுற்று அதையும் ஜயிக்க ஆசை கொண்டார்.

அப்போது வடமேற்கு இந்தியா பல சிறு

நாடுகளாகப் பிரிந்திருந்தது. அவைகளின் அரசர்கள் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையில்லாமல் இருந்துவந்தனர். **தக்ஷசீலம்** என்னும் நாட்டை **அம்பி** என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் அலெக்சாந்தருக்குக் கீழ்ப் படிந்து அவருக்கு உதவி செய்வதாகவும் வாக்களித்தான்.

அலெக்சாந்தரது வலிமையைக் கண்டு அஞ்சிய மன்னர்கள் பலர் அவருக்குக் கீழ்ப் படிந்தனர். ஆனால் **புருஷோத்தமர்** என்ற அரசர் மாத்திரம் அவருக்குக் கீழ்ப்படியவில்லை. அவர் ஜீலம், சீனுப் என்ற இரு நதிகளுக்கும் இடையில் உள்ள நாட்டை ஆண்டு வந்தார்.

அலெக்சாந்தர் அவரோடு போர் செய்ய நேர்ந்தது. அப்போது மழை காலம். ஜீலம் நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடிற்று. ஒரு நாள் இரவில் பெருத்த மழையுடன் புயல் காற்று வீசிற்று. அச்சமயம் அலெக்சாந்தர், எதிரிகள் அறியாவண்ணம், தமது வீரர்களைப் படகுகளில் ஏற்றி எதிர்க்கரை சேர்த்தார். கிரேக்கர்கள் புருஷோத்தமரின் சேனையைத் தாக்கினர். புருஷோத்தமர் இதை எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவர் மிக்க ஆண்மையுடன் சண்டை செய்தார். முடிவில் கிரேக்கர்களே வெற்றி பெற்றனர்.

அலெக்சாந்தர் புருஷோத்தமரது வீரத்

திற்கு மெச்சி அவரது நாட்டை அவருக்கே கொடுத்ததுமன்றி மற்றும் சில நாடுகளையும் கொடுத்தார். அதன்பின் அவர் கிழக்கே கங்கைச் சமவெளியில் உள்ள மகத ராஜ்யத்தின் மீது செல்ல எண்ணங்கொண்டார். ஆனால் அவரது வீரர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆகவே அவர் தமது தேசத்திற்குத் திரும்ப நேர்ந்தது. போகும் வழியில் அவர் பாபிலோன் என்னும் நகரில் நோயுற்று உயிர் துறந்தார்.

அலெக்சாந்தர் படையெடுப்பினால் பல நன்மைகள் ஏற்பட்டன. முதல் முதல் அவர் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரமுடியும் என்பதைப் பலரும் அறிய எடுத்துக் காட்டினார். ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் வியாபார மார்க்கம் ஏற்பட்டு வியாபாரமும் நடைபெற ஆரம்பித்தது. இந்தியரின் கலைகளைக் கிரேக்கர்களும், கிரேக்கர்களின் கலைகளை இந்தியரும் தெரிந்துகொண்டார்கள். இந்தியர்கள் கிரேக்கர்களின் யுத்த முறைகளையும், ராஜ்ய தந்திரங்களையும் நன்கு தெரிந்துகொண்டனர். இந்தியாவைப் பற்றிய விஷயங்கள் பலவும் ஐரோப்பியருக்குத் தெரிய வந்தன.

### கேள்விகள்

1. அலெக்சாந்தர் எத்தேசத்தவர்?
2. அலெக்சாந்தர் ஜயித்த நாடுகளில் சிலவற்றைக் கூறுக.

3. ஜீலம் நதிக்கரையில் யார் யாருக்கும் சண்டை நடந்தது? அச்சண்டையின் முடிவு என்ன?

4. அலெக்சாந்தர் படையெடுப்பினுல் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

# 5. சந்திரகுப்தரும் சாணக்கியரும்

கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் **மகதம்** என்ற ஒரு பெரிய ராஜ்யம் இருந்தது. அதைக் கி. மு. நான்காவது நூற்ருண்டில் நந்த வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் கடைசி அரசருக்கு **மகா பத்ம நந்தன்** என்பது பெயர். அவர் **சந்திரகுப்தர்** என்னும் முக்கிய உறவினர் ஒருவரைத் தம் ராஜ்யத்தினின்றும் துரத்தி விட்டார்.

**சந்திரகுப்தர்** பஞ்சாப் சென்ருர். அச்சமயம் அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். சந்திரகுப்தர் கிரேக்கரின் போர் முறைகளைக் கவனித்து அறிந்தார்.

அதே காலத்தில் **சாணக்கியர்** என்ற ஒரு பிராமணர் இருந்தார். ஒரு சமயம் நந்த அரச குமாரர்கள் அவரைச் சபை நடுவில் அவமானப்படுத்தி விட்டனர். ஆதலால் அவர் நந்த வம்சத்தை வேரோடு அழித்துவிடுவதாகச் சபதம் கூறி, அதற்குத் தகுந்த சமயத்தை எதிர்பார்த்திருந்தார். சந்திரகுப்தர் அவரோடு

சேர்ந்துகொண்டு ஒரு பெரிய சேனையைத் திரட்டினார். அச்சேனையின் உதவியைக் கொண்டு அவர் மகதத்தின்மீது படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றினார்; தம்மை அவமதித்த அரசரைத் துரத்திவிட்டுத் தாமே அரசரானார். அக்காலத்தில் சந்திரகுப்தருக்கு ஏற்படவிருந்த பல அபாயங்களைச் சாணக்கியர் தடுத்து அவரைக் காத்தார்.

அலெக்சாந்தர் இறந்தபின் அவர் ஜயித்த நாடுகளை அவரது சேனைத் தலைவர்கள் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். அவர்களுள் **ஸெலூக்கஸ்** என்பவர் ஒருவர். அலெக்சாந்தருக்குரிய இந்திய நாடுகளைச் சந்திரகுப்தர் கிரேக்கர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார்.

ஸெலூக்கஸ் கிரேக்கர்கள் இழந்த இந்திய நாடுகளைத் தாம் ஜயித்துக்கொள்ள ஆசை கொண்டு சந்திரகுப்தரோடு போர் செய்தார். ஆனால் சந்திரகுப்தர் அவரை எளிதில் தோற்கடித்து விட்டார். பிறகு இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதன்படி சந்திரகுப்தருக்கு இந்தியாவில் கிரேக்கர்களுக்குரிய நாடுகள் அனைத்தும் கிடைத்தன. மேலும் அவர் ஸெலூக்கஸின் மகளை மணம் செய்துகொண்டார். ஸெலூக்கஸ் சந்திரகுப்தரின் சபைக்கு **மெகஸ்தனிஸ்** என்னும் ஒரு அறிஞரைத் தூத


ராக அனுப்பினர். மெகஸ்தனிஸ் இந்தியாவில் தாம் கண்டதையும் கேட்டதையும் **இண்டிகா** என்னும் புத்தகத்தில் எழுதி வைத்தார். அதி லிருந்து நாம் சந்திரகுப்தரின் ஆட்சியைப் பற்றி நன்கு அறியலாம்.

சந்திரகுப்தரின் தாயாருக்கு **முரா** என்று பெயர். ஆதலால் அவருக்குச் **சந்திர குப்த மௌரியர்** என்ற பெயர் வழங்கலாயிற்று. அவரது ராஜ்யம் **மௌரிய ராஜ்யம்** என்றும், வம்சம் **மௌரிய வம்சம்** என்றும் பெயர் பெற்றன.

சந்திரகுப்தர் தாம் பட்டத்திற்கு வந்ததும் சாணக்கியரைத் தமது முக்கிய மந்திரியாக நியமித்துக் கொண்டார். சாணக்கியர் அறிவிற் சிறந்தவர். ராஜ்ய தந்திரங்களில் நிபுணர். அவர் **அர்த்த சாஸ்திரம்** என்னும் அரிய நூலை சம்ஸ்கிருத பாஷையில் எழுதியிருக் கிறார். அதில் ராஜ்ய பரிபாலன முறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சந்திரகுப்தர் வட இந்தியாவில் பல நாடு களை ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டார். இப்பெரிய ராஜ்யத்திற்குப் **பாடலீபுரம்** தலைநகராக விளங்கி வந்தது. அதைப் பரிபாலனம் செய்ய அரசர் ஒரு பெரிய சபையை ஏற்படுத்தினர். அது அந்நகர நிர்வாகத்தைக் கவனித்து வந்தது.

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS



சந்திரகுப்தர் குடிகளின் குறைகளை அறிந்து அவைகளை நீக்கினார். விவசாயத்திற்கென்று பல ஏரிகளையும் கால்வாய்களையும் வெட்டுவித்தார்; நாட்டில் வியாபாரம் பெருகும் பொருட்டுப் பல சாலைகள் அமைத்தார்; கல்விக்காகப் பல ஏற்பாடுகளையும் செய்தார். குற்றம் செய்தவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர். அவர் காலத்தில் குடிகள் யாதொரு குறைவுமின்றிச் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

### கேள்விகள்

1. மகத ராஜ்யம் எங்கே இருந்தது? அதைச் சந்திரகுப்தர் எப்படிக் கைப்பற்றினார்?

2. ஸெலூக்கஸ் என்பவர் யார்? அவர் சந்திரகுப்தருடன் ஏன் போர் தொடுத்தார்? அச்சண்டையின் முடிவென்ன?

3. மெகஸ்தனிஸ் என்பவர் ஸெலூக்கஸினால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கிரேக்க —. அவர் — என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை எழுது.

4. அர்த்த சாஸ்திரம் யாரால் ஏற்பட்டது? அதில் அடங்கிய விஷயங்கள் யாவை?

5. சந்திரகுப்தர் குடிகளுக்குச் செய்த நன்மைகள் யாவை?

# 6. மௌரிய சாம்ராஜ்யம்—அசோகர்

சந்திரகுப்தருக்குப் பிறகு அவர் குமாரர் பிந்துசாரர் அரசரானர். அவருக்குப் பின் அவர் மைந்தர் **அசோகர்** பட்டம் வகித்தார். இந்தியாவைக் கீர்த்தியுடன் ஆண்ட சக்கர வர்த்திகளுள் அசோகர் தலைசிறந்தவர். அவர் பல நாடுகளையும் வென்று புகழுடன் விளங்க வேண்டுமென்று ஆசை கொண்டார்.


ஒரு சமயம் அசோகர் **கலிங்க நாட்டோடு** போர் தொடுத்தார். சுமார் மூன்று வருஷ காலம் கடும்போர் நடந்தது. முடிவில் அசோகர் வெற்றி அடைந்தார். சண்டையில் ஆயிரக்கணக்கான வீரர்கள் இறந்து போயினர்; இரத்த வெள்ளம் ஆருய்ப் பெருகி ஓடிற்று. இவையெல்லாம் கண்ட அசோகர் மனம் வருந்திஞர். "எண்ணிறந்த மக்களைக் கொன்றும் புண்படுத்தியும் ராஜ்யத்தைப் பெருக்குவதால் என்ன சுகம்? குடிகளுக்கு நன்மை செய்து, அவர்களது அன்பைப் பெற்று ஆளும் ஆட்சியே சிறந்தது," என்று அவர் எண்ணிஞர்.

அதுமுதல் அவர் போர் செய்வதை நிறுத்திவிட்டார்; "பிராணி வதை கூடாது" என்று போதிக்கும் பௌத்த மதத்தைப் பின்

7 - MAY 1956
MADRAS



பற்றினர் ; அதைப் பரவச்செய்யப் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். முதல் முதல் அவர் தாம் வேட்டையாடுவதை நிறுத்தினர் ; மாமிசம் புசிப்பதையும் விட்டு விட்டார். தமது குடிகளும் அப்படியே செய்ய வேண்டுமென்று திட்டம் செய்தார்.




அசோகர் நாட்டிய கல் தூண் ஒன்றின் உச்சிப் பகுதி

அவர் தமது ராஜ்யத்தில் முக்கியமான பல இடங்களில் கல் தூண்களை எழுப்பி, அவற்றின் மீதும், கற்பாறைகளின் மீதும், பௌத்த மதக் கொள்கைகளைச் செதுக்கி வைத்தார். ஜனங்கள் அவைகளைப் படித்துப் பார்த்து அவற்றின்படி நடந்து வந்தனர். அசோகர் நாட்டி வைத்த கல் தூண்களை, நாம் இன்றைக்கும் பல இடங்களில் காணலாம்.

அசோகர் பௌத்த மதத்தைத் தம் ராஜ்யத்தில் மட்டும் பரவச் செய்ததோடு திருப்தி அடையவில்லை ; அயல் நாடுகளிலும் அதைப் பரவச் செய்ய ஆவல் கொண்டார். ஆதலால் அவர் தமது உறவினர்களையும் மற்றும் பல

பௌத்த சந்நியாசிகளையும் இலங்கை, எகிப்து, சிரியா, மாஸிடோனியா முதலிய தூரதேசங்களுக்கு அனுப்பினர். அவர்கள் அங்கே பௌத்த மதத்தின் கொள்கைகளை எடுத்துரைத்துப் பரவச் செய்தனர்.




சாஞ்சியில் உள்ள அசோக ஸ்தூபி

இதுவன்றி அசோகர் பொதுஜன நன்மைக்காகப் பல வழிகளில் பாடுபட்டு வந்தார். விவசாயம் அதிகரிக்கும் பொருட்டு அவர் பல கால்வாய்களையும், ஏரிகளையும் வெட்டுவித்தார். போக்கு வரவு சௌகரியத்திற்காக ஆங்காங்குப் பெரிய சாலைகளை அமைத்தார்; அவற்றின் ஓரங்களில் நிழல் கொடுக்கும் மரங்களை வைத்துப் பயிராக்கினர். வழிப்

போக்கர்கள் தங்குவதற்கு வழியில் பல விடுதி களைக் கட்டிவைத்தார்; பிராணிகளுக்கும் மனி தர்களுக்கும் தனித்தனியே தர்ம வைத்திய சாலைகளைக் கட்டி வைத்தார்; சிறுவர்கள் கல்வி கற்கப் பல பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத் தினர்.

அரசன், குடிகள் அனைவரையும் சமமாகக் கருதவேண்டும். இது அரசனுக்குரிய ஓர் அருங்குணமாகும். இத்தகைய சிறந்த குணம் அசோகரிடம் நன்கு அமைந்திருந்தது. அவர் பிற மதத்தினரை அன்போடு நடத்தி வந்தார். ஆதலால் ஜனங்கள் அவரைப் பெரிதும் போற்றி வந்தனர்.

அசோகரது ராஜ்யம் வடக்கே இமயமலை முதல் தெற்கே மைசூர் வரையில் பரவியிருந் தது. இந்தப் பெரிய ராஜ்யத்தை அவர் சுமார் நாற்பது வருஷம் கீர்த்தியுடன் ஆண்டு கடைசியில் கி. மு. 232-ல் உயிர் நீத்தார்.

## கேள்விகள்

1. கலிங்க நாட்டுப் போருக்குப் பின் அசோகர் மனம் எப்படி மாறிற்று ?

2. அசோகர் பௌத்த மதத்தைத் தம் ராஜ்யத்தி லும் அயல் நாடுகளிலும் எவ்விதம் பரவச் செய்தார் ?

3. அசோகர் ஜனங்களுக்கும், பிராணிகளுக்கும் செய்த நன்மைகள் யாவை ?

4. அசோகர் —— வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் ராஜ்யத்தில் —— மதம் ஓங்கியிருந்தது. விடுபட்ட வார்த்தைகளை எழுது.

5. அசோகர் ஒரு சிறந்த அரசர் என்று சொல்லக் காரணம் என்ன ?

# 7. சந்திரகுப்த விக்ரமாதித்தர்

அசோகருக்குப் பிறகு வந்த மௌரிய அரசர்கள் ஆளும் திறமையற்றவர்கள். ஆதலால் மௌரிய ராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து கடைசியில் சீர்குலைந்து போயிற்று. வெகுகாலம் வரையில் நாடெங்கும் குழப்பமும் கலகமும் அதிகரித்தன.

கடைசியில் கி. பி. நான்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் **சந்திரகுப்தர்** என்ற ஒரு அரசர் தோன்றி வட இந்தியாவில் ஒரு புதிய ராஜ்யத்தை ஏற்படுத்திஞர். அவர் ஏற்படுத்திய ராஜ்யத்திற்குக் **குப்த ராஜ்யம்** என்பது பெயர்.

சந்திரகுப்தருக்குப் பிறகு அவர் மைந்தர் **சமுத்திர குப்தர்** அரசராஞர். அவர் தந்தையினும் மிக்க கீர்த்தி வாய்ந்தவர். முதல் முதல் அவர் கங்கைச் சமவெளியின் பெரும் பகுதியை வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்கிக்கொண்டார். அவரது ராஜ்யம் அநேகமாக வட இந்தியா முழுவதும் பரவி யிருந்தது என்று

சொல்லலாம். இதுவன்றி, அவர் தக்ஷிணத்தின் மீதும் படை எடுத்துச் சென்று அங்குள்ள அரசர் பலரை வென்றூர்.

சமுத்திரகுப்தருக்குப் பிறகு அவர் குமாரர் **இரண்டாம் சந்திரகுப்தர்** அரசரானூர். அவர் மிக்க பராக்கிரமசாலி ; நாடாளும் திறமை அதிகம் வாய்ந்தவர். அவர் மாளவம், கூர்ஜரம், சௌராஷ்டிரம் முதலிய நாடுகளை வென்று தம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். இத் தகைய வீரச் செயல்களைச் செய்து முடித்ததால் அவர் **விக்ரமாதித்தர்** என்னும் பட்டப் பெயரை வகித்தார். மேலும் அவர், '**சாகர்**' என்னும் ஓர் இனத்தாரை வென்றதனுல் அவருக்குச் **சாகாரி** என்ற பெயரும் வழங்கியது.

இந்தியக் கதைகளில் புகழ்பெற்று விளங்கும் விக்ரமாதித்தர் இந்த இரண்டாம் சந்திர குப்தரே என்று கருதப்படுகிறது. இவர் காலத்தில் குப்த ராஜ்யம், செல்வம் நிரம்பிக் கல்வி, சங்கீதம், சிற்பம் முதலிய பல கலைகளி லும் சிறந்து விளங்கிற்று. விக்ரமாதித்தர் சிறந்த கல்விமான். ஆதலால், அவர் புலவர் களை அன்புடன் ஆதரித்து வந்தார். அவரது சபையில் **நவரத்தினங்கள்** எனப் பெயர் பெற்ற ஒன்பது வித்வான்கள் இருந்து வந்த னர். அவர்களுள் **காளிதாசர்** என்பவர் தலை சிறந்தவர். அவர் **சாகுந்தலம், ரகுவம்சம்**

முதலிய அரிய நூல்களை சம்ஸ்கிருத பாஷை யில் இயற்றியுள்ளார்.

விக்ரமாதித்தர் இந்து மதத்தில் விசேஷப் பற்றுள்ளவர். எனினும் அவர் மற்ற மதத் தினரை அன்பாகவே நடத்தி வந்தார். அவர் நாடெங்கும் அநேக கோயில்களைக் கட்டுவித்து அவற்றின் பூசை திருவிழாக் களுக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். அவர் காலத்தில் இந்து மதம் ஓங்கியிருந்தது ; பௌத்த மதம் க்ஷீணிக்கத் தொடங்கிற்று.

அசோகரைப் போலவே விக்ரமாதித்தரும் தேச நலத்திற்கான பல வேலைகளில் ஈடுபட்டு ஜனங்களுக்கு நன்மைகளைச் செய்திருக்கிறார். அவர், நாட்டில் பல இடங்களில் ஏழைகளுக்குத் தரும சத்திரங்களையும், பிரயாணிகளுக்கு விடுதிகளையும் கட்டுவித்தார் ; நோயாளிகளுக் குத் தரும வைத்தியசாலைகளையும் ஆங்காங்கு ஏற்படுத்தினார்.

அவரது ஆட்சியில் **பாஹியான்** என்னும் சீன யாத்திரிகர் ஒருவர் இந்தியாவுக்கு வந்தார். அவர் பௌத்த மத ஆராய்ச்சிக்காக இங்கு வந்தவர். அவர் விக்ரமாதித்தரின் ஆட்சி யைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து எழுதியிருக் கிறார்.

" நாட்டில் செல்வம் தழைத்தோங்கி இருந் தது. கல்வியும் மிகுந்திருந்தது. கலைகள்


பலவும் சிறப்படைந்து அரசரால் நன்கு ஆத ரிக்கப் பெற்று வந்தன. ஜனங்கள் நல்லொழுக் கங்களைக் கைக்கொண்டு பிறர் நலத்தில் ஈடு பட்டிருந்தனர். இந்து மதம் ஓங்கியிருந்தாலும் பௌத்தர்கள் கஷ்டமின்றி வாழ்ந்து வந்தனர். பிரயாணிகள் திருடர் பயமின்றி நாடெங்கும் பிரயாணம் செய்து வந்தனர். அந்நிய நாட்டி னர் வந்தால் அவர்களுக்குத் தகுந்த மரியாதை யுண்டு.'' இவைகளே அவர் எழுதியிருந்த விஷயங்களில் முக்கியமானவை. இதிலிருந்து விக்ரமாதித்தரது ஆட்சியின் சிறப்பைப்பற்றி நாம் நன்கு அறியலாம்.

**கேள்விகள்**

1. குப்த ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. குப்த மன்னர்களுள் மிகவும் புகழ் பெற்றவர் யார்?
3. 'நவரத்தினங்கள்' என்று யாருக்குப் பெயர்?
4. நவரத்தினங்களுள் முக்கியமானவர் யார்? அவர் எழுதிய நூல்கள் எவை?
5. விக்ரமாதித்தர் ஜனங்களுக்குச் செய்த நன் மைகள் யாவை?
6. பாஹியான் என்பவர் யார்? அவர் எதற்காக இந்தியாவுக்கு வந்தார்? அவர் விக்ரமாதித்தரின் ஆட்சி பற்றி என்ன எழுதியிருக்கிறார்

# 8. பல்லவர்கள்

**காஞ்சிபுரம்** சென்னைக்குச் சுமார் ஐம்பது மைல் தூரத்திலுள்ள ஒரு பழமையான நகரம். அது இந்துக்களுக்குப் புனிதமான ஒரு தலம். இந்துக்கள் அதைக் காஞ்சி, கச்சி, பெருமாள் கோயில் எனப் பல பெயர்களால் வழங்கி வருகின்றனர். அங்கே பல கோயில்



வரதராஜர் கோயில்—காஞ்சிபுரம்

கள் இருக்கின்றன. அவற்றுள், **வரதராஜர், ஏகாம்பரர், காமாட்சி** கோயில்கள் முக்கியமானவை.

இத்தகைய பெருமை வாய்ந்த நகரம்

சுமார் இருநூறு ஆண்டுக் காலம் **பல்லவ ராஜ்யத்தின்** தலைநகராக விளங்கி வந்தது. பல்லவ ராஜ்யம் வட பெண்ணைக்கும் காவிரி நதிக்கும் இடையில் வியாபித்திருந்தது. தெலுங்கு நாட்டைச் சேர்ந்த சில பகுதிகளும் அதில் அடங்கியிருந்தன. அதை ஆண்டு வந்த அரசர்களுள் **மகேந்திர வர்மன்** என்பவர் ஒருவர்.

மகேந்திர வர்மன் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவர் பல அரசர்களைப் போரில் வென்று புகழ்பெற்றார். எனினும் **சாளுக்கிய நாட்டை** ஆண்டுவந்த **இரண்டாம் புலிகேசி** அவரைப் போரில் தோற்கடித்துவிட்டார். அதனால் அவர் தமது ராஜ்யத்தில் அடங்கியிருந்த **வெங்கி நாட்டை** இழக்க நேர்ந்தது.

அந்நாளில் தமிழ் நாட்டில் எங்கும் **சமண மதம்** பரவியிருந்தது. அதற்கு **ஜைன மதம்** என்றும் ஒரு பெயருண்டு. அதை **மகாவீரர்** என்னும் ஒரு மதாச்சாரியார் ஏற்படுத்தினார். ஜீவ இம்சை கூடாது என்பதே அம்மதத்தின் முக்கியக் கொள்கை. மகேந்திர வர்மன் சமண மதத்தில் ஈடுபட்டுத் தாமும் ஒரு சமணர் ஆனார்.

மன்னரின் ஆதரவைப் பெற்ற சமணர்கள் பலரும் சைவர்களுக்குப் பல கொடுமைகளைச் செய்து வந்தனர். இதனை அறிந்த **அப்பர்** என்னும் சைவ மதாச்சாரியார் அரசரைத்


திரும்பவும் சைவராக்கினர். அதன் பிறகு அவர் சிறந்த சிவபக்தராகி அங்கங்கே பல சிவாலயங்களைக் கட்டுவித்தார். **திருப்பாதிரிப் புலியூரில்** உள்ள சிவாலயம் இம்மன்னரால் கட்டப்பட்டதேயாகும். கருங் கற்களைக் கொண்டு கோயில் கட்டும் பழக்கம் முதல் முதல் இவர் காலத்தில்தான் ஏற்பட்டது. மகேந்திரவர்மன் ஆற்காட்டிற்கும் அரக்கோணத்திற்கும் இடையில் ஓரழகிய பட்டணத்தை ஏற்படுத்தினர். அது அப்போது **மகேந்திர வாடி** எனப் பெயர் பெற்று விளங்கி வந்தது.

மகேந்திர வர்மனுக்குப் பிறகு அவர் குமாரர் **நரசிம்ம வர்மன்** சிம்மாசனம் ஏறினர். அவருக்கு **மாமல்லன்** என்ற ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. பல்லவ அரசர்களுள் மிக்க புகழ் பெற்றவர் இவரே. இவர் தமது தந்தையைத் தோற்கடித்த சாளுக்கிய மன்னனைப் போரில் வென்று அவனது தலைநகரை அழித்தார்.

நரசிம்ம வர்மன் செங்கற்பட்டுக்குக் கிழக்கே கடற்கரையை அடுத்து ஓரழகிய பட்டணத்தை ஏற்படுத்தினர். அதற்கு **மாமல்லபுரம்** என்பது பெயர். பிற்காலத்தில் அது **மகாபலிபுரம்** என்று வழங்கலாயிற்று.

மகாபலிபுரத்தில் கற்பாறைகளைக் குடைந்து கட்டப்பட்டுள்ள பல கோயில்களை

நாம் இன்றும் காணலாம். மேலும் பல அழகிய உருவங்கள் தீட்டப்பட்ட பல கற்பாறைகளும் அங்கே இருக்கின்றன.



ஒற்றக்கல் கோயில்கள்—மகாபலிபுரம்

அவை யாவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நன்கு அமையப் பெற்றவை. அர்ச்சுனன் தவமிருப்பது போலவும், சிவபெருமான் அவனுக்குக் காட்சியளிப்பது போலவும், ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. மற்ரோர் இடத்தில் தனித் தனிக் கல்லில் குடைந்து செதுக்கப்பட்டுள்ள ஐந்து கோயில்கள் இருக்கின்றன. அவைகளுக்குப் '**பஞ்ச பாண்டவர் ரதங்கள்**' என்று பெயர்.

பல்லவர் காலத்தில் மகாபலிபுரம் ஒரு

சிறந்த துறைமுகமாக விளங்கி வந்தது. அங்கே பெரியதொரு கப்பற் படையும் இருந்து வந்தது. மகாபலிபுரத்திற்கு **அர்த்தஸேது, திருக்கடன்மல்லை** என்ற பெயர்களும் வழங்கி வந்தன. அது ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பார்ப்பவர் கண்ணைக் கவரும் வனப்புடன் கூடியிருந்தது.

நரசிம்மவர்மனுக்குப் பிறகு வந்த அரசர்கள் ஆளும் திறமையில்லாதவர்கள். ஆகவே, சோழ அரசர்கள் அதைக் கைப்பற்றி ஆண்டு வரலாயினர். அதன் பிறகு விஜய நகரத்தரசர்கள் அதை வென்று தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டனர். கடைசியில் அந்த ராஜ்யம் பல சிறிய நாடுகளாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒரு சிற்றரசரால் ஆளப்பட்டு வந்தது.

### கேள்விகள்

1. காஞ்சிபுரம் எங்கே இருக்கிறது? அதற்கு வழங்கி வரும் வேறு பெயர்கள் யாவை?
2. காஞ்சியில் இருக்கும் சில கோயில்களைக் கூறு.
3. பல்லவ ராஜ்யம் எதிலிருந்து எதுவரையில் வியாபித்திருந்தது?
4. மகேந்திரவர்மன் சைவ மதத்தைவிட்டு எந்த மதத்தைத் தழுவினர்? அவரைத் திரும்பவும் சைவராக்கிய பெரியாரின் பெயரென்ன?
5. மகாபலிபுரத்தை ஏற்படுத்திய பல்லவ மன்னர் யார்? மகாபலிபுரத்தின் மறு பெயர்கள் யாவை?

6. கற்பாறைகளைக் கொண்டு கோயில் கட்டும் பழக்கம் முதல் முதல் யார் காலத்தில் ஏற்பட்டது ?

7. மகாபலிபுரத்தில் உள்ள கோயில்களில் ஒரு விசேஷம் என்ன ?

8. பல்லவ ராஜ்யம் எவ்வாறு சோழ அரசாட்சியின் கீழ் வந்தது ?

## 9. சோழ மன்னர்


தென் இந்திய ராஜ்யங்களுள் **சோழ ராஜ்யம்** ஒன்று என்பதை முன்பு கூறினோம். இந்நாடு காவிரி நதி பாயப்பெற்று பல வளங்களுடன் கூடியது. **தஞ்சை** நகரத்தைத் தலை நகராகக் கொண்டு, சோழ மன்னர்கள் இந்நாட்டைச் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஆண்டு வந்தனர். சோழ அரசர்கள் அனைவரிலும் **ராஜ ராஜ சோழர்** முதன்மை பெற்று விளங்கினார். அவர் கி. பி. 985-ல் முடிசூடி நீதி தவறாமல் அரசு செலுத்தி வந்தார்.

அவர் அயல் நாடுகளையும் வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்கிக் கொள்ள ஆசை கொண்டார். ஆதலால் அவர் மேல் திசை சென்று சேரனை வென்றார் ; தென் திசை சென்று பாண்டியனையும் தோற்கடித்தார்.

ராஜ ராஜரிடம் ஒரு பெரிய கப்பற்படை இருந்தது. அதன் உதவியைக் கொண்டு

அவர் இலங்கை அரசனை வென்று அவனைத் தமக்குக் கீழ்ப்படியச் செய்தார். அவர் வங்காள விரிகுடாவில் உள்ள பல தீவுகளையும் வென்றார். அவர் வென்ற நாடுகள் அனைத்தும் அவருக்குக் கப்பம் கட்டி வந்தன.

ராஜ ராஜர் தமது வெற்றிக்கு அறிகுறியாகத் தஞ்சை நகரில் ஒரு பெரிய சிவாலயத்



பிரகதீசுவரர் கோயில்—தஞ்சாவூர்

தைக் கட்டியிருக்கிறார். அதற்குப் பிரகதீசுவரர் கோயில் என்று பெயர். மற்ற கோயில்களைப் போல் அதன் கோபுரம் கோயிலின் முன்புறத்தில் கட்டப்படவில்லை; மூல ஸ்தானத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்பாகம்

அகன்றும் நுனிப் பாகம் குறுகியும் இருக்கின்றது. ஆதலால் அதன் நிழல் காலை மாலை வேளைகளில் கூடக் கோவிலுக்கு வெளிப்புறம் விழுவதில்லை.

கோயிலின் மதில் சுவரில் நாம் பல கல்வெட்டுக்களைக் காணலாம். அவை யாவும் ராஜ ராஜரின் வெற்றிகளையும் அவரது தான தருமங்களையும் அறிவிக்கின்றன.

ராஜ ராஜர் சிறந்த சிவ பக்தர்; அவர் மற்ற மதத்தினர்களை அன்புடன் நடத்தி வந்தார். அவர் விவசாய முன்னேற்றத்தைக் குறித்துப் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். அவர் காலத்தில் சோழ நாடு நீர்வளம் நிலவளம் பொருந்திச் செல்வத்தில் சிறந்து விளங்கிற்று. குடிகளும் குறைவின்றி நிறைவுடன் வாழ்ந்து வந்தனர். இப்பெரிய ராஜ்யத்தை ராஜ ராஜர் முப்பத்திரண்டு வருஷம் புகழுடன் ஆண்டு கடைசியில் கி. பி. 1017-ல் இறந்தார்.

ராஜராஜ சோழருடைய குமாரர் **ராஜேந்திர சோழர்.** இவர் வடக்கே கங்கை நதி வரை சென்று பல அரசர்களை வென்றார் ஆகையால் இவருக்குக் கங்கை கொண்ட சோழர் என்ற ஒரு பெயர் ஏற்பட்டது. இவர் தமது மகளை **ராஜராஜ நரேந்திரருக்கு** மணம் செய்து கொடுத்தார். நரேந்திரர் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர். அவர்

கிருஷ்ணு, கோதாவரி நதிகளுக் கிடையில் அமைந்த வெங்கி நாட்டை ஆண்டு வந்தார். அவர் இறந்ததும் அவர் குமாரர் **குலோத் துங்கர்** பட்டம் வகித்தார். அவருக்குத் தமது பாட்டனர் நாடாகிய சோழ ராஜ்யமும் கிடைத்தது.

குலோத்துங்கர் புகழ்பெற்ற சோழ அரசர் களுள் ஒருவர். அவர் சிறந்த போர் வீரர். அவர் தாம் பட்டத்திற்கு வந்தவுடன், பல புதிய நாடுகளைத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். தெய்வ பக்தியில் சிறந்தவர். ஆகவே அவர் பல பெரிய தேவாலயங்களைக் கட்டுவித்து, அவைகளுக்கு ஏராளமான மான் யங்களையும் விடுத்தார். மேலும் அவர் புலவர் களைப் பரிவுடன் போற்றி வந்தார். அவர் சபையில் இருந்து வந்த புலவர்கள் பல அரிய பெரிய நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் கவிச் சக்கரவர்த்தியாகிய **கம்பர்** இயற்றிய இராமாயணம் ஒன்று. **ஒட்டக்கூத் தரும் புகழேந்தியும்** அவர் காலத்தவரே.

குலோத்துங்கர் நாட்டின் நலத்தைக் குறித்துச் செய்த மற்ற ஏற்பாடுகளும் புகழத் தக்கவை. அக்காலத்தில் வியாபாரிகள் கொடுத்துவந்த சுங்க வரியை அவர் நீக்கி விட்டார். அதனல் அவருக்குச் "**சுங்கம் தவிர்த்த சோழன்**" என்ற சிறப்புப் பெய

ரும் வழங்கலாயிற்று. அவர், தமது நாட்டிலுள்ள நிலங்களை அளந்து அவற்றின் எல்லைகளை அமைத்து வைத்தார்; அவரவர்கள் கொடுக்கவேண்டிய வரிகளையும் விதித்திருந்தார். அவரது ஆட்சியில் சோழ ராஜ்யம் எவ்வகையிலும் சிறப்புற்றிருந்தது.

**கலிங்க நாடு** அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவ்வரசன் குலோத்துங்கருக்குக் **கப்பம் கட்டத்** தவறிவிட்டான். ஆதலால் அவர் அவனை வென்று வரும்படி தம் சேனைத் தலைவனை யனுப்பினர். அவனும் அப்படியே சென்று, கலிங்க அரசனை வென்று திரும்பினன். அப்போரின் விவரம் **கலிங்கத்துப் பரணி** என்னும் தமிழ் நூலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்நூலை இயற்றியவர் **ஜயங்கொண்டார்** என்னும் புலவர்.

**கேள்விகள்**

1. சோழ நாட்டில் பாயும் நதி யாது?
2. ராஜ ராஜ சோழரின் வெற்றிகள் யாவை?
3. பிரகதீசுவரர் கோயில் எங்கே இருக்கிறது? அதைக் கட்டியவர் யார்? அதன் விசேஷம் என்ன?
4. குலோத்துங்கருக்கு வழங்கி வந்த மற்ருெரு பெயர் என்ன? ஏன் அப்பெயர் வழங்கலாயிற்று?
5. குலோத்துங்கர் நாட்டிற்குச் செய்த நன்மைகள் யாவை?

# 10. பாண்டிய மன்னர்

மதுரையும் அதைச் சேர்ந்த பகுதியும் **பாண்டிய நாடு** எனப்படும். அதில், இப்போதைய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மூன்று ஜில்லாக்களும் அடங்கி இருந்தன. **மதுரையே** அதன் தலை நகரம்.


பாண்டிய நாடு பண்டைக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பல வழிகளிலும் சிறந்து விளங்கிற்று. வியாபாரம் மிகுந்திருந்தது. அதைச் சுற்றியுள்ள கடல்களில் முத்துச் சிப்பிகள் அதிகம். ஆகவே பாண்டிய நாடு **முத்துக்குளித்தல்** தொழிலில் முதன்மை பெற்று விளங்கியது.

பாண்டிய நாடு அயல் நாடுகளோடும் வியாபாரம் செய்து வந்ததாகத் தெரியவருகிறது. முதன் முதல் **கொற்கை** என்பது அதன் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கிற்று. அது கடல் பெருக்கால் அழிந்து போகவே **காயல்பட்டினம்** பாண்டிய நாட்டின் முக்கியத் துறைமுகமாயிற்று.

இதுவன்றிப் பாண்டிய நாடு கல்வியிலும் சிறந்து விளங்கிற்று. தமிழில் வல்ல புலவர்கள் பலர் அங்கே வசித்து வந்தனர். அவர்கள் தமிழ் மொழியில் பல அருமையான நூல்களை

எழுதியுள்ளனர். மதுரைமா நகரில் ஒரு பெரிய **தமிழ்ச் சங்கம்** இருந்து வந்தது.

மதுரையை ஆண்டுவந்த பாண்டியருள் பெரும்பான்மையோர் சிவ பக்தர்கள். அவர்




*மீனாட்சியம்மன் கோயில்—மதுரை*

கள் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்துள்ள பல கோயில்களைக் கட்டியுள்ளனர். அவற்றுள் மதுரையிலுள்ள **மீனாட்சி கோயில்** மிகவும் முக்கியமானது. இங்குதான் சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரிந்த தாகப் புராணம் சொல்லுகின்றது.

பாண்டிய நாட்டைச் சிறப்புடன் ஆண்ட

அரசர்கள் பலர். அவர்களுள் **நெடுஞ்செழியன்** என்பவர் ஒருவர். அவர் காலத்தில் மதுரை மாநகர் ஓர் உத்தமியின் சாபத்தால் எரிந்து போனதாக ஒரு கதையுண்டு. அதை இங்கே கூறுவோம்.

சோழ நாட்டைச் சேர்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் **கோவலன்** என்ற ஒரு வணிகன் இருந்தான். அவன் **கண்ணகி** என்னும் பெண்ணை மணந்து இல்லறம் இனிது நடத்தி வந்தான். ஒரு சமயம் அவன் **மாதவி** என்னும் பொதுமகள்மேல் காதல்கொண்டு அவள் பொருட்டுத் தன் செல்வத்தை இழந்தான். அதன்பின் அவன் அவ்வூரில் இருக்க மனமில்லாதவனாய்த் தன் மனைவியுடன் மதுரையை அடைந்தான்.

அங்கே அவன் கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றை விற்று வியாபாரம் செய்யத் துணிந்தான். அவன் அதைக் கடை வீதிக்கு எடுத்துச் செல்லுகையில் அரண்மனையில் அரசியின் சிலம்பைத் திருடிய பொற் கொல்லன் அதை வாங்கிப் பார்த்தான். தான் செய்த குற்றத்தைக் கோவலன்மீது சுமத்திவிடலாம் என்பது அவன் எண்ணம். ஆதலால் அவன் பாண்டியனிடம் விரைவிற் சென்று, சிலம்பைத் திருடிய கள்வன் கடை வீதியில் இருப்பதாகத் தெரிவித்தான். நெடுஞ்செழியன் கோபங்கொண்டு

கோவலனைக் கொலைபுரியும்படி உத்தரவிட்டார்.

கோவலன் இறந்ததும், கண்ணகி அரண்மனைக்கு வந்து தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பலரும் அறிய எடுத்துக் காட்டினாள். பாண்டிய மன்னர் தாம் செய்த குற்றத்தை நினைத்து வருந்தி உயிர் துறந்தார். கணவன் இறந்த துக்கத்தால் பாண்டியனது மனைவியும் உயிர்நீத்தாள். எனினும், கண்ணகியின் கோபம் அடங்கவில்லை. அவள் மதுரைமாநகர் எரிந்து போகும்படி சாபமிட்டாள். அவ்வாறே மதுரை எரிந்தது. இக்கதை **சிலப்பதிகாரம்** என்னும் தமிழ் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

நெடுஞ்செழியன் காலத்திற்கு சில நூற்றாண்டுகளுக்குப் பின் **நெடுமாறன்** என்பவர் மதுரையை ஆண்டு வந்தார். அவரைக் **கூன் பாண்டியன்** என்றும் அழைப்பதுண்டு. அவர் காலத்தில் பாண்டிய நாடெங்கும் சமண மதம் பரவியிருந்தது. அரசரும் அம்மதத்தைத் தழுவிச் சைவர்களைத் துன்புறுத்தி வந்தார்.

ஒரு சமயம் நெடுமாறன் ஒரு கொடிய நோயினால் வருந்தினார். சமணர்கள் அவரது நோயைத் தீர்க்கப் பலவாறு முயன்றும் பயன்படவில்லை. கடைசியில் பாண்டியன் மனைவி, **திருஞான சம்பந்தரை** வரவழைத்தாள்.

திருஞான சம்பந்தர் ஒரு சிறந்த சிவ பக்தர். அவர் தம் கையில் கொஞ்சம் விபூதியை எடுத்துக் கொண்டார்; "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் பாட்டைப் பாடி அதனை அரசர் உடம்பில் தடவினர். அரசரது நோய் அப்போதே அகன்றது. அவரும் மகிழ்ந்து சிறந்த சிவபக்தர் ஆனர். சமணர் யாவரும் நாட்டிலிருந்து துரத்தப்பட்டனர்.

**சுந்தர பாண்டியன்** என்பவர் மற்ருேர் அரசர். அவர் பாண்டிய மன்னருள் மிகவும் புகழ் பெற்றவர். அவர் தென்ஞட்டின் பல பகுதிகளை வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்கிக்கொண்டார்; இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று அதையும் ஜயித்தார். அவர் காலத்தில் பாண்டிய நாடு பல துறை களிலும் உயர்ந்து நின்றது. அவருக்குப்பின் அது சீர்குலைந்து போயிற்று.

**கேள்விகள்**

1. பாண்டிய நாட்டில் அடங்கிய ஜில்லாக்கள் யாவை?
2. பாண்டிய நாட்டின் பெருமை யாது?
3. நெடுஞ்செழியன் கோவலனுக்கு இழைத்த கொடுமை என்ன?
4. பாண்டியனும் அவரது மனைவியும் எவ்வாறு உயிர் நீத்தனர்?
5. கோவலன் கதையைக் கூறும் நூலின் பெய ரென்ன?

6. கூன் பாண்டியனது நோயைப் போக்கியவர் யார்? எப்படிப் போக்கினார்?

7. சுந்தர பாண்டியன் ஜயித்த நாடுகள் எவை? அவருக்குப் பிறகு பாண்டிய ராஜ்யம் என்ன ஆயிற்று?

## 11. சேரர்கள்

தென்னாட்டின் மேற்குப் பகுதிக்கு **மலையாளம்** என்பது பெயர். அதுவும் அதைச் சார்ந்த நாடும் **சேர நாடு** என வழங்கிவந்தன. இப்போது திருவாங்கூர், கொச்சி என வழங்கி வரும் பிரதேசங்களும், சேலம், கோயம்புத்தூர், மலையாளம், தென் கன்னடம் முதலிய ஜில்லாக்களும் முன்பு சேர நாட்டைச் சேர்ந்தவைகளே யாகும்.

**வஞ்சி மாநகரைத்** தலைநகராகக் கொண்டு சேரர்கள் இந்நாட்டைப் பல காலம் ஆண்டு வந்தனர். அப்போது சேரநாடு, கல்வி, வியாபாரம், நாகரிகம் முதலிய பல துறைகளிலும் மேன்மை அடைந்திருந்தது. சேர நாட்டில் மிளகு, இலவங்கம், ஏலக்காய் முதலிய பொருள்கள் மிக அதிகம். அயல் நாட்டு வியாபாரிகள் இந்நாட்டிற்கு வந்து ஏராளமான பொன்னைக் கொடுத்து, இப் பொருள்களை வாங்கிச் சென்றனர். **முசிறி, தொண்டி** என்பவை சேரநாட்டின் முக்கியத்

துறைமுகப்பட்டினங்கள். அக்காலத்தில் சேர நாட்டில் எங்கும் தமிழ் மொழியே வழங்கி வந்தது. சேர அரசர்கள் தமிழ் மொழியை நன்கு ஆதரித்து வந்தனர்.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்** என்பவர் சேர அரசர்களுள் முக்கியமானவர். அவர் தமிழ் நாடு முழுவதையும் ஜயித்து ஆண்டார். நெடுஞ்சேரலாதனுக்குப் பிறகு அவர் குமாரர் **சேரன் செங்குட்டுவன்** அரசரானார். அவர் சேர அரசர்களுள் மிகவும் புகழ் பெற்றவர். முன் பாடத்தில் கண்ணகியின் சாபத்தால் மதுரை மாநகர் எரிந்து போனதைப் பற்றிக் கூறினோம். அதன்பின் அவள் சேர நாடு சென்று அங்கே **திருச்செங்குன்றம்** என்னும் மலையிலுள்ள ஒரு வேங்கை மரத்தின் கீழ் நின்றாள். அப்போது கோவலன் தெய்வ வடிவத்தோடு விமானத்தில் இறங்கிக் கண்ணகியைத் தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றான்.

அம்மலையில் வசித்துவந்த குறவர்கள் அதுகண்டு ஆச்சரியம் அடைந்தனர். அவர்கள் செங்குட்டுவனிடம் வந்து நடந்ததைச் சொல்ல, அவரும் அதிசயித்தார். அவர் கண்ணகியைத் தெய்வமெனக் கருதி அவளுக்காகத் தம் நாட்டில் ஒரு கோயிலை அமைத்தார். அக்கோயிலைக் கட்டுவதற்கு அவர் இமயமலை

யிலிருந்து கல் கொண்டு வந்ததாகக் கூறப் படுகின்றது.

சேரன் செங்குட்டுவன் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவர் இமயமலைக்குச் செல்லும் வழியில் வடநாட்டு அரசர்களோடு போர் புரிந்து அவர்களைத் தமக்கு கீழ்ப்படியச் செய்தார். அவர் சோழ நாட்டையும் வென்று பெரும்புகழ் பெற்றார். அவருக்கு **இளங்கோ அடிகள்** என்று ஒரு தம்பி இருந்தார். அவர் இளமையிலேயே துறவு கொண்டதனால் அவருக்கு அப்பெயர் வழங்கலாயிற்று. அவர் ஒரு சிறந்த புலவர். கோவலன் கண்ணகியின் கதையைக் கூறும் **சிலப்பதிகாரம்** என்னும் தமிழ் நூல் அவரால்தான் இயற்றப்பட்டது.

செங்குட்டுவனுக்குப் பிறகு திறமை வாய்ந்த சேர அரசர்கள் எவரும் தோன்றவில்லை. நாளடைவில் சேர ராஜ்யம் பல சிறு பிரிவுகளாகப் பிரிந்து பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி அடிக்கடி சண்டையிட்டு வந்தனர். ஆதலால் சோழர்களும் பாண்டியர்களும் அதை எளிதில் கைப்பற்றி ஆண்டு வரலாயினர்.

**கேள்விகள்**

1. சேர நாட்டில் அடங்கியிருந்த நாடுகள் எவை?

2. அந்நாட்டிலுள்ள முக்கிய விளைபொருள்கள் யாவை?

3. முற்காலத்தில் சேர நாட்டில் வழங்கிவந்த பாஷை என்ன?

4. சேர நாட்டின் தலைநகரம் எது? துறைமுகங்கள் எவை?

5. சேர நாட்டில் கண்ணகிக்குக் கோயில் அமைத்த மன்னர் யார்? அவர் ஏன் அதைக் கட்டினார்?

6. இளங்கோவடிகள் என்பவர் யார்? அவருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

7. சேரன் செங்குட்டுவனுக்குப் பிறகு சேர ராஜ்யம் என்ன ஆயிற்று?

## 12. முஸ்லிம் படையெடுப்புகள்

இந்தியாவிற்கு மேற்கே **அரேபியா** என்ற ஒரு தேசம் உண்டு. அங்கே **முகம்மது நபிகள்** என்ற பெரியார் பிறந்து **இஸ்லாம்** மதத்தை ஏற்படுத்தினர். முதல் முதல் அரேபியாவிலும் பிறகு மற்ற நாடுகளிலும் இஸ்லாம் மதம் பரவிற்று. அவற்றுள் இந்தியாவின் வடமேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானம் ஒன்று.

**கஜினி**யைத் தலைநகராகக் கொண்டு அந்நாட்டைக் கி. பி. பத்தாவது நூற்றாண்டின் கடைசியில் **மாமூது** என்ற ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவர் இஸ்லாம் மதத்தில் விசேஷப்

பற்றுள்ளவர். பல நாடுகளிலும் அம்மதம் பரவ வேண்டும் என்பது அவரது ஆசை.

அவர் இந்தியாவின் செல்வப் பெருக்கைக் கேள்வியுற்று அதன்மீது படையெடுத்து வந்தார். முதல் முதல் அவர் பஞ்சாப் அரசனை வென்று அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார். இந்து அரசர்கள் பலரும் ஒன்று கூடி அவரை இந்தியாவினின்றும் துரத்து வதற்குப் பலமுறை முயன்றனர். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை.

அவர் இந்தியாவின்மீது சுமார் பதினேழு தடவைகள் படையெடுத்து வந்ததாகக் கணக் கிட்டிருக்கின்றனர். கடைசி முறை அவர் **சோமநாதபுரத்தின்** மீது படையெடுத்தார். அது அக்காலத்தில் பெரும் செல்வம் படைத் திருந்தது. அதிலிருந்த கோயில் இந்துக் களுக்கு மிகவும் முக்கியமானது.

அதை அடைவதானால் மாமூது ஒரு பெரிய பாலைவனத்தைக் கடந்து செல்ல வேண்டும். அவர் இவ்வரிய காரியத்தைச் செய்யத் துணிந் தார். ஆகவே, இவர் ஒரு பெரிய சேனையுடன் பாலையைக் கடந்து சோமநாதபுரத்தை அடைந் தார். எதிர்பாராத இச்சம்பவத்தைக் கண்ட இந்துக்கள் பலரும் திடுக்கிட்டனர். எனினும் எல்லோரும் ஒன்றுகூடி கோயிலின் வாயிலில் நின்று சண்டைக்குத் தயாராக இருந்தனர்.

இருவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. கடைசியில் இந்துக்கள் தோல்வியுற்றனர். மாமூது அளவற்ற செல்வத்தோடு கஜினிக்குத் திரும்பினர்.

மாமூது தம் நாட்டினருக்குப் பல நன்மைகளைச் செய்தார். ஏராளமான பொருள் செலவு செய்து கஜினியைப் புதுப்பித்தார். அங்கங்கே பல மசூதிகளைக் கட்டுவித்தார்; பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினர். அவர் சிறந்த கல்விமான்; ஆதலால் புலவர்களை நன்கு ஆதரித்தார். அவரது ஆட்சியில் கஜினி பார்ப்பவர் கண்ணைக் கவரும்படி, அவ்வளவு அழகும் வனப்பும் பொருந்தியிருந்தது. குடிகளும் குறைவின்றி வாழ்ந்து வந்தனர்.

கஜினி மாமூதுவுக்குப் பின் அவரது ராஜ்யம் சீர்குலைந்து போயிற்று. கடைசியில் **கோரி** வம்சத்தவர்கள் அதைக் கைப்பற்றி ஆண்டு வரலாயினர். அவர்களுள் **கோரி முகம்மது** என்பவர் முக்கியமானவர். கோரிக்கும் இந்தியாவின்மேல் நோக்கம் உண்டு. இந்தியாவை ஜயித்து இங்கே ஒரு முஸ்லிம் ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது அவரது ஆசை.

முதல் முதல் அவர் பஞ்சாபின் மீது படையெடுத்துச் சென்று அதிலுள்ள பல முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார்.

பிறகு விரோதிகளினின்றும் அவற்றைக் காக்கும் பொருட்டு அங்கே பலமான சேனையை வைத்துத் தம் ஊர் திரும்பினார். அதன்பின் அவருக்கு வட இந்தியாவில் உள்ள மற்ற நாடுகளையும் ஜெயிக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அதற்குத் தக்க சமயம் ஒன்று அவருக்கு வாய்த்தது.

அச்சமயம் வட இந்தியாவை ராஜபுத்திர அரசர்கள் ஆண்டு வந்தனர். இவர்களுள் **பிருதிவி, ஜயச்சந்திரன்** ஆகிய இருவரும் முக்கியமானவர். பிருதிவி டில்லி, ஆஜ்மீர் முதலிய நாடுகளையும், ஜயச்சந்திரன் கன்னோசியையும் ஆண்டு வந்தனர். இவ்விருவரும் நெருங்கிய உறவினர்கள்.

பிருதிவி மிக்க பலசாலி; சண்டையில் கைதேர்ந்தவர்; நாடாளும் திறமை வாய்ந்தவர். ஜயசந்திரன் அவரைக் கண்டு பொறாமை கொண்டார். இருவருக்கும் தீராப் பகை ஏற்பட்டது. ஜயசந்திரன் தம் பெண் **சம்யுக்தை**க்குச் சுயம்வரம் நடத்த எண்ணி அரசிளங் குமரர் அனைவருக்கும் மண ஓலை விடுத்தார். ஆனால் பிருதிவிக்கு மாத்திரம் அதை அனுப்பவில்லை. அவரைப்போல் ஒரு மண் பொம்மை செய்து, அதை வெளியே வைத்தார். அவரை அவமானப்படுத்துவதற்கென்றே ஜயச்சந்திரன் அவ்வாறு செய்தார். சுயம்வரத்

திற்கு எல்லா அரச குமாரர்களும் வந்திருந்தனர். பிருதிவியும் மாறுவேடத்தில் வந்திருந்தார். சம்யுக்தை பிருதிவியின் பெருமையை நன்கு அறிந்தவள்; ஆதலால் அவரையே மணம் புரியத் தீர்மானித்து, வெளியிலிருந்த பொம்மைக்கு மாலையிட்டாள்.

உடனே மாறுவேடத்தில் அங்கு வந்திருந்த பிருதிவி அவளைத் தம் குதிரையின் மேல் ,வைத்துக் கொண்டு தம் ஊர் சென்றார். ஜயச்சந்திரனுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. பிருதிவியை ஒழிக்க ஜயச்சந்திரர் முகம்மது கோரியின் உதவியை நாடினார். கோரி தம் எண்ணத்தை நிறை வேற்றிக் கொள்ள அதுவே தகுந்த சமயம் என்று எண்ணி மகிழ்ந்தார். ஆகவே அவர் ஒரு பெரிய சேனையுடன் இந்தியாவுக்குள் புகுந்து, டில்லியைத் தாக்கினார்.

ராஜபுத்திர அரசர்கள் அனைவரும் ஒன்று கூடிக் கோரியை **தானேச்வரம்** என்னும் இடத்தில் எதிர்த்தனர். ஆனால் ஜயச்சந்திரன் மாத்திரம் அவர்களோடு சேரவில்லை. ராஜபுத்திர வீரர்கள் மிக்க ஆண்மையுடன் சண்டை செய்து கோரியைத் தோற்கடித்து விட்டனர்.

கோரி முகம்மது தளரா மனம் உடையவர். ஆதலால், அவர் முன்னிலும் பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு மறுவருடம் திரும்

பவும் டில்லி ராஜ்யத்தின்மீது படையெடுத்துச் சென்ருர். இச்சமயத்தில் பிருதிவி தோல்வியுற்றுப் போர்க்களத்தில் உயிர் துறந்தார். டில்லியும் ஆஜ்மீரும் கோரியின் வசமாயின. சிலகாலம் சென்றதும், முகம்மது கோரி ஜயச்சந்திரனேடு சண்டைக்குச் சென்று அவரது ராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறு இரண்டு ராஜபுத்திர ராஜ்யங்களும் அழிந்தன.

### கேள்விகள்

1. கஜினி மாமூதின் வெற்றிகள் யாவை? அவர் தம் நாட்டிற்குச் செய்த நன்மைகள் என்ன?
2. கஜினி மாமூதுவுக்குப் பிறகு அவரது ராஜ்யம் என்ன ஆயிற்று?
3. பிருதிவி ஜயச்சந்திரனை எவ்வாறு அவமானப் படுத்திஞர்?
4. ஜயச்சந்திரன் ஏன் கோரியின் உதவியை நாடிஞர்?
5. ராஜபுத்திர ராஜ்யங்கள் அழிவுற்றதன் முக்கிய காரணம் என்ன?

# 13. மதாச்சாரியார்கள்

இந்து மதம் தொன்று தொட்டு நம் நாட்டில் இருந்து வரும் ஒரு புராதன மதம். பிற்காலத்தில் புத்தர் தோன்றிப் பௌத்த மதத்தை ஏற்படுத்தினர். அசோகர், ஹர்ஷர் முதலிய பெரிய சக்ரவர்த்திகளால் ஆதரிக்கப்பட்டு, புத்த மதம், நாடெங்கும் பரவிற்று.

சற்றேறக்குறைய புத்தர் தோன்றிய அதே காலத்தில் ஜைன மதம் என்ற வேெருரு மதம் தோன்றிற்று.

புதிய மதங்கள் பல தோன்றவே, இந்து மதம் கொஞ்சம் கொஞ்சமாக க்ஷீண தசையை அடைய ஆரம்பித்தது. ஆனால், அது சீர் குலைந்து அழியா வண்ணம் மூன்று பெரிய மதாச்சாரியார்கள் தோன்றி அதை நிலைநாட்டினர். அவர்கள் முறையே **ஸ்ரீமத் சங்கரர், ஸ்ரீமத் இராமாநுஜர், ஸ்ரீமத் மத்வர்** என்ற பெரியோர் ஆவர். இவர்கள் மூவரும் ஒரே காலத்தவர் அல்லர். ஒவ்வொருவரும் தனித் தனியே இந்து மதத்தின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளனர்.

**ஸ்ரீமத் சங்கரர்** மலையாளத்தில் **காலடி** என்னும் தலத்தில் **சிவகுரு** என்னும் பிராமணருக்குக் குமாரராய் அவதரித்தார். அவர் பதினாறு வயதிற்குள் பல கலைகளையும் கற்றுணர்ந்

தார். அதன்பின் அவர் ஒரு குருவை நாடித் துறவு பெற்ருர்.

பிறகு அவர் ஊரூராகச் சென்று ஜனங்களுக்கு இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய **அத்வைத** மதத்தைப் பற்றிப் போதித்து வந்தார். அவரது போதனையால் இந்து மதம் புத்துயிர் பெற்று விளங்கத் தலைப்பட்டது.

அவருக்குப் பிறகு அவருடைய சிஷ்யர்கள் இந்து மத வளர்ச்சியில் ஈடுபட்டு ஜனங்களுக்கு நற்போதனை செய்து வந்தனர். இப்போது **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில்** இருந்துவரும் சங்கராச்சாரியாரும் ஆதிசங்கரரின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவரேயாவர்.

ஸ்ரீமத் **இராமாநுஜர்** செங்கற்பட்டு ஜில்லாவில் **ஸ்ரீபெரும்புதூர்** என்னும் தலத்தில் அவதரித்தவர். அவர் இளமையிலேயே பல கலைகளையும் கற்றுப் பின்னும் வேதாந்த சாஸ்திரங்களைப் பயிலும் பொருட்டுக் காஞ்சி நகரம் சென்ருர்.

அங்கே அவரது பேரறிவைக் கண்ட மற்ற சிஷ்யர்கள் அவரைக் கொல்ல முயன்றனர். எனவே, அவர் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றுவிட்டார். அவர் மக்களுக்கு வைஷ்ணவ மதத்தைப் பற்றிப் போதிக்கலானுர். அதற்கு **விசிஷ்டாத்வைத மதம்** என்ற பெயர் வழங்கி வருகின்றது. அவர் போதனையைக்

கேட்டு அநேகர் அவருடைய சிஷ்யராயினர். வைஷ்ணவர்கள் அவரைத் தங்கள் குருவாகக் கொண்டுள்ளனர். **வானமாமலை, அஹோபிலம்** முதலியன இவர்களது முக்கியமான மடங்கள்.

**ஸ்ரீமத் மத்வர்,** தென் கன்னடம் ஜில்லாவில் **உடுப்பி** என்னும் கிராமத்தில் அவதரித்தார். அவரும் வேதாந்த சாஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி பெற்று ஒரு குருவை நாடித் துறவு பெற்ருர். அவர் போதித்து வந்த மதத்திற்கு **மத்வ மதம்** என்று பெயர். **துவைத மதம்** என்றும் அதைச் சொல்வதுண்டு. மத்வர்கள் விஷ்ணுவையும், ஆஞ்சநேயரையும் பூஜை செய்து வருகின்றனர். **உடுப்பி மடம்** மத்வ மடங்களுள் மிகவும் பிரசித்தி பெற்றது.

**கேள்விகள்**

1. சங்கரர், மத்வர், இராமாநுஜர் இம்மூவரும் யாவர் ?
2. சங்கரர் எங்கே அவதரித்தார் ? அவர் எம்மதத்தைப் பற்றிப் போதனை செய்தார் ?
3. இராமானுஜர் எங்கே அவதரித்தார் ? அவர் போதித்த மதத்தின் பெயர் என்ன ?
4. உடுப்பியில் அவதரித்த பெரியார் யார் ? அவர் மதத்தை அனுசரிப்பவர்களுக்கு என்ன பெயர் ?

# 14. விஜயநகர ராஜ்யம்

பல்லாரி ஜில்லாவில் **ஹம்பி** என்பது ஒரு சிறு கிராமம். அது துங்கபத்திரை நதியின் தென் கரையில் அமைந்துள்ளது. அதனருகே இடிந்து பாழாய்க் கிடக்கும் பல கோயில்கள், கோட்டைகள், மண்டபங்கள் முதலியவற்றை நாம் இன்றைக்கும் காணலாம். பல நூற்றுண்டுகளுக்குமுன் அங்கே ஓரழகிய பட்டணம் இருந்தது. அதற்கு **விஜயநகரம்** என்று பெயர். அந்நகரம், அதே பெயருள்ள ஒரு பெரிய ராஜ்யத்தின் தலைநகராக விளங்கி வந்தது.

அக்காலத்தில் தக்ஷிணத்தின் பல பகுதிகளில் முஸ்லிம் சுல்தான்களின் அதிகாரம் ஓங்கியிருந்தது. இந்துக்கள் யாவரும் தங்களுக்கென்று ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொள்ள முயன்று வந்தனர். அச்சமயம் **ஹரிஹரன், புக்கன்** என்ற இரண்டு சகோதரர்கள், துங்கபத்திரையின் தென் கரையை அடைந்து, அங்கே விஜயநகரத்தை ஏற்படுத்தினர்.

விஜயநகரத்தின் ஒரு புறத்தில் துங்கபத்திரை நதியும், மற்ற மூன்று புறங்களிலும் மலைகளும் காடுகளும் இருந்தன. மேலும் அதைச் சுற்றிலும் உயரமான மதில் சுவர்கள் கட்டப்

பட்டு, ஆழமான அகழிகளும் தோண்டப்பட்டன. ஆகவே, அது பகைவர்கள் எளிதில் பிடிக்கமுடியாதபடி பல இயற்கைப் பாதுகாப்புகளுடன் இருந்து வந்தது.

விஜயநகரத்தைக் கீர்த்தியுடன் ஆண்ட மன்னர் **கிருஷ்ண தேவராயர்**. அவர் காலத்தில் விஜயநகர ராஜ்யம் அநேகமாய்த் தென் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. கிருஷ்ண தேவராயர் ஒரு சிறந்த போர் வீரர்; சிறக்கக் கற்றவர்; கருணையும், பெருந்தன்மையும் வாய்ந்தவர்; தெய்வ பக்தி நிரம்பியவர்.


கிருஷ்ண தேவராயர்

அவர் மைசூர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு அவர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை முதலிய இடங்களை வென்று அவைகளைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அவர், பீஜப்பூர் சுல்தானோடு போர் புரிந்து அவரிடமிருந்து ரெய்ச்சூர்க் கோட்டையைப் பிடித்துக் கொண்டார். அவர், சண்டையில் தோல்வியுற்ற அரசர்களை

மிக்க அன்புடனும், மரியாதையுடனும் நடத்தி வந்தார்.

அவர் காலத்தில், இந்தியாவின் மேற்குக் கரையில் **போர்ச்சுகீசியர்** என்னும் ஐரோப்பிய நாட்டினர் வியாபாரம் செய்து வந்தனர். ராயர் அவர்களிடம் நட்புக் கொண்டார். அவர்களும் ராயருக்குப் பலவிதங்களில் உதவி புரிந்தனர். அவர்களுடைய உதவியைக் கொண்டு தான் அவர் பீஜப்பூர் சுல்தானைத் தோற்கடித்தார்.

கிருஷ்ண தேவராயர் ஒரு சிறந்த் கல்விமான். ஆதலால் அவர் புலவர்களைப் பரிவுடன் ஆதரித்து வந்தார். அவர் சபையில் இருந்த கவிஞர்களுள் **பெத்தண்ணா** என்பவர் முக்கியமானவர். அவர் **மகாபாரதத்தைத்** தெலுங்கு பாஷையில் இயற்றியிருக்கிறார்.

ராயருக்கு நிரம்பிய தெய்வ பக்தி உண்டு. ஆதலால் அவர் அங்கங்கே பல கோயில்களையும், கோபுரங்களையும் கட்டுவித்தார். அவற்றை நாம் இன்றைக்கும் காணலாம். அவர் கட்டிய கோபுரம் ஒன்று காஞ்சீபுரத்தில் இப்பொழுதும் உள்ளது. அதை ஜனங்கள் **ராயகோபுரம்** என்று சிறப்பித்துக் கூறுவர். ராயர் வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்தவர்; பிற மதத்தினரை அன்புடன் நடத்திவந்தார்.

இவையன்றி, ராயர், பொதுஜன நன்மைக்

காகச் செய்த ஏற்பாடுகளும் குறிப்பிடத்தக் கவை. அவர் விவசாய வளர்ச்சிக் காகப் பல ஏரிகளையும் வாய்க்கால்களையும் வெட்டு வித்தார்; பிரயாணிகளுக்கென்று அங்கங்கே சத்திரங்களையும் சாவடிகளையும் கட்டி வைத் தார். அவர் காலத்தில் விஜயநகர ராஜ்யம் பலவகையிலும் சிறந்து விளங்கிற்று.

கிருஷ்ண தேவராயருக்குப் பின்பு வந்த விஜயநகர அரசர்கள் திறமையற்றவர்கள். ஆகவே தக்ஷிண முஸ்லிம் சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விஜயநகர சேனையைத் **தலைக் கோட்டை** சண்டையில் தோற்கடித்தனர். அதற்குப் பிறகு விஜயநகர ராஜ்யம் சீர்குலைந்து அழிந்து போயிற்று.

### கேள்விகள்

1. விஜயநகரம் யாரால் எவ்விடத்தில் ஏற்படுத்தப் பட்டது?
2. விஜயநகர ராஜ்யத்தைக் கீர்த்தியுடன் ஆண்ட மன்னர் பெயரென்ன?
3. கிருஷ்ண தேவராயர் தெய்வ பக்தியுடையவர் என்பதற்கு ஓர் உதாரணம் கூறுக.
4. ராயர் பொதுஜன நன்மைக்காகச் செய்த ஏற் பாடுகள் எவை?
5. விஜயநகர ராஜ்யம் அழிந்ததெவ்வாறு?

# 15. மொகலாய சாம்ராஜ்ய ஸ்தாபனம்—பாபர்

முகம்மது கோரிக்குப் பின் டில்லியை ஆண்ட மன்னர்கள் பலர். அவர்கள் யாவரும் ஒரே வம்சத்தவர் அல்லர் ; பல்வேறு வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக அவர்களை **ஆப்கானியர்** என அழைப்பது வழக்கம். ஆப்கானியர் சுமார் முந்நூறு வருஷங்கள் இந்தியாவை ஆண்டு வந்தனர். அதன்பின் அவர்களது ராஜ்யத்தை **மொகலாயர்** கைப்பற்றிக்கொண்டு ஆண்டு வரலாயினர். மொகலாய அரசர்களுள் முதலரசர் **பாபர்.**

பாபர் மத்திய ஆசியாவில் **பர்க்காணு** என்னும் ஒரு சிறிய நாட்டை ஆண்டு வந்தார். பிறகு அவர் **சாமர்க்கண்டை** வென்று அதற்கு அரசரானார். அதன் பின் அவர் இவ்விரண்டையும் இழந்து கொஞ்ச காலம் நாடு நகரம் இன்றி அலைந்து திரிந்தார். கடைசியில் அவர் ஆப்கானிஸ்தானத்தில் உள்ள **காபூலைக்** கைப்பற்றி, அதை ஆண்டு வரலானார்.

பாபர் இந்தியாவைப் பற்றி அடிக்கடி கேள்விப்பட்டிருந்தார். அங்கே மொகலாய ராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது அவரது ஆசை. அதற்குத் தகுந்த சமயம் ஒன்று அவருக்குக் கிடைத்தது.

அப்போது டில்லியில் **இப்ரஹிம் லோடி** என்பவர் ஆண்டு வந்தார். அவர் நாடாளும் திறமையற்றவர். பாபர் தமது எண்ணத்தை முடித்துக்கொள்ள அதுவே தகுந்த சமயம் என்று கருதினர். ஆகவே, அவர் ஒரு பெரிய சேனையைச் சேகரித்துக் கொண்டு இந்தியா விற்குள் புகுந்தார்.

பாபருக்கும் லோடிக்கும் **பானிபட்** என்னும் இடத்தில் கி. பி. 1526-ம் ஆண்டில் ஒரு கடும் போர் நடந்தது. இதுவே **முதல் பானிப்ட் யுத்த**மாகும். பாபர் இச்சண்டையில் முதல் முதல் பீரங்கிகளை உபயோகித்தார். ஆகவே லோடியின் வீரர்கள் அவைகளைக் கண்டு பயந்து தாறுமாருக ஓடினர். இப்ரஹிம் சண்டையில் உயிர் துறந்தார். பாபர் வெற்றி முழக்கத்துடன் டில்லிக்குள் புகுந்தார்.

பாபர் டில்லிச் சக்கரவர்த்தியானபோது அவருக்கிருந்த விரோதிகள் பலர். ராஜபுத்திரர்கள் இந்து ஆட்சியை மறுபடியும் இந்தியாவில் ஏற்படுத்த எண்ணங் கொண்டனர்.

ஆகவே, அவர்கள் சித்தூரை ஆண்டு வந்த **ராணு சங்கா** என்பவர் தலைமையின் கீழ் பாபரை எதிர்த்தனர். ஆனல் அவர்கள் பாபரின் பீரங்கிகளுக்கு முன் எதிர் நின்று சண்டை செய்ய இயலாமல் **சிக்ரி** என்னும் இடத்தில் தோல்வியுற்றனர். அதன் பின் பாபர்

சாந்தேரியில் இருந்த ராஜபுத்திரக் கோட்டையைக் கைப்பற்றி அதிலிருந்த வீரர்களைத் தம் வாளுக்கு இரையாக்கினர். அதற்குப் பிறகு ராஜபுத்திரர்கள் யாவரும் அடங்கி விட்டனர்.

ஆப்கானியர் டில்லியில் தோல்வியுற்றாலும், பீஹார், வங்காளம் முதலிய நாடுகளில் பலமடைந்திருந்தனர். அவர்களை அடக்கினாலன்றி பாபர் இந்தியாவை அமைதியுடன் ஆள முடியாது. ஆகவே அவர், ஆப்கானியர்கள் மீது படையெடுத்துச் சென்று அவர்களைத் தோற்கடித்தார்.

இவ்வாறு அவர் வட இந்தியாவில் பல பாகங்களை ஜயித்துத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். எனினும் அவைகளை ஒன்று சேர்த்துப் பலப்படுத்துவதற்குமுன் அவர் இறந்துவிட்டார்.

அவர் இறந்த விதம் மிகவும் விந்தையானது. அவருடைய குமாரர் ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டுச் சாகும் தறுவாயில் இருந்தார். அப்போது பாபர் அவரது படுக்கையைச் சுற்றி வந்து தம் குமாரர் உயிருக்குப் பதிலாகத் தம் உயிரை எடுத்துக் கொள்ளும்படியாகக் கடவுளைத் தொழுது வேண்டிக்கொண்டார். அவர் வேண்டிக்கொண்டவாறே அவர் குமாரர் பிழைக்கவும் அவர் உயிர் நீத்தார்.

பாபர் பல உத்தம குணங்கள் நிறைந்த

ஒரு வீர புருஷர்; சண்டையில் பின்வாங்காத வர்; நல்ல தேக பலம் உடையவர்; கருணை நிரம்பியவர். அழகுள்ள பொருள்களில் அவ ருக்கு ஆசை அதிகம். அவர் பாரசீக பாஷை யில் நல்ல தேர்ச்சி பெற்று அதில் கவிபாடும் திறமை பெற்றிருந்தார்.

**கேள்விகள்**

1. ஆப்கானிய அரசர்கள் இந்தியாவை எவ்வளவு காலம் ஆண்டு வந்தனர்?
2. மொகலாய அரசர்களுள் முதலரசர் யார்?
3. 'பானிபட் சண்டை யார் யாருக்கு நடந்தது? அச்சண்டையின் முடிவு என்ன?
4. பாபர், பட்டத்திற்கு வந்ததும் இந்தியாவில் அவருக்கிருந்த முக்கிய விரோதிகள் யார்? அவர்களை பாபர் எப்படி அடக்கினர்?

## 16. அக்பர்

பாபர் இறந்ததும் அவரது மூத்தபிள்ளை **ஹுமாயூன்** பட்டத்திற்கு வந்தார். ஆனல் அவர் தோல்வி யடைந்து இந்தியாவினின்றும் ஓடி விடும்படி நேரிட்டது.

சில வருஷங்கள் சென்றபின் அவர் தாம் இழந்த ராஜ்யத்தை மீண்டும் கைப்பற்றினர். அவருக்குப் பின் அவர் குமாரர் **அக்பர்** சிம்மா சனம் ஏறினர். அப்போது அவருக்கு வயது பதினன்கு. ஆகவே அவரது அத்தை புருஷன்

**பைராம்கான்** என்பவர் அவருக்குப் பதிலாக ராஜ்யத்தை ஆண்டு வந்தார்.

அக்பர் பட்டத்திற்கு வந்தபொழுது அவருக்கிருந்த விரோதிகள் பலர். அவர்களுள் **ஹெமு**



அக்பர்

என்பவர் முக்கியமானவர். ஹெமு வங்காளத்தை ஆண்டுவந்த ஆப்கானிய மன்னனின் முதல் மந்திரி. ஹுமாயூன் இறந்த செய்தியைக் கேள்வியுற்று அவர் டில்லியின் மீது படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றினர். அப்போது அக்பர் டில்லியில் இல்லை. பஞ்சாபில் கலகம் செய்த **சிகந்தர்கான்** என்பவனோடு சண்டையில் ஈடுபட்டிருந்தார்.

தந்தை இறந்த செய்தியைக் கேள்வியுற்று,


அவரும் பைராம்கானும் விரைவில் டில்லியை நோக்கிப் புறப்பட்டனர். இதையறிந்து ஹேமு, அக்பரை எதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்தார்.

இருவருக்கும் **பானிபட்** என்ற இடத்தில் பலமான சண்டை நடந்தது. இதுவே இரண் டாம் **பானிபட் யுத்த**மாகும். ஹேமு வெகு தீரத்துடன் சண்டை செய்தார். எனினும் முடிவில் அவர் போரில் தோல்வியடைந்து உயிரிழந்தார்.

தக்க வயது வந்ததும் அக்பர் ராஜ்யபாரத் தைக் தாமே ஏற்றுக் கொண்டு பைராம்கானை மக்காவிற்கு அனுப்பினர். ஆனல், போகும் வழியில் அவர் விரோதி ஒருவரால் கொலை யுண்டார்.

அக்பர் ஒரு சிறந்த போர் வீரர்; பல நாடு களையும் வென்று தமது ராஜ்யத்தைப் பெருக் கிக் கொள்ள ஆசை கொண்டார். முதல் முதல் அவர் பஞ்சாபை வென்று அதைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். பிறகு வங்காளம், பீஹார், குஜராத், மத்திய மாகா ணம் முதலிய நாடுகளின்மீது படையெடுத்து அவற்றையும் வென்றார்.

அதன்பின் அவர், தம் கவனத்தை ராஜ புத்திர நாடுகளின்மீது செலுத்தினர். அவ ரது வலிமையைக் கண்டு அஞ்சிய ராஜபுத்திர



அக்பரின் சாம்ராஜ்யம்
காபூல்
காந்தஹார்
லாகூர்
மூல்தான்
டில்லி
அயோத்தி
பீஹார்
ராஜபுதனம்
அலகாபாத்
மாளவம்
வங்காளம்
குஜராத்
காண்டேஷ்
பீரார்
அகமதுநகர்
கோல்கொண்டா
அரபிக் கடல்
விஜயநகர ராஜ்யம்
வங்காள விரிகுடா
இந்து மகா சமுத்திரம்

அரசர்கள் பலரும் அவருக்குக் கீழ்படிந்து விட்டனர். ஆனால் **மீவார்** நாட்டை ஆண்டு வந்த ராஜபுத்திரத் தலைவர்கள் மாத்திரம் அவருக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டனர்; சண்டைக்கே தயாராக இருந்தனர். ஆதலால், அக்பர் மீவார் நாடு சென்று **சித்தூர்** கோட்டையை முற்றுகை யிட்டார். ராஜபுத்திர வீரர்கள், கோட்டையைத் தம் முழு பலத்துடன் காத்து வந்தனர். ஆனால் அக்பர் முடிவில் கோட்டையைத் தகர்த்து அதனுள் நுழைந்தார். ராஜபுத்திர வீரர்கள் அனைவரும் ஒருவர் விடாமல் போர் செய்து கொண்டே உயிர் துறந்தனர். ஸ்திரீகள் யாவரும் தீ வளர்த்து அதில் குதித்து உயிர் நீத்தனர்.

அக்பர் பிறகு தக்ஷிணத்தின் மீதும் படையெடுத்துச் சென்றார். அங்கே **ஆமத்** நகரை ஆண்டு வந்த **சாந்த்பீபி** என்னும் வீரப் பெண்மணி மிக்க வீரத்துடன் அக்பரை எதிர்த்துச் சண்டை செய்தாள். முடிவில் ஆமத் நகர் அக்பர் வசமாயிற்று.

புகழ் பெற்ற இந்தியச் சக்கரவர்த்திகளுள் அக்பர் ஒருவர். அவரது ராஜ்யம் வட இந்தியா முழுவதும், தக்ஷிணத்தின் ஒரு பகுதியிலும் பரவியிருந்தது.

அவர், ராஜபுத்திரர்களிடம் நட்புக் கொண்டு அவர்களை மிக்க அன்புடன் நடத்தி

வந்தார். அவர்களும் தங்கள் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்திக்கு உதவி செய்யத் தயாராக இருந்தனர்.

அவரது அரசாங்கத்தில் இந்துக்களும், முஸ்லிம்களும் விரோதம் இன்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்; பெரிய உத்தியோகங்களையும் வகித்து வந்தனர்.

இந்துக்களுள் **ராஜா தோடர்மால், ராஜா மான்சிங்** என்ற இருவரும் முக்கியமானவர்கள். தோடர்மால் நிலங்களை அளந்து வரிகளைத் திட்டம் செய்தார்; மான்சிங், மொகலாயச் சேனைகளுக்குத் தளகர்த்தராயிருந்து அரசருக்கு உதவி செய்தார். முஸ்லிம்களுள் **அபுல் பாஸல்** என்பவர் முக்கியமானவர். அவர் ஒரு சிறந்த கல்விமான்; அரசருக்கு உயிர்த் துணைவராயிருந்து ராஜ்யத்தை நடத்துவதற்கு உதவி புரிந்தார்.

அக்பர் மதத் துவேஷம் இல்லாதவர். இந்துக்களுக்கு விதித்திருந்த **ஜஸியா** என்னும் வரியை அவர் நீக்கிவிட்டார். இத்தகைய நற்காரியங்களினால் அவர் என்றைக்கும் அழியாப் புகழை அடைந்தார். இவரைப் போன்ற மொகலாய அரசர் இவருக்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை.

**கேள்விகள்**

1. அக்பருக்கிருந்த விரோதிகளில் எவர் முக் கியமானவர்?

2. இரண்டாம் பானிபட் யுத்தம் யார் யாருக்கு நடந்தது? அதன் முடிவு என்ன?

3. அக்பர் ஜயித்த நாடுகள் எவை?

4. அக்பர் மதத் துவேஷம் இல்லாதவர் என்ப தற்கு ஓர் உதாரணம் கூறுக.

5. ராஜா தோடர்மால், ராஜா மான்சிங் இவ்விரு வர்களைப் பற்றிக் குறிப்பு எழுது.

# 17. ஔரங்கசீப்

அக்பருக்குப் பின் அவர் மைந்தர் ஜஹாங் கீர் அரசரானர். அவர் இறந்ததும் அவர் குமா ரர் **ஷாஜஹான்** பட்டம் வகித்தார். ஷாஜ ஹானுக்கு நான்கு பிள்ளைகளிருந்தனர். தந்தை இருக்கும்போதே அவர்கள் ஒவ்வொரு வரும் தாமே பட்டத்திற்கு வர ஆசை கொண்டு ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வந்தனர்.

மூத்தவனே பட்டத்திற்கு உரியவன். ஆயி னும், மூன்றும் பிள்ளையாகிய **ஔரங்கசீப்** ராஜ்யத்தை அடைய எண்ணங் கொண்டார்; முடிவில் அவர் தம் சகோதரர்களை வென்று டில்லிச் சக்கரவர்த்தி ஆனர்.


அவரிடம் பல சிறந்த குணங்கள் இருந்து வந்தன. அவர், சக்கரவர்த்தியாயினும் ஆடம் பரம் சிறிதும் இல்லாமல் நடந்து வந்தார். தம்

கடமையைச் செய்வதில் ஊக்கமுடையவர். இஸ்லாம் மதத்தின் கொள்கைப்படி அவர் தாமே வேலை செய்து பணம் சம்பாதித்தார். அரசாங்கத்திலிருந்து ஒரு காசுகூட அவர் தம் சொந்தச் செலவிற்கு எடுத்துக் கொள்ள வில்லை.

தக்ஷிணத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் வடபகுதியைச் சார்ந்திருந்த நாடு **மகாராஷ்டிரம்** எனப்படும். அதில் வாழ்ந்த மக்களான மராட்டியர் ஔரங்கசீப்புக்குத் துன்பம் கொடுத்து வந்தனர். அவர்களின் தலைவரான **சிவாஜி** மொகலாய ராஜ்யத்தைச் சேர்ந்த தக்ஷிணத்தின் பல பாகங்களைப் பிடித்துக் கொண்டார். சிவாஜியை அடக்க ஔரங்கசீப் எவ்வளவோ முயன்றும் ஒன்றும் பயன்பட வில்லை. கடைசியில் அவர் ஒரு பெரிய சேனையை திரட்டிக் கொண்டு தாமே தக்ஷிணத் திற்குள் புகுந்தார்.

அப்போது தக்ஷிணத்தில் பல சிறு ராஜ்யங்கள் இருந்து வந்தன. அவற்றுள் பீஜப்பூர் என்பது ஒன்று. அது ஒரு முஸ்லிம் ராஜ்யம். ஔரங்கசீப் அதன்மீது படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றினர். பிறகு கோல் கொண்டா என்ற மற்ருெரு ராஜ்யத்தையும் ஜயித்துத் தம் வசப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் மராட்டியர்களோடு சண்

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS



டைக்குச் சென்ருர். அப்போது சிவாஜி இறந்து விட்டார். ஆதலால் அவர் சுலபமாக அவர்களை அடக்கி விட்டார். அவருடைய சாம்ராஜ்யம் வடக்கே இமய மலையிலிருந்து தெற்கே காவிரி நதி வரையில் பரவி யிருந்தது.

இக்காரியங்களைச் செய்து முடிக்கப் பல வருஷங்கள் ஆயின. ஆகவே டில்லியிலிருந்தவர்கள் தங்களிஷ்டம் போல் ராஜ்யத்தை ஆள ஆரம்பித்தனர். நாடெங்கும் கலகமும் குழப்பமும் அதிகரித்தன.

ஔரங்கசீப் மரணமடைந்த பின் மொகலாய ராஜ்யம் க்ஷீண தசையை அடைந்து கடைசியில் சீர்குலைந்து போயிற்று.

### கேள்விகள்

1. ஔரங்கசீப் எப்படிப் பட்டத்திற்கு வந்தார்?
2. தக்ஷிணத்தில் அவருக்குத் துன்பம் கொடுத்தவர் யார்? எப்படி?
3. ஔரங்கசீப்பிடம் இருந்த சில நற்குணங்களைக் கூறுக.

# 18. சிவாஜி

தக்ஷிணத்தின் வடமேற்குப் பகுதி நாட்டை **மகாராஷ்டிரம்** என்று கூறுவர். மகாராஷ்டிரம் மலைகளும் குன்றுகளும் அடர்ந்த ஒரு கரடுமுரடான நாடு. அங்கு வாழ்ந்த மராட்டியத்தலைவர்கள் பல கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அவற்றுள் வசித்து வந்தார்கள்.

மராட்டியர் மலைவாசிகளாதலால் நல்ல தேக ப்லமும் தைரியமும் பொருந்தியவர்கள்; குதிரைச் சவாரியில் நிகரற்றவர்; சண்டை செய்வதில் கைதேர்ந்தவர்; ராஜதந்திரங்களிலும் நிபுணர்.



சிவாஜி

சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன் அவர்களிடையே **சிவாஜி** என்ற ஒரு பெரிய வீரர் தோன்றினார். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது; என்றாலும் நுட்பமான புத்தி யுள்ளவர். அவர் சிறு வயதிலேயே ராமாயண,

மகாபாரதக் கதைகளை ஊக்கத்துடன் கேட்டு வந்தார். அவற்றில் கூறியுள்ள வீரர்களைப் போல் தாமும் விளங்க வேண்டும் என்று ஆசை கொண்டார்.

அக்காலத்தில் முஸ்லிம் சுல்தான்கள் தக்ஷிணத்தின் பல பகுதிகளில் பலமடைந்திருந்தனர். அவர்களை அடக்கி இந்துக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே சிவாஜியின் நோக்கம்.

மகாராஷ்டிரத்திற்கு அருகிலுள்ளது பீஜப்பூர். அதன் சுல்தான் சிவாஜியின்மீது கோபம் கொண்டு அவரை அடக்கி வர **அப்ஸல்கான்** என்னும் ஒரு சிறந்த போர் வீரரை அனுப்பினர். ஆனல் சிவாஜி, அவ்வீரரைத் தந்திரமாகக் கொன்ருர்.

இதுவன்றி, சிவாஜி மொகலாய ராஜ்யத்தைச் சேர்ந்த தக்ஷிணத்திலுள்ள நாடுகளைத் தாக்கினர். ஆதலால் ஔரங்கசீப் அவரைத் தண்டித்து வரும்படி **ஷெயிஸ்டகான்** என்னும் போர்வீரரை ஒரு பெரும் சேனையுடன் தக்ஷிணத்திற்கு அனுப்பினர். ஆனல் ஷெயிஸ்ட கான் உயிர் தப்புவதே அரிதாயிற்று. அதன் பின் மொகலாய மன்னர் சிவாஜியைத் தந்திரமாக டில்லிக்கு வரவழைத்துச் சிறைப்படுத்தினர். சிவாஜி தந்திரத்திலும் பின்வாங்கியவர் அல்லர். அவர், காவலாளிகள் தம்மை

அறியாவண்ணம், பழக்கூடை ஒன்றினுள் ஒளிந்து கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

சிவாஜி, பீஜப்பூர் அரசருக்குரிய பல மலைக் கோட்டைகளைப் பிடித்துக் கொண்டு அவற்றைத் தம் வசமாக்கிக் கொண்டார். அவற்றுள் **தோர்ணு, புரந்தரம்** என்பவை முக்கியமானவை. கடைசியில் அவர் தெற்கு நோக்கிச் சென்று அங்குள்ள **செஞ்சி, வேலூர்** முதலிய் கோட்டைகளையும் பிடித்துக் கொண்டார்.

அவர், கி. பி. 1674-ம் ஆண்டில் **ராஜகரம்** என்னும் கோட்டையில் விமரிசையாக முடி சூட்டிக்கொண்டு சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயரை வகித்தார். மராட்டியர் ஒற்றுமை இன்றித் தனித்தனியே வாழ்ந்து வந்தனர். சிவாஜி மன்னர் அவர்களை ஒன்று சேர்த்து மராட்டிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினர்.

அரசாட்சி முறைகளிலும் சிவாஜி கை தேர்ந்தவர். அவர் தமது ராஜ்யத்தை மூன்று பெரிய பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன் றுக்கும் ஒரு பிரதிநிதியை நியமித்தார். பிறகு ராஜ்ய காரியங்களைக் கவனிக்க எட்டு மந்திரி கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ் வொருவரும் நாட்டிற்குரிய ஒவ்வொரு முக்கிய மான வேலையைச் செய்து வந்தனர்.

சிவாஜிக்குப் பிறகு வந்த அரசர்கள்

அவரைப்போல் அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் அல்லர். ஆதலால் சகல அதிகாரமும் **பீஷ்வா** என்ற பட்டம் வகித்த பிரதம மந்திரி கையில் வந்து விட்டது. நாளடைவில் பீஷ்வாவின் அதிகாரமும் குறைந்து பல மராட்டியத் தலைவர்கள் தங்களுக்குள் தனி ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

## கேள்விகள்

1. மராட்டியர் வசித்து வந்த நாட்டிற்கு என்ன பெயர்?
2. மாராட்டியர்கள் எப்படிப்பட்டவர்கள்?
3. சிவாஜி கைப்பற்றிய சில கோட்டைகளின் பெயர்களை எழுது.
4. சிவாஜி சிறையினின்றும் எப்படித் தப்பி ஓடினார்? அவர் தமது ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்ய என்ன ஏற்பாடுகளைச் செய்தார்?
5. சிவாஜிக்குப் பிறகு சகல அதிகாரமும் யார் வசம் வந்து விட்டது? ஏன்?

# 19. ஐரோப்பிய வர்த்தகர்கள்

**ஐரோப்பியர்கள்** தொன்றுதொட்டு இந்தியர்களோடு வியாபாரம் செய்து வந்ததாகத் தெரியவருகிறது. இந்தியாவில், முத்து, பட்டு, இலவங்கம் முதலிய பொருள்கள் மிக அதிகம். இப்பொருள்கள் ஐரோப்பாவில் கிடைப்பதில்லை. ஆகவே, ஐரோப்பியர் இந்தியாவிலிருந்து இச்சரக்குகளைப் பெற்றுக்கொண்டு, அவற்றிற்கு ஈடாகப் பொன், வெள்ளி, கண்ணாடி முதலிய சாமான்களை இங்கே அனுப்பி வந்தனர்.

நாளடைவில் அவர்களது வியாபார மார்க்கங்களைத் துருக்கியர் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே ஐரோப்பியர்களுக்கு இந்தியச் சரக்குகள் கிடைப்பது அரிதாயிற்று. அவர்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரக் **கடல் மார்க்கம்** ஒன்றைக் கண்டுபிடிக்க ஆவல் கொண்டனர்.

கடைசியில் **வாஸ்கோட காமா** என்னும் போர்ச்சுகீஸிய மாலுமி இம்மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். அவர் கடல் வழியாக ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள **கள்ளிக் கோட்டைக்கு** வந்து சேர்ந்தார். **கள்ளிக்**

கோட்டை அரசரான **சாமொரின்** என்பவர் அவரை வரவேற்று, அவருக்கு அங்கே வியா பாரம் செய்ய அனுமதியும் கொடுத்தார்.

அதன் பின் **போர்ச்சுகீஸியர்** இந்தியாவில் பல வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள், மேற்குக் கரையிலுள்ள **கோவா, டையூ, டாமன்** என்பவை முக்கியமானவை.

நாளடைவில் இதர ஐரோப்பிய நாட்டினரும் இந்தியாவிற்கு வந்து வியாபாரம் செய்யத் துணிந்தனர். அவர்களுள் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் முக்கியமானவர்கள். ஆங்கிலேயர்கள் கி. பி. 1600-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஒரு வர்த்தகச் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு வியாபாரம் செய்யும் பொருட்டு இந்தியாவிற்கு வந்தனர். இச்சங்கத்திற்குக் **கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம்** என்பது பெயர்.

ஆங்கிலேயர் முதல் முதல் பம்பாய்க்கு அருகிலுள்ள **சூரத்** என்னும் இடத்தில் தங்கள் வியாபாரத்தைத் தொடங்கினர்கள். அதன்பின் அவர்கள் கிழக்குக் கரையில் தங்களுக்கென்று வியாபாரம் செய்ய ஓர் இடம் அவசியம் என்பதை உணர்ந்தனர். ஆகவே அவர்கள் சந்திரகிரி அரசனிடமிருந்து **சென்னையை** விலைக்கு வாங்கி, அங்கே ஒரு கோட்டையைக்

கட்டிக் கொண்டனர். இக்கோட்டைக்குச் **செயின்ட் ஜார்ஜ் கோட்டை** என்று பெயர்.

நாளடைவில் ஆங்கிலேயர் இந்தியாவில் வேறு சில முக்கியமான இடங்களிலும் தங்கள் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள் **பம்பாய், கல்கத்தா** முதலியன முக்கியமானவை. சென்னையைப்போல் கல்கத்தாவிலும் ஆங்கிலேயர் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர். அதற்கு **வில்லியம் கோட்டை** என்று பெயர். ஆங்கிலேயர்கள் வந்தவுடன் போர்ச்சுகீஸியரின் வியாபாரம் வீழ்ந்தது; அவர்களது செல்வாக்கும் குறைந்தது.

**பிரெஞ்சுக்காரரும்** ஆங்கிலேயரைப் போல் இந்தியாவில் வியாபாரம் செய்து இலாபம் பெற எண்ணங்கொண்டனர். ஆகவே அவர்கள் **புதுச்சேரி, மாகி, சந்திரநாகூர்** முதலிய இடங்களில் பண்டகசாலைகளை ஏற்படுத்திக்கொண்டு வியாபாரம் செய்துவந்தனர். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பல விஷயங்களில் அடிக்கடி போர்கள் ஏற்பட்டன. முதன் முதல் பிரெஞ்சுக்காரரின் அதிகாரம் இந்தியாவில் ஓங்கியிருந்தது. நாளடைவில் அது குறைந்து ஆங்கிலேயர் அதிகாரம் ஓங்கிற்று.

**கேள்விகள்**

1. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

2. இந்தியாவில் போர்ச்சுகீஸியருக்குச் சொந்த மான வியாபார ஸ்தலங்கள் எவை?

3. ஆங்கிலேயருக்குச் சென்னை எவ்வாறு கிடைத் தது? அவர்களது பண்டகசாலைகளுள் முக்கியமானவை எவை?

4. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் எங்கெங்கே வர்த்தக சாலைகளை அமைத்துக் கொண்டனர்?

# 20. ராபர்ட் கிளைவ்

ஆங்கிலேயர்கள் முதல் முதல் இந்தியா விற்கு வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் வந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர்கள் பல பிரதேசங்களை வென்று அரசாள ஆரம் பித்தனர். சமீபகாலம் வரை இந்தியா முழுவ தும் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்தியாவில் ஆங்கில அரசாட்சிக்கு விதை ஊன்றியவர் **ராபர்ட் கிளைவ்** என்னும் ஓர் ஆங்கில வீரர். அவரைப்பற்றி இப்பாடத்தில் தெரிந்து கொள்வோம்.

கிளைவ் இங்கிலாந்தில் ஓர் ஏழைக் குடும் பத்தில் பிறந்தவர். அவர் சிறு வயதில் அடங் காமல் அதிக தொந்திரவு கொடுத்ததால் அவரது தந்தை அவரைக் கிழக்கு இந்தியக் கம்பெனி

யாரிடம் குமாஸ்தா வேலைக்கு அனுப்பி விட்டார்.

அப்போது தக்ஷிணத்தின் தென் பகுதி யானகர்நாடகத்தை **அன்வாருத்தீன்** என்னும் ஒரு நவாபு ஆண்டு வந்தார். அவர் இறந்ததும் புதுச்சேரியிலிருந்து வந்த பிரெஞ்சு கவர்னரான **டூப்ளே, சந்தா சாகிப்** என்னும் ஒருவரை அதற்கு நவாபாக நியமித்தார். ஆனால் அன்வாருத்தீனுக்கு **முகம்மது அலி** என்ற ஒரு புதல்வர் இருந்தார். அவர் கர்நாடகம் தமக்கே உரியது என்று ஆக்ஷேபித்தார். ஆகையால் சந்தா சாகிப் பிரெஞ்சுக்காரர் உதவியைக் கொண்டு அவரோடு போர் புரிய நேர்ந்தது.



ராபர்ட் கிளைவ்

முகம்மது அலி அவர்களுக்குப் பயந்து திருச்சிராப்பள்ளிக்கு ஓடி அங்குள்ள மலைக் கோட்டையில் ஒளிந்துகொண்டார். திருச்சிக் கோட்டை அக்காலத்தில் தென் இந்தியாவிலிருந்த மலைக்கோட்டைகளுள் மிக்க வலிமையுள்ளது; பகைவர்கள் எளிதில் பிடிக்க முடி


யாதபடி அமைந்திருந்தது. அதனுல்தான் முகம்மது அலி அங்கே ஒளிந்துகொண்டார்.

ஆனுல் சந்தா சாகிப் பிரெஞ்சுக்காரரோடு சேர்ந்துகொண்டு அதை முற்றுகையிட்டார். ஆகவே, முகம்மது அலி ஆங்கிலேயரின் உதவியை நாடினுர். அவர்களும் பிரெஞ்சுக் காரரின் அதிகாரத்தைக் குறைக்க எண்ணி அதற்கு உடன்பட்டனர்.

அப்போது கிளைவ் நவாபின் முக்கிய பட்டணமான **ஆற்காட்டைப்** பிடித்துக் கொள்ளும்படி சென்னை கவர்னருக்கு ஆலோசனை சொன்னுர். அப்படிச் செய்தால், முகம் மது அலியைக் காப்பாற்றிச் சந்தா சாகிப் பையும் அடக்கிவிடலாம் என்பது அவரது கருத்து. சென்னை கவர்னரும் கிளைவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அவரிடம் ஒரு சேனையைக் கொடுத்து, ஆற்காட்டைப் பிடித்துக் கொள்ளும்படி உத்தரவிட்டார்.

கிளைவ், தம் சிறு சேனையுடன் ஆற்காடு சென்று அங்கிருந்த கோட்டையை வெகு சுலப மாகக் கைப்பற்றிவிட்டார். இதையறிந்த சந்தா சாகிப், ஒரு பெருஞ் சேனையுடன் தம் மகன் **ராஜா சாகிப்பை** ஆற்காட்டிற்கு அனுப்பி னுர். ஆனுல் ராஜா சாகிப் தோல்வியடைந்தார்.

அதன் பின் ஆங்கிலேயர், முகம்மது அலிக்கு உதவி செய்யும் பொருட்டுத் திருச்




கிளைவ் காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யம்

சிக்கு ஒரு சேனையை அனுப்பினர். பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தனர். சந்தா சாகிப் கைதியாக்கப் பட்டுக் கொலையுண்டு போனர். முகம்மது அலி கர்நாடக நவாபாக ஆனர். அதன் பிறகு தென் இந்தியாவில் பிரெஞ்சு அதிகாரம் வீழ்ந்தது; ஆங்கில அதிகாரம் ஓங்க ஆரம்பித்தது.

ஆற்காட்டுச் சண்டைக்குப் பிறகு கிளைவின் கீர்த்தி நாடெங்கும் பரவியது. அவரை ஜனங்கள் **ஆற்காட்டு வீரன்** என்று அழைத்து வந்தனர். அவர் வங்காளத்திலும் ஆங்கில அதிகாரத்தை நிலைநாட்ட ஆசை கொண்டார். அப்போது வங்காளத்தை **சுராஜ்-உத்-தௌலா** என்னும் ஒரு நவாபு ஆண்டுவந்தார். அவர் ஆங்கிலேயரிடம் பகைமை கொண்டார்.

ஆகவே, கிளைவ் அவரோடு போர் புரிந்து அவரைப் **பிளாஸி** என்னுமிடத்தில் நடந்த போரில் தோற்கடித்து வங்காளத்திற்கு வேருெரு நவாபை நியமித்தார். அதன் பிறகு ஆங்கிலேயர்களது அதிகாரம் வங்காளத்தில் ஓங்கலாயிற்று. கிளைவ் வங்காளத்திலிருந்து ஓர் ஆங்கில சேனையை அனுப்பி **வட சர்க்கார்** பிரதேசத்தை வென்ருர்.

அப்போது **வங்காளம்** மொகலாய ராஜ்யத்தில் அடங்கி யிருந்தது. கிளைவ் மொகலாய மன்னரிடம் ஓர் உடன்படிக்கையைச் செய்து

கொண்டார். அதன்படி ஆங்கிலேயர்களுக்கு **வங்காளம், பீஹார், ஒரிஸா** முதலிய மாகாணங்களில் வரி வசூல் செய்யும் உரிமை கிடைத்தது. அதன்பிறகு கிளைவ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுக் கம்பெனி ஆட்சியில் சில முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் இங்கிலாந்திற்குச் சென்றபோது ஆங்கிலேயர் அவரைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

### கேள்விகள்

1. கிளைவை அவர் தந்தை ஏன் இந்தியாவிற்கு அனுப்பிவிட்டார்?
2. முகம்மது அலி திருச்சிக் கோட்டையில் ஒளிந்து கொண்டதன் காரணம் என்ன?
3. சந்தா சாகிப்பை அடக்குவதற்குக் கிளைவ் என்ன உபாயம் செய்தார்?
4. ஆற்காட்டுச் சண்டைக்குப் பிறகு தென் இந்தியாவில் யார் அதிகாரம் ஓங்கிற்று? எவர் அதிகாரம் வீழ்ந்தது?
5. மொகலாய மன்னரிடமிருந்து ஆங்கிலேயர் பெற்ற உரிமை யாது?
6. இந்தியாவில் ஆங்கில அரசாட்சிக்கு விதை ஊன்றியவர் யார்?

# 21. வாரன் ஹேஸ்டிங்ஸ்

கிளைவுக்குப் பிறகு வங்காள கவர்னராக இருந்தவர்களுள் **வாரன் ஹேஸ்டிங்ஸ்** என்பவர் முக்கியமானவர். அவர் இந்தியாவுக்கு வந்து கிழக்கு இந்தியக் கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். அவர் தமது புத்தியினுலும், திறமையினுலும் பெரிய பதவிகளைப் பெற்றுக் கடைசியில் வங்காள கவர்னர் ஆனுர்.



வாரன் ஹேஸ்டிங்ஸ்

அவர் கவர்னர் பதவியை ஏற்றவுடன், கம்பெனி ஆட்சியில் சில முக்கியமான சீர் திருத்தங்களைச் செய்து முடித்தார். ஆங்கிலேயர் வங்காளம், பீஹார், ஒரிஸா முதலிய மாகாணங்களில் வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றனர் என்று முன்பு படித்தோம். அவ்வுரிமையை அளித்தவர் மொகலாய மன்னர். ஆனுல் கம்பெனியார் தாமே நேரில் வரி வசூல் செய்ய வில்லை; சுதேச அதிகாரிகள் மூலமாகவே வரி வசூல் செய்துவந்தனர்.

அதனால் கம்பெனியாருக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டன. ஆகவே, வாரன் ஹேஸ்டிங்ஸ், கம்பெனியார் தாமே வரி வசூல் செய்ய வேண்டும் என்று திட்டம் செய்தார். அவர் மேற்கூறிய மூன்று மாகாணங்களையும் பல ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கலெக்டர் என்ற ஓர் அதிகாரியை நியமித்தார். வரி வசூல் செய்வதே கலெக்டரது முக்கிய வேலை. இதுவன்றி அவர் ஜமீன்தார்கள், குடியானவர்களைத் துன்புறுத்தாவண்ணம் பல சிறந்த ஏற்பாடுகளையும் செய்தார்.

மேலும் அவர் வழக்குகளில் நியாயம் வழங்குவதற்கு ஆங்காங்கே பல நீதி ஸ்தலங்களை ஏற்படுத்தினர். இவற்றிற்கெல்லாம் மேலாகக் கல்கத்தாவில் ஓர் உயர் நீதி ஸ்தலத்தையும் அமைத்தார். இந்து முஸ்லிம் சட்டங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து அவற்றை வெளியிட்டார்.

அதன்பின் அவர் **கவர்னர் ஜெனரல்** என்ற பதவியை வகித்து ஆங்காங்கே ஏற்பட்ட கலகங்களை அடக்குவதில் முனைந்தார். ஒரு சமயம் மொகலாய மன்னர் மராட்டியருடன் சேர்ந்துகொண்டு, ஆங்கிலேயருக்கு விரோதமாகத் திரும்பினர். ஆதலால் ஹேஸ்டிங்ஸ் அவருக்குரிய நாடுகளை அவரிடமிருந்து பிடுங்கி அயோத்தி நவாப்புக்குக் கொடுத்தார்.

வருஷந்தோறும் அவருக்குக் கொடுத்துவந்த ஏராளமான பணத்தையும் நிறுத்திவிட்டார். ஆங்கிலேயர் தமக்குச் செய்த இந்த உதவிக் காக அயோத்தி நவாப்பு, கம்பெனியாருக்குச் சில உரிமைகளை அளித்தார்.

பிறகு ஹேஸ்டிங்ஸ், இமயமலைப் பிரதே சத்தில் வாழ்ந்த **ரோகிலர்** என்ற ஒரு வகுப் பினருடன் போர் புரிந்து அவர்களையடக்கி நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர். இதற் குள் ஆங்கிலேயர்க்கும் மராட்டியர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டது. அதிலும் ஆங்கிலேயர் களே வெற்றி பெற்றனர். அதனால் கம்பெனி யாருக்கு பம்பாய்க்கு அருகிலுள்ள **சால்செட்** என்ற தீவு கிடைத்தது.

அப்போது மைசூர் நாட்டை **ஹைதர் அலி** என்ற சுல்தான் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் தென் இந்தியாவில் கம்பெனியாருக்குச் சொந்தமான நாடுகளைப் பிடித்தார். ஆகவே, ஹேஸ்டிங்ஸ் பல போர்களில் அவரைத் தோற் கடித்தார். அதன் பிறகு நாட்டில் அமைதி ஏற்பட்டது.

இப்போர்களை நடத்தி முடிக்க ஹேஸ்டிங் ஸுக்கு ஏராளமான பணம் வேண்டியிருந்தது. ஆகவே அவர் பல தனவந்தர்களை வற்புறுத்தி யும், பயமுறுத்தியும் பணம் வாங்க வேண்டிய தாயிற்று. அதற்காக அவர் இங்கிலாந்தில்

பெரிதும் குற்றம் சாட்டப்பட்டார். எனினும் அவர் கம்பெனியின் நலத்தைக் குறித்து அப்படிச் செய்தாரேயன்றி, சுயநலங் கருதி ஒன்றும் செய்யவில்லை. ஆதலால் இந்தியாவைச் சிறப்பாக ஆண்டு வந்த கவர்னர் ஜெனரல்களில் அவரும் ஒருவர்.

### கேள்விகள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் வரி வசூல் சம்பந்தமாகச் செய்த சீர்திருத்தம் என்ன ?
2. நியாயம் வழங்குவதற்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த ஏற்பாடுகள் யாவை ?
3. மொகலாய மன்னர் தமக்குரிய நாடுகளை எப்படி இழக்க நேர்ந்தது ?
4. அயோத்தி நவாப்பு ஆங்கிலேயருக்கு எப்படிக் கடமைப் பட்டவர் ஆனர் ?
5. கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்குச் சால்செட் எப்படிக் கிடைத்தது ?
6. இந்து முஸ்லிம் சட்டங்களை ஆராய்ந்து பார்த்து அவற்றை வெளியிட்டவர் யார் ?

# 22. மைசூர் சுல்தான்கள்

மைசூர் என்பது தக்ஷிணத்தில் உள்ள ஒரு சுதேச ராஜ்யம். அதைச் சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் **ஹைதர் அலி** என்ற முஸ்லிம் அரசர் ஆண்டு வந்தார். அவரது சரித்திரத்தை இங்கு படிப்போம்.

ஹைதர் அலி மைசூரையடுத்த மலை நாட்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அவர் போர் செய்வதில் சமர்த்தர்.

அப்போது மைசூரை ஆண்டு வந்த மன்னர் ஹைதரைத் தம் சேனையில் ஓர் போர் வீரராக அமர்த்திக் கொண்டார். ஹைதர் மிகுந்த சாமர்த்தியசாலி. சீக்கிரத்தில் அவர் வீரர்களுக்குள் சிறந்து விளங்கி, பட்டாளத்தில் ஒரு பெரிய பதவியைப் பெற்றார்.

அரசர் அவரது வீரத்தைக் கண்டு மெச்சி, அவரைத் திண்டுக்கல் கோட்டைக்கு அதிபதியாக்கினார். ஹைதர் அக்கோட்டையை மிகத் திறமையுடன் பாதுகாத்து வந்ததால் அரசருக்கு அவரிடம் அளவு கடந்த பிரியம் ஏற்பட்டது. மைசூர் அரசர் திடீரென்று இறந்துபோகவே ஹைதர் அலி மைசூரைக் கைப்பற்றிக் கொண்டு அதற்குத் தாமே அரசரானார்.

ஹைதர் தமது ராஜ்யத்தைத் திறமை யுடன் ஆண்டுவந்தார். குற்றம் செய்தவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார். அவர் தந்திரசாலி ; தமக்கு எழுதப் படிக்கத் தெரியா விடினும், தமது உத்தியோகஸ்தன் ஒருவனை விட்டு எழுதச் சொல்வார். பிறகு அதையே வேறொருவனை விட்டுப் படிக்கச் சொல்லித் தெரிந்து கொள்வார். ஏதாவது பிசகிருந்தால் எழுதியவனைக் கடுமையாகத் தண்டிப்பார். ஆகவே அவர் கீழிருந்த உத்தியோகஸ்தர் பலரும் அவருக்குப் பயந்து, தங்கள் வேலையைச் சரிவரச் செய்து வந்தனர்.

ஹைதர் கர்நாடகத்தின்மீது படையெடுத்துச்சென்று காஞ்சிபுரம், பரங்கிப்பேட்டை முதலிய இடங்களைத் தாக்கினர். அதன்பின் அவர் ஆற்காட்டையும் கைப்பற்றிக் கொண்டார். அப்போது வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்திதியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் ஹைதரோடு போர் புரிந்து அவரைப் பல இடங்களில் தோற்கடித்தார்.

ஹைதர் இறந்ததும் அவர் குமாரர் **திப்பு சுல்தான்** மைசூர் அரசரானர். அவர் தம் தந்தையைப்போல் அல்லாமல் நன்ருக எழுதப் படிக்கத் தெரிந்தவர். அவர் இஸ்லாம் மதத்தில் பற்றுள்ளவர்.

திப்பு சுல்தானும் ஆங்கிலேயர்மீது

பகைமை கொண்டவர். அப்பொழுது கவர்னர் ஜெனரல் பதவியை வகித்து வந்த வெல்லெஸ்லி பிரபு மிக்க திறமை வாய்ந்தவர். அவர் மைசூர் நாட்டின்மீது படையெடுத்துச் சென்று திப்புவைத் தோற்கடித்தார். திப்பு போரில் உயிர் துறந்தார்.



திப்பு

வெல்லெஸ்லி மைசூர் நாட்டின் சில ப்பாகங்களை ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் இணைத்து விட்டு, மிகுந்த பகுதிகளை ஒன்ருய்ச் சேர்த்து ஒரு சிறு ராஜ்யமாக ஆக்கினர். அவர் அந்த ராஜ்யத்தைப் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒப்புவித்து ஆண்டுவரச் செய்தார்.

### கேள்விகள்

1. மைசூர் நாட்டை ஆண்டுவந்த இரண்டு முஸ்லிம் அரசர்கள் யார்?
2. ஹைதர் அலி எவ்விதம் மைசூர் அரசர் ஆனர்?
3. ஹைதரின் உத்தியோகஸ்தர்கள் அவரைக் கண்டு ஏன் நடுங்கினர்கள்?
4. ஆங்கிலேயருக்கும் ஹைதருக்கும் சண்டை ஏற்பட்ட காரணம் யாது?
5. திப்பு சுல்தான் யார்? அவர் ஆங்கிலேயருடன் செய்த யுத்தத்தின் முடிவு என்ன?

# 23. வெல்லெஸ்லி பிரபு

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாக வந்தவர்களுள் **வெல்லெஸ்லி** முக்கியமானவர். அவர் இந்தியாவுக்கு வந்த போது இங்கே கம்பெனியாரின் நிலைமை மோசமாக இருந்தது. அப்போது மைசூர் நாட்டை ஹைதரின் புதல்வர் திப்பு சுல்தான் ஆண்டு வந்தார்.




வெல்லெஸ்லி பிரபு

திப்பு சுல்தான் ஆங்கிலேயரிடம் பகைமை கொண்டவர். ஆதலால் அவர் பிரெஞ்சுக்காரர்களுடன் நட்புக்கொண்டு இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார்.

மராட்டியர்கள் தக்ஷிணம், மத்திய இந்தியா, வட இந்தியா முதலிய பல பாகங்களில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். அவர்களும் ஆங்கிலேயரிடம் பகைமை கொண்டனர். மேலும் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியாகிய **நெப்போலியன்** இந்தியாவின்மீது படையெடுத்து வரப் போவதாகவும் ஒரு பயம் இருந்து வந்தது.

வெல்லெஸ்லி பிரபு இந்தியாவில் ஆங்கில

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAY 1956
MADRAS



அரசாட்சியை நிலைநாட்டுவதற்குப் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். அவர் சுதேச மன்னர்கள் ஒவ்வொருவரையும் கம்பெனியாருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினார். அதற்குத் **துணைப்படைத் திட்ட உடன்படிக்கை** எனப் பெயர்.

அதன்படி கம்பெனியார் அவர்களது ராஜ்யங்களைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவதாக வாக்களித்தனர். அதற்குப் பதிலாக அவர்கள் தம் நாடுகளில் ஆங்கிலேயச் சைனியங்களை வைத்துக் கொள்ள வேண்டும்; அவற்றின் பாதுகாப்புச் செலவுக்காகக் கம்பெனியாருக்குப் பணம் கொடுக்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டு நடக்க வேண்டும். கம்பெனியார் அனுமதியின்றி, அவர்கள் பிற மன்னர்களோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது. இவையே துணைப்படைத் திட்ட உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள்.

முதன் முதல் தக்ஷிணத்தில் ஹைதராபாத் நாட்டை ஆண்டு வந்த **நிஜாம்** அரசர் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். அவர் ஆங்கிலச் சேனையின் நிர்வாகத்திற்குக் **கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர்** முதலிய ஜில்லாக்களைக் கம்பெனியாருக்குக் கொடுத்தார். ஆகவே, அவைகளுக்குக்

"**கொடை ஜில்லாக்கள்**" என்ற பெயர் ஏற்பட்டது. ஆனால் மராட்டியர்கள் இவ்வுடன்பாட்டிற்குச் சம்மதிக்கவில்லை. ஆதலால் வெல்லெஸ்லி அவர்களோடு போர் தொடுக்க நேர்ந்தது. அவர் மராட்டியத் தலைவர்களைப் பல போர்களில் தோற்கடித்து, உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்.

வெல்லெஸ்லி **மைசூர்** மன்னர் திப்புசுல்தானோடு போர் செய்தார். திப்பு சுல்தான் ஆங்கிலேயரை வெகு தீரத்துடன் எதிர்த்துப் போர் புரிந்தார்; எனினும், கடைசியில் தோல்வியடைந்து சண்டையில் உயிர் துறந்தார். வெல்லெஸ்லி அவரது ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படுத்தினர்; எஞ்சிய பகுதிக்கு மைசூர் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை அரசராக நியமித்தார். அதன்பின் அவர் **கர்நாடகம், தஞ்சாவூர்** முதலியவற்றைக் கைப்பற்றி அவைகளை ஆங்கில ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

இவ்வித ஏற்பாடுகளினால் இந்தியாவில் ஆங்கில ஆட்சி பலமடைந்தது; நாட்டில் கலகங்கள் அடங்கி எங்கும் அமைதி ஏற்பட்டது. கிளைவ் இந்தியாவில் ஆங்கில அரசாட்சிக்கு விதை ஊன்றினர்; வெல்லெஸ்லி அதை நன்கு வளரச் செய்தார்.

**கேள்விகள்**

1. வெல்லெஸ்லி, சுதேச மன்னருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பெயர் என்ன? அதை முதல் முதல் ஏற்றுக்கொண்ட அரசர் யார்?

2. வெல்லெஸ்லி மைசூர் மன்னரோடு ஏன் போர் தொடுத்தார்? அதன் முடிவு என்ன?

3. துணைப் படைத் திட்ட உடன்படிக்கையின் அம்சங்கள் யாவை?

4. வெல்லெஸ்லி பிரபுவின் முக்கிய நோக்கம் என்ன?

5. "கொடை ஜில்லாக்கள்," ஆங்கிலேயருக்கு எவ்வாறு கிடைத்தன? அவைகள் யாவை? அவைகளுக்கு அப்பெயர் வருவானேன்?

# 24. பெண்டிங்கும், ராஜாராம் மோகனராயும்

வெல்லெஸ்லிக்குப் பிறகு இந்தியாவை ஆண்ட கவர்னர் ஜெனரல்களுள் **வில்லியம் பெண்டிங்கு** என்பவர் முக்கியமானவர். அவர், ஏற்கெனவே இந்தியாவில் சென்னைக் கவர்னர் பதவி வகித்திருந்ததால், இந்திய விஷயங்களைப் பற்றி நன்கு அறிந்தவர். புதிய ராஜ்யங்களை வென்று இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை விருத்தி செய்ய அவர் ஆசைப்படவில்லை. இந்திய மக்கள் பலரும் முன்னேற்றம் அடைந்து சுகமாக வாழவேண்டும் என்பதே

அவரது முக்கிய நோக்கம். அதற்காக அவர் பெரிதும் பாடுபட்டு வந்தார்.

முதல் முதல் பென்டிங்கு பிரபு அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்து, வருமானத்தை அதிகப்படுத்திஞர். அதன் பிறகு அவர் அரசியல் சம்பந்தமான சில சீர்திருத்தங்களைச் செய்தார். இதுவரையில் ஜில்லாக் கலெக்டர்கள் வரிவசூல் செய்யும் தொழில் ஒன்றை மாத்திரம் செய்து வந்தனர். இப்பொழுது அவர்கள் சிறிய கிரிமினல் வழக்குகளையும் விசாரணை செய்யவேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

அதற்குப் பின் பென்டிங்கு சமூக சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்யலுற்ருர். அக்காலத்தில் இந்துக்களிடம் **சககமனம்** அல்லது **உடன்கட்டையேறல்** என்ற ஒரு பழக்கம் இருந்து வந்தது. அதன்படி கணவன் இறந்ததும், அவன் மனைவியும் அவனுடன் இறக்க வேண்டும்; அவளை உயிரோடு வைத்து எரித்து விடுவார்கள்.

சில மாதர்கள், தம் கணவர் இறந்ததும் உயிர்வாழ மனமில்லாதவராய் உடன்கட்டை ஏறினர். ஆனல் பெரும்பாலோர், தப்ப வழியில்லாமல், மனமின்றித் தங்கள் உயிரை இழக்க நேரிட்டது. பென்டிங்கு பிரபு இக்கொடிய வழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்று

தீர்மானித்தார். இது விஷயத்தில் அவருக்கு **ராஜாராம் மோகனராய்** என்பவர் பெரிதும் உதவி செய்தார்.

ராஜாராம் மோகனராய் வங்காளத்தில் பிறந்த ஓர் அந்தணர். வேத சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்து கற்றவர்; ஆங்கில மொழியிலும் நல்ல தேர்ச்சி அடைந்தவர். கடவுள் ஒருவரே என்பதும் கடவுளுக்கு உருவம் கிடையாது என்பதும் அவரது உறுதியான நம்பிக்கை. உடன்கட்டை ஏறுதல் சாஸ்திர சம்மதம் இல்லாதது என்று பலரும் அறிய அவர் எடுத்துக் காட்டினார்; அங்கங்கே சென்று பிரசாரமும் செய்தார்.

பென்டிங்கு பிரபு மோகனராய் சொன்னதை ஏற்றுக் கொண்டார்; உடன்கட்டை ஏறல் ஒரு கொடிய குற்றம் என்றும், கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறுவதற்குத் துணை செய்பவர் எல்லாருக்கும் கடுந்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவு பிறப்பித்தார். நாளடைவில் இப்பழக்கம் இந்தியாவில் அடியோடு ஒழிந்து விட்டது.

இதுவன்றி பென்டிங்கு பிரபு மற்றொரு சிறந்த காரியத்தைச் செய்து முடித்தார். வெகு காலமாக இந்தியாவில் **தக்கர்கள்** என்ற ஒரு கொடிய கொள்ளைக் கூட்டத்தார் வசித்து வந்தனர். பென்டிங்கு பிரபு அவர்களை ஒழிப்பதற்

கென்று ஒரு தனி இலாகாவை ஏற்படுத்திஞர். அதைச் சேர்ந்தவர்கள் தக்கர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்குக் கொடிய தண்டனை விதிக்கச் செய்தனர். சின்னுட்களில் இக் கொள்ளைக் கூட்டம் அறவே ஒழிந்து, நாடெங் கும் அமைதி ஏற்பட்டது.

கல்வி அபிவிருத்திக்கும் கவர்னர் ஜெனரல் பாடுபட்டு வந்தார். அவரது சபையில் **மெக் காலே** என்ற ஓர் அங்கத்தினர் இருந்தார். அவர் இந்தியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டும் என்று யோசனை சொன்ஞர். கவர் னர் ஜெனரல் அதை ஏற்றுக்கொண்டு, ஆங் கிலம் கற்பிக்க அங்கங்கே பல கலாசாலைகளை ஏற்படுத்திஞர்.

மேலும் அவர் அப்போது அரசாங்க மொழியாயிருந்த பாரசீக மொழியை நீக்கி, அந் தந்த மாகாணங்களில் வழங்கிவரும் மொழி களையே உபயோகிக்கும்படி உத்தரவிட்டார். ஆங்கிலம் அரசாங்க மொழியாயிற்று. இத் தகைய நற்காரியங்களிஞல், அவர் ஜனங் களின் அன்பைப் பெற்று, இந்திய கவர்னர் ஜெனரல்களில் மிகவும் சிறந்தவர் எனப் பெய ரெடுத்தார்.

### கேள்விகள்

1. பென்டிங்கு பிரபுவின் நோக்கம் என்ன ?
2. உடன்கட்டை ஏறல் என்ருல் என்ன? அதை பென்டிங்கு பிரபு எவ்வாறு ஒழித்தார்?
3. தக்கர்கள் யார்? அவர்கள் ஒழிந்ததெவ்வாறு?
4. அரசியல் சம்பந்தமாக பென்டிங்கு செய்த சீர் திருத்தம் என்ன ?
5. ராஜாராம் மோகன ராய் என்பவர் யார்? அவரது முக்கிய கொள்கைகள் யாவை?

## 25. விக்டோரியா மகாராணி யார்ரின் சாஸனம்

இங்கிலாந்து தேசத்தை அரசு புரிந்தவர்களுள் **விக்டோரியா** என்னும் அரசியார் ஒருவர். விக்டோரியா மகாராணியார் இளமையிலேயே கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றுப் பலரும் புகழும்படி சிறந்து விளங்கிஞர். அவர், நற்குணமும் பெருந்தன்மையும் வாய்ந்தவர்.

அப்பொழுது இந்தியாவைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்டு வந்தனர். அவர்களது ஆட்சியிலிருந்த பல குறைபாடுகளிஞல் இந்திய ராணுவக் கலகம் ஏற்பட்டது. ஆதலால் மகாராணியார் இந்திய ஆட்சியைத் தாமே ஏற்றுக் கொண்டு **"இந்திய சக்கரவர்த்தினி"** என்ற பட்டப் பெயரையும் வகித்தனர்.

அவர் இந்திய அரசியலை ஏற்றுக் கொண்ட வுடன், ஒரு அறிக்கைப் பத்திரிகை வெளியிட்



விக்டோரியா மகாராணி

டார். அதை ராணியாரின் **மகா சாஸனம்** என்று சிறப்பித்துக் கூறுவது வழக்கம். அவர் அதில், "இந்திய மக்களின் சுகவாழ்வே ஆங்கில ஆட்சியின் முக்கிய நோக்கம். மத சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடுவதில்லை. இந்திய மன்னர்களின் சுதந்திரமும், உரிமைகளும் பாதுகாக்கப்படும். சந்ததி இல்லாத சுதேச அரசர்கள் சுவீகாரம் செய்து கொள்ளலாம். ஜாதிமத வித்தியாசம் இன்றி அவரவர்களின் அறிவிற்கும் திறமைக் கும் தக்கபடி இந்திய அரசாங்கத்தில் உத்தி

யோகங்கள் அளிக்கப்படும்" என்று தெரிவித் திருந்தார். அதனுல் இந்தியர்கள் யாவரும் அவரைப் புகழ்ந்து கொண்டாடினுர்கள்.

அதற்குப்பின் இந்திய அரசியலில் சில முக்கிய மாறுபாடுகள் ஏற்பட்டன. இந்திய விஷயங்களைக் கவனிக்க இங்கிலாந்து அரசாங்க மந்திரி சபையில் ஒரு மந்திரி நியமிக்கப் பட்டார். அவருக்கு **இந்தியக் காரியதரிசி** என்ற பெயர் வழங்கலாயிற்று. அவருக்கு ஆலோசனை கூற "இந்தியா கவுன்ஸில்" என்ற ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதில் இந்திய விஷயங்களில் நல்ல அனுபவமுள்ள பதினைந்து அங்கத்தினர் இருந்தனர். இந்திய கவர்னர் ஜெனரலுக்கு **இராஜப் பிரதிநிதி** அல்லது **வைசிராய்** என்ற பட்டம் அளிக்கப் பட்டது. அவர் இந்தியக் காரியதரிசிக்கு உட் பட்டு இந்தியாவில் அரசியலை நடத்தவேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

**கேள்விகள்**

1. விக்டோரியா மகாராணியாரின் குணுதிசயங்கள் யாவை?

2. விக்டோரியா மகாராணியார் இந்திய அரசியலைத் தாமே ஏற்றுக் கொண்டதன் காரணம் என்ன?

3. இந்திய மக்கள் யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படி மகாராணியார் வெளியிட்டிருக்கும் மகா சாஸனம் என்ன?

4. மகாராணியார் காலத்தில் இந்திய அரசாட்சி எவ்வித மாறுதல்களை அடைந்தது?

# 26. வைஸ்ராய் காலத்து இந்தியா—I

விக்டோரியா மகாராணியார் காலத்தில் இந்திய கவர்னர் ஜெனரலுக்கு **வைசிராய்** என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அவரை இராஜப்பிரதிநிதி என்றும் அழைத்து வந்தனர் என்பதை முன்பு கூறினேம். அதன்படி **கானிங் பிரபு** என்பவர் முதன் முதல் வைசிராயாக நியமிக்கப்பட்டார். அவர் இந்தியர்களை மிகவும் அன்பாக நடத்தினர். நாட்டில் அமைதியை நிலைநாட்டினர். இந்தியர்கள் அவரைக் **கருணை மிகுந்த கானிங்** என்று புகழ்ந்து பாராட்டி வந்தனர்.

கானிங்குக்குப் பிறகு வந்த இராஜப்பிரதிநிதிகள் பலர். அவர்களுள் **ரிப்பன் பிரபு** என்பவர் ஒருவர். அவரைப்பற்றி நாம் அறிய வேண்டியது அவசியம். பெண்டிங்கு பிரபுவைப் போல் அவரும் இந்திய மக்களின் முன்னேற்றத்தில் கருத்துக்கொண்டு அதற்காகப் பாடுபட்டு வந்தார். முதன்முதல் அவர் இறக்குமதிச் சாமான்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளை நீக்கி உப்பு வரியையும் குறைத்தார். அதனுல் நாட்டில் வியாபாரம் வளர்ந்து ஏழை மக்கள் சுகமடைந்தனர். அதன்பின் அவர்

நாட்டில் கல்வி பரவும்பொருட்டுப் பல ஏற்பாடு களைச் செய்தார்.

அவர் காலத்தில் இந்தியாவில் பல தொழிற் சாலைகள் ஏற்பட்டிருந்தன. அவற்றை நடத்தி வந்த அதிகாரிகள் இரக்கம் இன்றிச் சிறுவர் களை நெடுநேரம் வேலை செய்யும்படி வற்புறுத்தி வந்தனர். இக்கொடிய பழக்கத்தை நிறுத்த எண்ணி ரிப்பன் பிரபு ஒரு சட்டத்தை இயற்றி னார். அதன்படி தொழில் தலைவர்கள் சிறுவர் களிடமிருந்து தினம் ஒன்பது மணி நேரந் தான் வேலை வாங்கலாம் என்று ஏற்பாடா யிற்று.

ரிப்பனது ஆட்சியில் கல்வியில் தேர்ச்சி அடைந்த இந்தியர்கள் பலர் வசித்து வந்தனர். அவர்கள் அரசாங்க வியவகாரங்களில் தங்க ளுக்கு அதிகாரம் வேண்டும் என்று விரும்பி னர். ரிப்பன் பிரபு அவர்கள் விரும்பியதை நியாயம் என உணர்ந்து அதற்கு வேண்டி யதைச் செய்யலுற்றார். அவர், **கார்ப்பொ ரேஷன், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு** முதலியவற்றை ஏற்படுத் திக் கொள்ளும் உரிமையை மக்களுக்குக் கொடுத்தார்; பிறகு அச்சபைகளின் மூலமாகக் கல்வி, போக்கு வரவு, சுகாதாரம் முதலிய சௌகரியங்களைத் தாங்களே செய்துகொள்ள அதிகாரமும் அளித்தார். இந்த அதிகாரத்தை

**ஸ்தல ஆட்சிச் சட்டத்தின்படி மக்கள்** அடைந்தனர்.

இத்தகைய நற்காரியங்களைச் செய்ததனால் இந்திய மக்கள் யாவரும் அவரைப் பெரிதும் புகழ்ந்து போற்றினார்கள். இப்பொழுது சென்னையிலிருக்கும் நகர பரிபாலனச் சபைக் கட்டடம் அவரது பெயராலேயே வழங்கி வருகிறது. அவரது உருவச்சிலை ஒன்றும் அங்கே அமைக்கப்பட்டுள்ளது.

ரிப்பன் பிரபுவிற்குப் பிறகு வைசிராயாக வந்தவர்களுள் **கர்ஸன் பிரபு** என்பவர் முக்கியமானவர். அவர் வடமேற்கு இந்தியாவிலுள்ள பல சிறு ராஜ்யங்களை ஒன்றாய்ச் சேர்த்து அவற்றை ஒரு தனி மாகாணமாகச் செய்தார். அது **எல்லைப்புற மாகாணம்** என வழங்கி வருகிறது. மேலும் அவர் ஆப்கானியத் தலைவரோடு நட்புப் பாராட்டி அவருக்கு வேண்டிய உதவிகளையும் செய்து வந்தார். இந்த ஏற்பாடுகளினால் **இந்திய** அரசாங்கத்தாருக்கு அயல் நாட்டினரின் பயம் இல்லாமல் இருந்தது.

இவையன்றி அவர் உள்நாட்டில் செய்த சீர்திருத்தங்களும் புகழத்தக்கவை. அவர், சொற்ப நிலத்தையுடைய ஏழை மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவும் படி, அரசாங்கத்தில் பல **கூட்டுறவுச் சங்கங்**

**களை** ஏற்படுத்தினர் ; நாட்டில் உயர்தரக் கல்வி பரவும் பொருட்டுக் கலாசாலைகளை யெல்லாம் சீர்திருத்தினர் ; பஞ்சத்திலிருந்தும், கொள்ளை நோயிலிருந்தும் மக்களைக் காப்பாற்றப் பல ஏற்பாடுகளைச் செய்தார். நம் நாட்டிலுள்ள புராதனக் கோயில்கள், கட்டடங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கு ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தினர். இந்த ஏற்பாடு சரித்திர ஆராய்ச்சி செய்பவர்களுக்கு மிக்க சௌகரியமாக இருந்து வருகிறது.

கர்ஸன் வைசிராயாக இருந்தபொழுது **விக்டோரியா மகாராணியார்** காலமானர். பிறகு **ஏழாம் எட்வர்டு** சக்கரவர்த்திப் பதவியைப் பெற்ருர்.

**கேள்விகள்**

1. ரிப்பன் பிரபு எந்த வரியைக் குறைத்தார் ?
2. ரிப்பன் பிரபுவை, பென்டிங்கு பிரபுவோடு எந்த விஷயத்தில் ஒப்பிடலாம் ?
3. தொழிற்சாலை சம்பந்தமாக ரிப்பன் பிரபு இயற்றிய சட்டம் என்ன ?
4. அரசாங்க விஷயமாய் ரிப்பன் இந்தியர்களுக்கு அளித்த உரிமைகள் யாவை ?
5. சென்னை நகரவாசிகள் ரிப்பனிடம் தங்களுக்கிருந்த அன்பை எவ்விதம் காட்டியுள்ளனர் ?
6. இந்தியப் பாதுகாப்பின் பொருட்டுக் கர்ஸன் செய்த ஏற்பாடுகள் யாவை ?
7. உள்நாட்டில் கர்ஸன் பிரபு செய்த சீர்திருத்தங்கள் எவ்வாறு புகழத்தக்கவை ?

# 27. வைஸ்ராய் காலத்து இந்தியா—II

கர்ஸன் பிரபுவிற்கு அடுத்தபடி **மின்டோ பிரபு** வைசிராயாக வந்தார். அவர் காலத்தில் **இந்தியக் காங்கிரஸ் மகா சபை** மிகவும் பலமடைந்திருந்தது. இச்சபையார் குடிகளிடத்தில் தேசீய உணர்ச்சியை விருத்தி செய்து கொண்டு வந்தனர். இந்தியர்களுக்கு அரசாங்க உரிமைகள் அளிக்கப்படவேண்டும் என்பதே அவர்களது முக்கிய நோக்கம்.

மின்டோ பிரபு அவர்களது கோரிக்கையைக் கூடியமட்டில் நிறைவேற்ற எண்ணங் கொண்டார். அப்போது **மார்லி பிரபு** என்பவர் இந்தியக் காரியதரிசியாக இருந்தார். மின்டோ பிரபு அவரோடு கலந்துகொண்டு அரசியல் சம்பந்தமாகச் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவைகள் **மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள்** என வழங்குகின்றன. அவற்றின்படி சட்ட சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு அரசாங்க விஷயங்களைப்பற்றி அரசாங்கத்தாருடன் கலந்து பேசவும், ஆலோசனை சொல்லவும் உரிமைகள் ஏற்பட்டன.

மின்டோ பிரபுவிற்குப் பிறகு வந்தவர் **ஹார்டிஞ்சுப் பிரபு.** ஏழாம் எட்வர்டு கால மானதும் சக்கரவர்த்தியான **ஐந்தாம் ஜார்ஜ்** அவருடைய மனைவியார் **மேரி** ராணியாருடன் இந்தியாவிற்கு விஜயம் செய்து டில்லியில் முடி சூட்டிக் கொண்டார். அப்பொழுது முதல் **டில்லியே** இந்தியாவின் தலைநகராக விளங்கி வருகிறது. அதுவரை கல்கத்தா தலைநகரா யிருந்தது. ஹார்டிஞ்சு காலத்தில் ஐரோப்பா வில் ஆங்கிலேயருக்கும் ஜெர்மானியருக்கும் ஒரு பெரிய •யுத்தம் நடந்தது. அதற்கு **ஐரோப்பிய மகா யுத்தம்** எனப் பெயர். அந்த யுத்தத்தில் இந்தியர்கள் ஆங்கிலேய ருக்கு ஏராளமான பொருள் கொடுத்து உதவி ஞர்கள்; ஆட்களையும் அனுப்பிஞர்கள். முடிவில் ஆங்கிலேயர் ஜெர்மானியரைத் தோற்கடித்து விட்டனர்.

ஹார்டிஞ்சு பிரபுவிற்குப் பிறகு **செம்ஸ் பர்ட் பிரபு** இந்திய கவர்னர்–ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இப்பொழுது இந்தியாவில் அரசியல் விஷயமாக ஒரு கிளர்ச்சி இருந்து வந்தது. **பால கங்காதர திலகரும், பெஸன்ட் அம்மையாரும்** இந்தியருக்குச் சுயராஜ்யம் வேண்டுமென்று வாதித்துச் 'சுய ராஜ்யச் சங்கத்தை' ஏற்படுத்திக் கொண்ட னர். ஆதலால் இங்கிலாந்து அரசாங்கத்தார்

இந்திய விஷயங்களை அறிந்துவரும் பொருட்டு **மான்டேகு** பிரபுவை இங்கே அனுப்பினர்.



பெஸன்ட் அம்மையார்

ஏனெனில் அவரே அப்போது இந்தியக் காரிய தரிசியாக இருந்தவர்.

அவரும் செம்ஸ்பர்ட் பிரபுவும் இந்தியா வைச் சுற்றிப் பார்த்து விஷயங்களை நன்கு ஆராய்ச்சி செய்தனர். அதன் பிறகு இந்திய அரசியல் சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்றப் பட்டது. அதன்படி மாகாணச் சட்டசபையின் அங்கத்தினர்கள் சிலர் அமைச்சர்களாக நிய மிக்கப்பட்டனர். அரசாங்கத்தார் அவர்க

ளிடம், நிர்வாகம் செய்யச் சில இலாக்காக்களை ஒதுக்கிக் கொடுத்தனர். மந்திரிகள் அவைகளை நடத்தும் உரிமையைப் பெற்றுர்கள்.



மகாத்மா காந்தி

ஆயினும் இச்சீர் திருத்தங்கள் இந்தியர்களுக்குப் போதுமான உரிமைகளை அளிக்கவில்லை. அச்சமயம் **மகாத்மா காந்தி** என்னும் பெரியார், குடிகளின் தலைவராய் முன் வந்து நின்று தேசத் தொண்டு புரியலானுர்.



பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு

நாளடைவில் அரசாங்கத்தார் இந்தியர்களுக்கு மேன்மேலும் பல உரிமைகளை வழங்கினர். 1935-இல் ஓர் **இந்திய அரசாங்கச் சட்டம்** நிறைவேறியது. அதன்படி இந்தியர்களுக்கு அரசாங்க விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிகமான அதிகாரம் கிடைத்தது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி நம் நாடு பூர்ண சுதந்திரம் அடைந்தது. **பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு** இந்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரி ஆனார். ஸர்தார் படேல், மௌலானா ஆஜாத் போன்ற அரும் பெரும் தலைவர்கள் மந்திரிகளாயிருந்து இந்திய அரசியல் நிர்வாகத்தை நடத்தத் தொடங்கினார்கள்.

முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் தமக்குத் தனிநாடு வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தார்கள். அவர்களின் தலைவர் **முகம்மது அலி ஜின்னா**. அவருடைய பெரு முயற்சியால் இந்தியாவின் வடமேற்கில் **மேற்கு பாகிஸ்தானமும்**, வடகிழக்கில் **கிழக்கு பாகிஸ்தானமும்** ஒதுக்கிவிடப் பட்டிருக்கிறது. பாகிஸ்தானின் தலைநகரம் **கராச்சி.**



சக்கரவர்த்தி
ராஜகோபாலாசாரியார்

1948-ஆம் ஆண்டு ஜூன் மாதம் கவர்னர் ஜெனரலாயிருந்த **மாண்ட்பாட்டன் பிரபு** விலகிக்கொண்டார். பிறகு **சக்கரவர்த்தி**


ராஜகோபாலாசாரியார் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாயிருந்தார்.

**கேள்விகள்**

1. மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள் யாவை?
2. செம்ஸ்பர்ட் பிரபுவின் ஆட்சியில் இந்திய அரசியல் எவ்விதம் மாறுதல் அடைந்தது.
3. முதல் இந்திய கவர்னர் ஜெனரல் யார்?

## 28. இந்தியக் குடியரசு


1950-ஆம் வருடம் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி முதல் இந்தியா ஒரு குடியரசு நாடு ஆகி



ஸ்ரீ ராஜேந்திர பிரசாத்

விட்டது. பொதுஜன ஆதரவினால் நம் நாட்டுப் பெரியார்களில் ஒருவரான ஸ்ரீ ராஜேந்திர

**பிரசாத்** அவர்கள் முதல் **குடியரசுத் தலைவ ராக** தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு உதவியாக மந்திரிகள் அடங்கிய ஒரு நிர்வாக சபையும், இரண்டு சட்டசபைகளும் ஏற்பட் டிருக்கின்றன.




நிர்வாகத்தின் சௌகரியத்திற்காக நம் நாடு பல ராஜ்யங்களாகப் பிரிக்கப் பட்டிருக் கிறது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தலைவராக **கவர்னர்** ஒருவர் இருக்கிருர். பொது மக்க

ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின் ஆதரவைப் பெற்ற தலைவர்கள் மந்திரிகளாக இருந்து அரசியலை நடத்துகிறார்கள்.

ஒவ்வொரு ராஜ்யத்தையும் பல ஜில்லாக் களாகப் பிரித்திருக்கின்றனர். அவை ஒவ் வொன்றையும் **கலெக்டர்** என்ற உத்தியோகஸ் தர் பரிபாலித்து வருகிறார். கலெக்டர்கள் யாவரும் தங்கள் ராஜ்ய கவர்னருக்கு அடங் கியவர்கள்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் பல தாலுக்காக் கள் அடங்கியுள்ளன. தாலுக்காவின் முக்கிய உத்தியோகஸ்தருக்குத் **தாசில்தார்** என்று பெயர். கிரிமினல் வழக்குகளை **ஸப் மாஜிஸ்ட் ரேட்** என்பவர் விசாரணை செய்து வருகிறார். அவர்கள் அனைவருக்கும் ஜில்லா கலெக்டரே தலைவர். இப்போது நம் சென்னை இராஜ்யத் தில் ஸப்மாஜிஸ்ட்ரேட்டுகள் நியாய இலாகா விற்கு உட்பட்டவர்கள்.

ஒரு தாலுக்கா பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத் துக்கும் ரெவின்யூ **இன்ஸ்பெக்டர்** என்ற ஒரு தலைவர் உண்டு. அவர் தாசில்தாருக்குட் பட்டவர்.

பல கிராமங்கள் சேர்ந்து ஒரு வட்டார மாகும். கிராம அதிகாரிக்கு **மணியக்காரர்** என்று பெயர். கிராம வியவகாரங்கள் அனைத்

தையும் அவரே கவனித்து வருகிறார். இது விஷயத்தில் பஞ்சாயத்துச் சபை அவருக்குப் பெரிதும் உதவி புரிந்து வருகின்றது. மணியக்காரர் யாவரும் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அடங்கி நடக்கவேண்டும். இவ்வாறாக நம் நாட்டின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

நாம் வசித்து வரும் இந்தப் பாரத தேசம் நமது தாய்நாடு. அதை நாம் **பாரதத் தாய்** என்றும் **பாரத தேவி** என்றும் சிறப்பித்துக் கூறுகின்றோம். நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக நாம் எல்லோரும் ஒற்றுமையாயிருந்து பாடுபடவேண்டும்.

**கேள்விகள்**

1. இந்தியக் குடியரசு எப்போது ஏற்பட்டது?
2. அரசாங்க நிர்வாக அதிகாரிகளை வரிசையாய் எழுது.

CONNEMARA PUBLIC LIBRARY
7-MAY 1956
MADRAS